விசாரணைகளுக்கு
மனதார
பான் கீ - மூன்
உதவ வேண்டும்

பக்கம் 12

உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

சுடர்: 29 கதிர்: 202 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 2, திங்கள் 16.06.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

28°C

தெளிவான வானிலை
கடற்கரைப் பகுதிகளில் சில வேளைகளில் பலத்த காற்று வீசக்கூடும்

சிங்கள குடியேற்றம் நேற்று உறுதியானது குடாநாட்டில்

நாவற்குழியில் அத்துமீறி காணி பிடித்தோருக்கு உறுதிகள் அமைச்சர் வீரவன்ஸவால் வழங்கப்பட்டன

அமைச்சரின் யாழ். வருகை குறித்த மேலதிக செய்திகள் 4 ஆம் பக்கத்தில்

காணி உறுதிகளை வழங்குகின்றார் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 16

நாவற்குழியில் குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கான காணி உறுதிகளை வழங்கி, யாழ்ப்பாணத்தில் சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்து - உறுதி செய்தார் அமைச்சர் விமல்வீரவன்ஸ. இந்தக் காணிகள், காணிக் கச்சேரி எதுவும் நடத்தப்படாமலேயே தேசிய வீடமைப்பு அதிகார சபையால் சிங்கள மக்களுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

யாழ். குடா நாட்டில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 14 ஆயிரத்து 500 குடும்பங்கள் வரையில்தமக்கு காணிதேவை என்று வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ள நிலையில், அநுராதபுரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த சிங்கள மக்களுக்கான காணி உறுதிக

20 ஆம் பக்கம் பார்க்க

வடக்கில் மனித உரிமை நிலை மோசம்

கொழும்பு, ஜூன் 16

இலங்கையின் வடக்குப் பகுதியில் மனித உரிமைகள் நிலை தொடர்ந்தும் கவலையளிப்பதாகவே உள்ளது என்று தெரிவித்துள்ளார் பிரிட்டனின் சமூக, உள்ளூராட்சி மற்றும் வெளிவிவகாரப் பணியக மூத்த இணையமைச்சர் பரோனஸ் வர்சி.

கடந்த புதன்கிழமை பிரிட்டன் நாடாளுமன்றத்தின் பிரபுக்கள் சபையில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார்.

"பிரிட்டனின் இந்தக் கவலை தொடர்பாக ஜெனிவாவில் உள்ள பிரிட்டன் தூதரகம், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருடன் தொடர்ச்சியான தொடர்புகளை பேணி வருகிறது. மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுவது, சிறுபான்மை மதத்தினர் மற்றும்

20 ஆம் பக்கம் பார்க்க

வெளிநாட்டு தலையீட்டை முறியடிப்போம்

கொழும்பு, ஜூன் 16

வெளிநாடுகளின் தலையீட்டை முறியடிப்பதற்கு இணைந்து பாடுபட வேண்டும் என்று கோரியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பொலிவியா நாட்டுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி அங்கு நடைபெற்ற சந்திப்பொன்றின்போதே இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

மேலதிக தகவல் 5 ஆம் பக்கத்தில்

அநுராதபுரத்திலிருந்து இரணைமடுவுக்கு நீர்

இன்னும் 4 ஆண்டுகளில் வருமாம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

4 ஆண்டுகளின் பின்னர் அநுராதபுரத்தில் இருந்து இரணைமடுவுக்குத் தண்ணீர் கொண்டுவரப்படும். அங்கிருந்து குடாநாட்டுக்கும் அது விரிவுபடுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார் விசேட கருத்திட்டல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன.

புத்தூரில் நேற்று இடம்பெற்ற விவசாயிகளுக்கான காப்புறுதி இழப்பீடு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"கடந்த கால அரசுகளைப் போன்று எங்களுடைய அரசு வாக்குறுதிகளை வழங்கவில்லை. ஆனால் மக்களுக்கு செய்ய வேண்டியவற்றைச் செய்து கொண்டிருக்கிறது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஊடாகப் பல நலத்திட்டங்கள் மக்களுக்காக செய்யப்படுகின்றன. முக்கியமாக யாழ். மாவட்டத்துக்கு பல திட்டங்கள் இன்னும் மேற்கொள்ளப்படவுள்ளன.

மக்களுக்காக சேவையாற்றும்போது எந்த மட்டங்களில் இருந்து சேவையாற்றுகிறோம் என்று கருத முடியாது.

20 ஆம் பக்கம் பார்க்க

ஐ.நாவில் சாட்சியமளிப்போருக்கு எதிராகக் கடும் நடவடிக்கையாம்

எதிரிக்கு தகவல் வழங்குவோரென அச்சுறுத்துகிறது அரசு

கொழும்பு, ஜூன் 16

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவுக்கு சாட்சியங்களை வழங்குபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது இலங்கை அரசு.

20 ஆம் பக்கம் பார்க்க

கடலில் மூழ்கி இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

சம்பில்துறை கடலில் குளிக்கச் சென்ற இரு இளைஞர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் லட்சன் (வயது 17) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். பொன்னாலை வடக்கு சுழிபுரம் பகுதியைச் சோந்த கேதீஸ்வரன் றிக்ஸன் (வயது 17) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

20 ஆம் பக்கம் பார்க்க

சாட்சியமளிப்போர் குறித்து ஐ.நா. கரிசனை கொள்ளும்

மனித உரிமைகள் சபையின் பேச்சாளர் ருபேட் கொல்வி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவிடம் சாட்சியமளிப்பவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்பட்டு விடக் கூடாதென்பதிலும், அவர்கள் பழிவாங்கப்படக் கூடாது என்பதிலும் ஐ.நா. மனித உரிமைகள் சபை கவனமாக இருக்கின்றது என்று தெரிவித்

20 ஆம் பக்கம் பார்க்க

தமிழ் மக்களின் கழுத்தை நெரிக்கும் செயற்பாட்டையே அரசு செய்கின்றது

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் காட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

தமிழ் மக்களுக்கும், வடக்கு மாகாண சபைக்கும் அதிகாரங்களை வழங்கியுள்ளோம் என்று சர்வதேசத்துக்குக் கூறும் இலங்கை அரசு, நடைமுறையில் தமிழ் மக்களின் கழுத்தை நெரிக்கும் செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகிறது. அவற்றின்மூலம் தமிழ் மக்களுக்கும் தாம் எதையும் செய்யப்

20 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வலலாய் மக்கள் போராட்டத்துக்கு தமிழ் கட்சிகள் ஆதரவு வழங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 16

வலலாய் மக்கள் தம்மை சொந்த இடத்தில் மீள்குடிய மர்த்துமாறு கோரி இன்று மேற்கொள்ளும் கவனவீர்ப் புப் போராட்டத்துக்கு அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப் புக்கள் என்பன தமது ஆத ரவை வெளிப்படுத்தியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஏற்பாட்டில், கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன் பாக இன்று காலை 8 மணி முதல் 11 மணி வரை கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெ டுக்கப்படவுள்ளது.

வலலாயிலிருந்து இடம்பெ யர்ந்து நலன்புரி நிலையங் களில் வசிக்கும் மக்கள், தமது காணிகளில் மீளக்குடியமர்த்து மாறு கோரி இந்தப் போராட் டத்தை முன்னெடுக்கின்றனர். தமது காணிகளை தற்போது இராணுவத்தினர் துப்புரவு செய்து வருகின்றனர் என்றும் அதில் வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலை யங்களில் தங்கியுள்ளவர்களை மீள்குடியேற்ற நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருவ தாகவும் காணியின் உரிமை யாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே எமது காணிகளை எம்மிடம் பெற்றுத் தாருங்கள் என்று கோரி காணி உரிமை யாளர்கள் போராட்டத்தை முன் னெடுக்கவுள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு வலி. வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழு தனது ஆதர வைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங் கம், இந்தப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவு வழங் குவதாகவும், மீள்குடியேற்றப் பட வேண்டிய சகல மக்களையும் இதில் கலந்துகொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேபோன்று தமிழ்த் தேசிய மக் கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியன இந்த போராட் டத்துக்கு தமது ஆதரவை வழங் குவதாக அறிவித்துள்ளன. (ப)

ஐ.நா. குழு விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்

புலம்பெயர் தமிழர்கள் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இழைக்கப் பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத் தின் குழு இம்மாத நடுப்பகுதி யில் மேற்கொள்ளும் விசா ரணைக்குத் தாங்கள் ஒத்து ழைப்பு நல்குவர் எனப் புலம் பெயர்ந்த தமிழர்கள் தெரிவித் துள்ளனர்.

லண்டனில் இயங்கும் உல கத் தமிழர் பேரவையின் பேச் சாளர் சுரின் சுரேந்திரன் இது தொடர்பாகக் குறிப்பிடுகையில், ஐ.நா. நிபுணர்கள் குழுவிடம் எமது பேரவை சாட்சியங்க ளுக்கான தொடர் ஆவணங் கள், வீடியோக்கள், படங்கள் ஆகியவற்றை முன்கூட்டியே சமர்ப்பித்துள்ளது எனத் தெரி

> “ ஆவணங்கள், வீடியோக்கள், படங்கள் ஆகியவற்றை முன்கூட்டியே சமர்ப்பித்துள்ளது.

வித்துள்ளார்.

இறுதிக்கட்டப் போரின் போது இழைக்கப்பட்ட போர்க்குற் றங்கள், மனித குலத்துக்கு எதி ரான குற்றங்கள் ஆகியவற்றை நிரூபிப்பதற்கான ஆவணங் கள் இவையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் நீதி பெறுவதற் காக எந்த ஒரு சுயாதீன சர்வ தேச விசாரணை முன்னெடுப்பு களுக்கும் உலகத் தமிழர் பேரவை நிச்சயம் தனது ஒத்து ழைப்பை நல்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

சீர்செய்வதில் என்ன தயக்கம்...?



யாழ். நகரில் கந்தப்பசேகரம் வீதியூடாகச் செல்லும் பிரதான கழிவுநீர் கால்வாயில் கழிவு நீர் நீண்டகாலமாகத் தடைப் பட்டுத் தேங்கிக் காணப்படு கிறது.

இதுகுறித்து செய்திகள் வெளி வந்தபோதும் எவரும் இத னைக் கருத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

யாழ். நகரில் சேரும் கழிவு நீர் இக்கால்வாயினூடாகவே கட லுக்கு அனுப்பப்படுகிறது. இப் பிரதான கால்வாய் உரிய முறையில் நீண்டகாலமாகச் சுத்தம் செய்யப்பட்டுத் தடை கள் அகற்றப்படாமையால் கழிவுநீர் ஓடமுடியாது தேங்கி நிற்பதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இப்பகுதி யால் பயணிக்கும் மக்களும் பொருள்களை ஏற்றி இறக்கும் தொழிலாளர்களும் பல சுகா தாரச் சீர்கேட்டை எதிர்நோக்கு வதாக விசனம் தெரிவிக்கின் றனர்.

அதேவேளை, நுளம்பு பெருக் கமடைந்து டெங்குத் தாக்கம் உண்டாகும் ஏது நிலையும் காணப்படுகிறது. (ஒ-135)

15 பவுண் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 16

கடும் வெயில் காரணமாக வீட்டு ஜன்னல்களைத் திறந்து விட்டு வசதியாக வீட்டிலிருந் தோர் உறங்க, அந்த ஜன்னலூடாக உள்நுழைந்த திருடர்கள் 15 பவுண் நகைகளைத் திருடிக் கொண்டு மாயமாகியுள்ளனர்

இந்தச் சம்பவம் கடந்த வெள் ளிக்கிழமை அச்சுவேலி தெற்கு சிவன்சக்தி கோயிலடியில் இடம் பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் வசிக்கும் பெண், வீட்டின் கதவுகளைப் பூட்டி விட்டு, வெக்கை காரணமாக ஜன் னல்களைத் திறந்துவிட்டு உறங் கியுள்ளார். நித்திரையின் இடை யில் திடீரென கண்விழித்துப் பார்த்த போது வீட்டுக் கதவுகள் திறந்து கிடந்தன. அதன் பின்னர் ஆராய்ந்தபோது 10 பவுண் நிறையுடைய தாலிக் கொடி, 4 பவுண் நிறையுடைய சங்கிலி, ஒன்றரைப் பவுண் நிறையுடைய 3 மோதிரங்கள் என்பன மாய மாகியமை தெரியவந்தது. (ப-4)

பாகிஸ்தான் அகதிகளை கைது செய்ய நடவடிக்கை

சி.ஐ.டியின் உதவியுடன் குடிவரவு அதிகாரிகள்

கொழும்பு,ஜூன் 16

பாகிஸ்தான் தீவிரவாதிகள் சிலர் இலங்கையைத் தளமாகப் பயன்படுத்துகின்றனர் என்ற புலனாய்வுத் தகவல்கள் வெளி யாகியமையை அடுத்து இலங் கையில் அகதிகளாகப் பதிவு செய்து தரித்திருக்கும் சுமார் ஆயிரத்து 475 பாகிஸ்தானி யர்களைச் சுற்றி வளைத்து மடக்கும் நடவடிக்கை ஒன்றை குற்றத் தடுப்பு புலனாய்வுப் பொலிஸாரின் உதவியுடன் குடி வரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் கடந்த வியாழ னன்று சத்தம் சந்தடியின்றி ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்த நடவடிக்கையின் போது குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை பாகிஸ்தானியர்கள் வளைத் துப் பிடிக்கப்பட்டுள்ளனர் என் றும் செய்திகள் வெளியாகியி ருக்கின்றன.

இலங்கையில் உள்ள அகதி களுக்கான ஐ.நா. தூதரகத்தில் பதிந்துவிட்டு இங்கு தங்கியி ருக்கும் 1,475 பாகிஸ்தானி யர்களை வளைத்துக் காவலுக் குள் கொண்டு வருவதே திட் டம் என்றும் கூறப்பட்டது.

இலங்கையில் செயற்படும் சில பாகிஸ்தானியர்களுக்கு இந்தியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதக் குழுக்களு டன் தொடர்புகள் இருப்பதாக வெளியான புலனாய்வுத் தக வல்களை அடுத்தே இந்த நட வடிக்கை என்றும் பாகிஸ்தா னுடனான இலங்கையின் உற வைப் பாதிப்படையாமல் பார்த்

> “ நீர்கொழும்பிலும், கிழக்கின் சில முஸ்லிம் பிரதேசங்களிலும் தங்கியிருந்து பாகிஸ்தா னியர் செயற்படுகின்றனர் என்றும் நீர்கொழும்பில் தங்கியிருந்தவர்களில் ஒரு தொகுதியினர் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

துக் கொள்ளும் விதத்தில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படு வதாகவும் அறியவருகின்றது.

நீர்கொழும்பிலும், கிழக்கின் சில முஸ்லிம் பிரதேசங்களி லும் தங்கியிருந்து பாகிஸ்தா னியர் செயற்படுகின்றனர் என் றும் நீர்கொழும்பில் தங்கியி ருந்தவர்களில் ஒரு தொகுதியி னர் சமூக விரோதச் செயல் களிலும் ஈடுபட்டு வருகின்ற னர் என்றும் கூறப்பட்டது.

இங்கு அகதி அந்தஸ்து கோரு வோருக்கு பாதுகாப்பு உத்தர வாத அந்தஸ்தை அகதிகளுக் கான ஐ.நா. தூதரகம் வழங்கி வருகின்றமையை இலங்கை அரசு கடுமையாக விமர்சித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் தீவிரவாதிகள் இலங்கையைத் தளமாகப் பயன்படுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே இந் தியாவினால் இலங்கைக்கு மிக உயர்ந்த மட்டத்தில் இருந்து தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் இப்போது தகவல்கள் வெளி யாகியுள்ளன.

கடந்த மாத இறுதியில் புதுடில் லியில் ஹைதராபாத் இல்லத் தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, புதிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்த சமயம் இந்த விடயம் குறித்து இலங்கை ஜனாதிபதிக்கு அறிவுறுத்தி னார் என்றும், அதனை புதிய தகவலாக ஆச்சரியத்துடன் செவிமடுத்த இலங்கை ஜனாதி பதி நாடு திரும்பியதும் இவ்விட யத்தைத் தாம் விசேடமாகக் கவனிப்பார் என்று அப்போது உறுதியளித்தார் என்றும் இப் போது செய்திகள் வெளியாகி யிருக்கின்றன.

அகதிகளுக்கான ஐ.நா. தூதர கத்தின் கொழும்பு அலுவலகப் பதிவுகளின்படி 2012 இல் 102 பாகிஸ்தானியர்களே இங்கு அகதி அந்தஸ்துக்கு விண் ணப் பித்திருந்தனர். எனினும் கடந்த வருடம் அது 1,489 ஆகத் திடீரென உயர்ந்திருக்கின்றது என்றும், விஸா அனுமதியின்றி இங்கு தங்கியுள்ள பாகிஸ் தானி யர்களை சுற்றி வளைத்து மடக்கிய பின்னர் அவர்களை நாடு கடத்த நடவடிக்கை எடுக்க வுள்ளதாகவும் இலங்கை அறி வித்துள்ளது. (ஐ)

விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம் நாவலர் வீதி யால் கைலாசப்பிள்ளையார் கோயிலை நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக் கிளும் எதிரே வந்த ஹைஏஸ் வாகனமும் மோதி விபத்துக் குள்ளாகின்.

இதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் சிறு காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டார். மேலதிக விசாரணைகளை யாழ்ப்பா ணம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஜ-21)

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட மூவர் கைது

அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேசத்தில் நீதிமன்ற பிடி யாணை பிறப்பிக்கப்பட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அக்கரைப்பற்று பொலி ஸார் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தில் முன்னிலையா காமல் தலைமறைவான மூன்று நபர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப் பட்டிருந்தது. (சி)

ஐ.நா. குழுவுக்குத் தகவல் வழங்கினால் கூட்டமைப்பினரைக் கூண்டில் போடவும்

எச்சரிக்கிறது தேசிய அமைப்புகளின் ஒன்றியம்

கொழும்பு, ஜூன் 16

ஐ.நா. விசாரணைக்குழுவுக்கு எவ்விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என வலி யுறுத்தும் தீர்மான வரைவு நாடாளுமன்றில் நிறைவேற் றப்பட்ட பின்னர், அந்தக் குழு வுக்கு எவராவது சாட்சியம் வழங்கினால் அது அரச மைப்பை மீறும் செயலாகி விடும்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ அல்லது தமிழ் அமைப்புகளின் பிரதி நிதிகளோ ஐ.நா. குழுவுக்குத் தகவல் வழங்கினால், அவர்க ளைப் பொலிஸார் உடன் கைதுசெய்ய வேண்டும்: இது விடயத்தில் புலனாய்வுப் பிரி வினரும் உஷாரடைய வேண் டும் என்று முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது சிங்கள தேசிய வாத அமைப்புகளின் கூட்ட மைப்பான 'தேசிய அமைப் புகளின் ஒன்றியம்'.

அத்துடன், ஐ.நா. விசார ணைக்கு எதிராக நாடளாவிய ரீதியில் அறவழிப் போராட்டங் களை நடத்துவதற்கு உத் தேசிக்கப்பட்டுள்ளது என்று மேற்படி ஒன்றியத்தின் ஏற்பாட் டாளர்களுள் ஒருவரான கலா நிதி குணதாச அமர சேகர தெரி வித்தார். தேசிய அமைப்பு கள் ஒன்றியத்தில் அங்கம் வகிக் கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவராகவும் இவர் செயற்படுகின் றார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத் தால் நியமிக்கப்படவுள்ள விசா ரணைக் குழு விவகாரம் தொடர்

> “ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ அல்லது தமிழ் அமைப்புகளின் பிரதி நிதிகளோ ஐ.நா. குழுவுக்குத் தகவல் வழங்கினால், அவர்களைப் பொலிஸார் உடன் கைதுசெய்ய வேண்டும்

பில் நேற்று 'உதயனி'டம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்குலகின் அரசியல் நிகழ்ச்சி நிரலை எமது நாட்டுக்குள் அமுல்படுத்தும் வகையிலேயே ஐ.நா. விசாரணை இடம்பெறும் என்பது தெட்டத்தெளிவு. எனவே, இந்த விசாரணைக்கு எதிராக அரசு முன்னெடுத்துவரும் நட வடிக்கைகள் பாராட்டத்தக் கவை. சட்டரீதியாக அரசு எதிர்ப் புகளை வெளியிடும் அதே வேளை, ஜனநாயக போராட்ட நடவடிக்கைகளை நாம் முன் னெடுப்போம்.

அத்துடன், எதிர்க்கட்சிகளும் இது விடயத்தில் அரசுக்கு ஒத் துழைப்பு வழங்கவேண்டும். மாறாக, யுத்த காலத்தில் செயற் பட்டதைப்போல் ஐ.நா. விடயத் தில் செயற்பட்டால், எதிர்க்கட்சி களின் அரசியல் முகவரி இல் லாமல் போகும் என்பதும் உறுதி என்றும் குணதாச அமரசேகர குறிப்பிட்டார்.

விபத்தில் குடும்பஸ்தர் சாவு

கொழும்புத்துறை.ஜூன் 16

அரியாலை மாம்பழம் சந்தியில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

ஏ-9 வீதியால் யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்த வானுடன், இலந்தைக்குளம் வீதியிலிருந்து பிரதான வீதிக்குள் நுழைந்த மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மோதிய வாகனத்தில் மத குருக்கள் பயணம் செய்ததாகக் கூறப்படுகிறது.

குறித்த விபத்தில் அளவெட்டி கும்பனையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான எஸ்.கஜன் (வயது-26) என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவர் கொழும்புத்துறையில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்து திரும்பிச் செல்கையில் விபத்து நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-135)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயச் சுற்றாடலில் துர்நாற்றம்

சுகாதாரப் பரிசோதகர்களின் பொறுப்பற்ற செயலால்

வலி. வடக்கு. ஜூன் 16

தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி பணிமனையின் சுகாதார பரிசோதகர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டால் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயச் சுற்றாடலில் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுகிறது.

கீரிமலை கவுணாவத்தை வேள்வியில் வெட்டப்பட்ட கடாக்களை வேண்டி வந்து பங்கு போட்டவர்களின் ஒரு லட்சம் ரூபா மற்றும் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான இரண்டு கடாக்களையும் மற்றும் பங்கு போட்டு வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்ட ஆறாயிரம் ரூபா பெறுமதியான இறைச்சியையும் பொது சுகாதார பரிசோதகர்கள் பறிமுதல் செய்திருந்தனர்.

காலையில் பறிமுதல் செய்த பொருள்களை நீதிமன்றத்துக்கு உடன் பாரப்படுத்தாது பிற்பகல் பாரப்படுத்திய நிலையில் உரிமையாளர்களும் அதனை பழுதடைந்த நிலையில் ஏற்க மறுத்தமையால் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை அமைந்துள்ள வளாகத்தின் வாசலில் உள்ள இடத்தில்வைத்துதீயிட்டுள்ளனர்.

இறைச்சி எரியாததுடன் பழுதடைந்து துர்நாற்றம் வீசத் தொடங்கியுள்ளது. பிரபல்யமான துர்க்கையம்மன் ஆலயம் மற்றும் குறிப்பிட்ட வளாகத்தில் இயங்கும் உள நோயாளர்களின் பாதுகாப்பு இடமான குடில் அமைந்துள்ள வளாகத்தில் சுகாதாரப் பகுதியினர் இத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை பலரையும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளதுடன் பலத்த விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸாருக்கும் வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் இருந்து பழுதடைந்த கடாக்களின் இறைச்சிகளை நாய்களும் காகங்களும் அந்தப் பகுதி முழுவதும் எடுத்துச் சென்று சுகாதாரத்தை சீர் குலைக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதார வைத்தியதிகாரி பணிமனையுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை என்ற படியால் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ள துடன் தனிப்பட்ட முறையில் உரிய அலுவலர்களுடன் தொடர்பு கொள்ள பொது மக்கள் எடுத்த முயற்சிகளும் கைகூடாத நிலையில் அந்தப் பகுதி துர்நாற்றம் வீசி வருகிறது. (வ-86)



பழுதடைந்த இறைச்சிகளை இழுத்துச் செல்லும் காகங்கள்

வவுனியாவில் திருட்டுச் சம்பவங்கள்

வவுனியா. ஜூன் 16

வவுனியாவில் வெவ்வேறு இடங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 13 ஆம் திகதி கதிரேசன் வீதி மற்றும் கண்டி வீதி இரண்டாம் ஒழுங்கை ஆகிய பகுதியிலும் இரவு வேளைகளில் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கதிரேசன் வீதியிலும். வவுனியா கண்டிவீதி 2 ஆம் ஒழுங்கையிலும் உள்ள வீதியில் உள்ள வீடுகளிலேயே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கதிரேசன் வீதியிலுள்ள வீடொன்றில் அரைப்பவுண் தோடொன்றும் மற்றும் மணிக்கூடு உட்பட 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் கண்டிவீதி இரண்டாம் ஒழுங்கையில் உள்ள வீட்டில் தொலைக்காட்சி ஒன்றும் பத்தாயிரம் பணமும் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-402)

அளுத்கமவில் நேற்று இடம்பெற்ற குழப்பத்தின் போது பதிவான காட்சிகள்

பௌத்த, முஸ்லிம் மக்களிடையே அளுத்கமவில் நேற்று மோதல்

பொலிஸ் ஊரடங்கு பிறப்பிப்பு

கொழும்பு. ஜூன் 16

இலங்கையின் களுத்துறை மாவட்டம் அளுத்கம பகுதியில் கடும் போக்கு பௌத்த குழு ஒன்றுக்கும். அந்தப் பகுதியில் வாழும் முஸ்லிம் இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து அங்கு பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் சில நாள்களுக்கு முன்னர் ஒரு பௌத்த மத குருவின் வாகன ஓட்டுநர் ஒருவருக்கும். சில முஸ்லிம் இளைஞர்களுக்கும் இடையில் கைகலப்பு நடைபெற்றதாகவும் இந்த தகராறு முற்றி நேற்று பெரும் பேராட்டமாக வெடித்ததாகவும் தெரிய வருகின்றது.

நேற்று அளுத்கம பகுதியில் பொதுபலசேனா அமைப்பினர் ஊர்வலம் நடத்துவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கினர். இதனையடுத்து நேற்று பிற்பகல் பொதுபலசேனா அமைப்பினர் முஸ்லிம்களுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாகச் சென்றனர். இதன்போது அங்கு கூடிய முஸ்லிம்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இது தரப்பு இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது. இதில் முஸ்லிம்களின் கடைகள் எரிக்கப்பட்டுள்ளன. ஊர்வலமாகச் சென்ற சிங்களவர்களுக்கு கல் வீசப்பட்டிருக்கிறது. பொலிஸார் கண்ணீர்புகை பிரயோகம் செய்திருக்கிறார்கள். ஆனால். இந்தச் சம்பவங்களில் எவை முதலிலும். எவை பின்னரும் நடந்தன என்பது தெரியவில்லை.

முஸ்லிம்களின் வீடுகளும் மசூதிகளும் கல்வீசித்தாக்கப்பட்டதாக அங்குள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக உறுதி செய்யப்படாத தகவல்கள் கூறுகின்றன.

இந்தச் சம்பவம் குறித்து செய்தி வெளியிடுவதில் உள்ளூர் ஊடகங்கள் சுயதணிக்கை போக்கை கடைப்பிடிப்பதாகத் தெரிகிறது. ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட செய்தியைத் தவிர வேறு செய்திகளைக் காண முடியவில்லை. இன்றைய சம்பவங்கள் குறித்து எதனையும் ஒளி/ஒலிபரப்ப வேண்டாம் என்று மேலிடத்தில் இருந்து சில ஊடகங்களுக்கு உத்தரவு வந்ததாக சில வட்டாரங்கள் கூறுகின்றன. என்று பி.பி.சி செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

காணி உறுதி வழங்குவதாகக் கூறி ஏமாற்றி அழைத்துவரப்பட்ட மக்கள்

அதிகாரிகளையும் அமைச்சரையும் திட்டியவாறு திரும்பிச் சென்றனர்

யாழ்ப்பாணம். ஜூன் 16

காணி உறுதி வழங்குவதாக தெரிவித்து இராணுவ வாகனங்களில் நேற்று ஏற்றி வரப்பட்ட நாவற்குழி தமிழ் மக்கள். இறுதியில் காணி உறுதி வழங்கப்படாமல் ஏமாற்றப்பட்டதால் அமைச்சர்களையும். அதிகாரிகளையும்திட்டித் தீர்த்தனர்.

குருநகர் மாடித் தொகுதி புனரமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன் இறுதியில் நாவற்குழியில் உள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணியில் குடியேறியுள்ள சிங்கள - தமிழ் மக்களுக்கு அதற்குரிய காணி உறுதிகள் வழங்கப்பட்டது.

அதற்காக நாவற்குழியில் தங்கியுள்ள 110 தமிழ்க் குடும்பங்கள் இராணுவத்தினரால் நேற்று அதிகாலையே குருநகருக்கு ஏற்றி வரப்பட்டனர். 'யுத்த கமு தாவே 26260' என்ற இராணுவத்தின் பேரூந்தில் ஏற்றிவரப்பட்ட மக்கள் மு.ப. 10 மணியிலிருந்து மதியம் 1 மணிவரையில் காத்திருந்தனர்.

நிகழ்வின் இறுதியில் நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினருக்குச் சொந்தமான காணியில் குடியிருப்பவர்களுக்கு காணி உறுதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இருப்பினும் நிகழ்வில் வைத்து 10 பேருக்கு மாத்திரமே வழங்கப்பட்டதுடன். ஏனையோருக்கு ஒரு மாதத்தின் பின்னர் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் நிகழ்வுக்கு அழைத்து வரப்பட்டு காணி உறுதி கிடைக்காத மக்கள் அங்குள்ள அதிகாரிகளையும். அமைச்சர்களையும் திட்டித் தீர்த்தனர். அத்துடன் அதிகாரிகளுடனும் முரண்பட்டனர். காணி உறுதி ஒரு மாதத்தின் பின்னரே வழங்கப்படும் என்றால் எதற்காக தம்மை அழைத்து வந்ததாக அவர்கள் கேள்வியெழுப்பினர். (ற-5)

குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம். ஜூன் 16

மூளாய் முன்கோடை பகுதியில் கழுத்து அறுக்கப்பட்டு உயிரிழந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை தாம் மீட்டுள்ளனர் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் கொலை செய்யப்பட்டாரா அல்லது தற்கொலை செய்து கொண்டாரா என்பது தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சித் தங்கேணியைச் சேர்ந்த கந்தசாமி வவிதரன் (வயது - 34) என்பவரே கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அவர் 3 பிள்ளைகளின் தந்தையென பொலிஸார் தெரிவித்தனர். கூலிவேலை செய்துவரும் அவர் சைக்கிள் ஒன்றுடன் வீதியில் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டு அது தொடர்பில் அவ்வழியே சென்றவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (ஐ-4)

சத்திரசிகிச்சை மேற்கொண்டால் இரத்தம் வழியத்தான் செய்யும்

இறுதிப்போர் உயிரிழப்புகளை நேற்று யாழ்ப்பாணத்தில் நியாயப்படுத்தினார் விமல்

யாழ்ப்பாணம், ஜூன் 16

சத்திரசிகிச்சை செய்யும் போது இரத்தம் வழிந்தோடத்தான் செய்யும். சத்திர சிகிச்சை மேற் கொண்டு நோயாளியை குணப் படுத்திய ஜனாதிபதியையும், இராணுவத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச நீதியில் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது - இவ்வாறு இறுதிப் போரில் ஏற்பட்ட உயிரிழப்பு களை நேற்று யாழ்ப்பாணத் தில் நியாயப்படுத்தினார் அமைச் சர் விமல் வீரவன்ஸ.

குருநகர் மாடி வீட்டுத் திட்டம் புனரமைக்கப்பட்டு பயனாளிக ளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் பிரதம அதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகை யிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:

வேறு வழியில்லை

ஒரு நோயாளியைக் குணப் படுத்துவதற்கு சத்திரசிகிச்சை அல்லாமல் வேறுவழியில்லை என்று வைத்தியர்கள் சொல்வ தைப் போல, இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த போரைத் தவிர வேறு வழி யிருக்கவில்லை. சத்திர சிகிச்சை



மேற்கொள்ளப்பட்டது. சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் போது இரத்தம் வழிந்தோடத் தான் செய்யும். கத்தி எடுத்து வெட் டினார்கள். ஆனால் தற்போது மருந்து போட்டு மூடி மறைத் துள்ளார்கள். இப்போது நோயாளி குணப்படுத்தப்பட்டு விட்டார். ஆனால் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு என்ன செய்கின்றது. இதோ இந்த இடத்திலேதான் சிங்கள வைத்தியர்கள் சத்திர சிகிச்சை செய்தார்கள் என்று காட்டி மீண்டும் பின்னோக்கிச் செல்ல முயல்கின்றார்கள். இந்த கட்டிடங்கள் எல்லாம் இடிந் தழிந்து அகலபாதத்திலிருந்தது நல்ல காலமா ? அல்லது இப் போதிருப்பது நல்ல காலமா ?

வெளிநாட்டுச் சக்திகள் முயற்சி

அந்த சத்திர சிகிச்சை மேற் கொண்டு குணப்படுத்திய ஜனா திபதிக்கும், படை வீரர்களுக்கும் எதிராக சர்வதேச நீதியாக பல விடயங்களை இப்போது செய் கின்றனர். வெளிநாட்டு சக்திகள் இலங்கைக்குள் வர முயற் சிக்கின்றன. அவர்கள் இங்கே வந்து, தமிழ் மக்கள் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்டார்கள் என்று கதையை உருவாக்கி முழு உலகத்திலும் அப்படியான கருத்தை உருவாக்க முயற் சிக்கின்றனர்.

நாம் செய்த தவறு என்ன ? மீண் டும் இந்தக் கட்டிடத்தை நவீனப் படுத்தியது தவறா ? காப்பெற் வீதிகள் போட்டது தவறா ? எல்லோருக்கும் மின்சாரத்தை கிடைக்கச் செய்தது தவறா ? கிளிநொச்சி, முல்லைத்தீவில் இயல்பு வாழ்க்கையை ஏற் படுத்திக் கொடுத்தது தவறா ? யாழ்ப்பாண மக்கள் வசதியாக வாழ வழி ஏற்படுத்திக் கொடுத் தது தவறா ? இவையெல்லாம் தவறா ?

சிங்கள மக்களுக்கு இழப்பு

போரினால் சிங்கள மக்கள் இழந்ததைப் போன்றே தமிழ் மக்களும் இழந்து வேதனைப் பட்டிருப்பார்கள். அந்த இருள் சூழ்ந்த காலத்தைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதால் என்ன நன் மை கிடைக்கப் போகின்றது ? நீங்கள் மிகவும் நல்லவர்கள். எங்களது அனுமதியில்லாமல் இந்தக் குடியிருப்பினுள் எது வும் செய்யவில்லை. கொழும் பில் இருக்கும் ஜயாமார் அப் படியில்லை. நாங்கள் கொஞ்சம் திரும்பினால், கிடைக்கும் இடத் தில் அங்கு சுவர் எழுப்பி விடு வார்கள்.

இங்கேயிருக்கும் மைதானம் அங்கேயிருந்தால் அதில் அரை வாசிக்கும் கட்டடம் கட்டியிருப் பார்கள். ஆனால் நீங்கள் அப் படிச் செய்யவில்லை.

தூத்துக்குடியிலிருந்து வரவில்லை

அதனால்தான் 110 மில்லியன் ரூபா செலவில் உங்களுக்கு இதனைப் புனரமைத்து தந்தி ருக்கின்றோம். இந்தப் பணம் வெளிநாட்டிலிருந்து வந்த பண மில்லை. எமது மக்களின் வரிப் பணம். வடக்கில் நாம் என்ன செய்தாலும், பலர் சொல்கின் றார்கள் அது வெளிநாட்டிலி ருந்து வந்த பணம் என்று. இது எந்தத் தூத்துக்குடியிலி ருந்தும் வந்த பணமல்ல.

இந்த நாட்டு மக்களின் வரிப் பணம். சிங்கள, தமிழ், முஸ் லிம் மக்கள் செலுத்திய வரிப் பணத்திலிருந்தே இந்தக் கட்ட டம் கட்டப்பட்டுள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் எல் லோரும் வரிப் பணம் செலுத் துகின்றார்கள். வரிப் பணம் செலுத்திய பின்னர் அது யாரு டைய பணம் என்று பார்க்க முடியாது" - என்று தெரிவித்துள் ளார். (ற-5)

தமிழீழம் தேவையெனில் தமிழ்நாட்டில் அமைக்கட்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 16

தமிழீழத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ஜெயலலிதா கோரிக்கை விடுக்கின்றார். அவர் ஏன் அதை தென்னிந்தியாவில் செய்து கொள்ளவில்லை. தனியான நாடு தேவையென்றால் அதை அங்கேயே செய்துகொள்ளவேண் டியதுதானே என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ யாழ்ப்பாணத் தில் வைத்து நேற்றுத் தெரிவித் தார்.

குருநகரில் நடைபெற்ற நிகழ் வில் கலந்து கொண்டு உரை யாற்றிய அவர், தென்னிந்தி யாவில் இருக்கின்ற முதலமைச் சர் ஜெயலலிதா இலங்கையில் தமிழீழம் உருவாக, இலங்கை யிலும் புலம் பெயர் தமிழர்கள் மத்தியிலும் சர்வஜன வர்க் கெடுப்பு நடத்த வேண்டும் என்று கோருகின்றார். அதை அவர் ஏன் தென்னிந்தியாவில் செய்து கொள்ளவில்லை.

தனியான தொரு நாடு தேவையென்றால் அதை அங் கேயே செய்திருக்கலாம்தானே? அவர்கள் அங்கு செய்யமாட் டார்கள். உங்களையும் (தமிழ் மக்கள்) எங்களையும் பிரித்து இங்கே செய்யப் பார்க்கின்றார் கள். வெளிநாட்டவர்கள் சொல்வ தற்கு நாம் அகப்பட கூடாது. நாம் இங்கே ஒற்றுமையாக இருக்க வேண்டும் - என்றார். (ற-5)

தேன் புரக்கேறி கிராம அலுவலர் சாவு

வவுனியா, ஜூன் 16

தேன் புரக்கேறியதால் கிராம அலுவலர் ஒருவர் உயிரிழந் துள்ளார். இந்தச் சம்பவம் வவு னியாவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள் ளது.

கள்ளிக்குளம், காத்தார்சின்னக் குளம் ஆகிய பிரிவுகளில் தற் போது கிராம அலுவலராக பணி யாற்றிய எஸ். பெனடிற் (வயது 59) என்ற இரண்டு பிள்ளைக ளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துவராவார்.

வவுனியா, காத்தார் சின்னக் குளத்தில் உள்ள தனது அலுவ லகத்தில் இருந்த தேன்கூ டைப் பிரித்து அதில் உள்ள தேனை பருகிக்கொண்டிருந்த போது தேன் கூட்டின் இருந்த தேனீ ஒன்று அவரைக் கொட்டி யுள்ளது. அதைத் தடுக்க முற் பட்டவேளை தேன் புரக்கேறி குறித்த கிராம அலுவலர் உயி ரிழந்துள்ளார் என்று கூறப்படு கின்றது. (ற-402)

புனரமைத்த தொழிலாளரின் சம்பளம் நிலுவையிலுள்ளதாம்

90 வீடுகள் வரையில் மின்சார இணைப்பும் இல்லையாம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

குருநகர் தொடர்மாடி குடியி ருப்பு புனரமைப்பு பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு இதுவரையில் அவர்களுக் குரிய சம்பளங்கள் வழங்கப்பட வில்லை என்று தெரிவிக்கப்படு கின்றது. அத்துடன் தொடர்மாடி புனரமைப்புச் செய்யப்பட்டு பொதுமக்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டிருந்தாலும் அதில் சுமார் 90 வீடுகளுக்கு இன் னமும் மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக் கின்றனர்.

1984 ஆம் ஆண்டு கட்டப்பட்டு பொது மக்களிடம் கையளிக் கப்பட்ட குருநகர் வீடமைப்புத் திட்டம், 1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் நடவடிக்கை கள் காரணமாக சேதமடைந் தது. மண்டைதீவிலிருந்து இரா ணுவத்தினர் நடத்திய ஷெல் தாக்குதலில் கடுமையாக குறித்த கட்டடத் தொகுதி பாதிப்படைந் திருந்தது. இதன் பின்னர் குறித்த வீட்டுத் தொகுதிகள் இராணுவத்தினரின் முகாமாக வும் இருந்தது.

பாதிப்புக்குள்ளான இந்த வீட மைப்புத் திட்டத்தை நிர்மாணத் துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி புனரமைக்க ஆரம்பித் தது. 160 வீடுகளைக் கொண்ட இந்த 8 தொடர் குடியிருப்பின் புனரமைப்புக்காக 110 மில்லி யன் ரூபா செலவு செய்யப்பட் டுள்ளது என்று அமைச்சு அதி காரிகள் தெரிவித்தனர். ஒவ் வொரு குடியிருப்பும் 6 லட்சம் ரூபா செலவில் புனரமைக் கப்பட்டுள்ளது என்றும் அவர் கள் தெரிவித்தனர்.

ஆனால் அங்கு குடியிருக்கின்ற மக்கள், 6 லட்சத்துக்கும் குறை வான செலவிலேயே புனர மைப்புச் செய்யப்பட்டதாகவும் 110 மில்லியன் ரூபா வரையில் இதற்கு செலவாகியிருக்கா தெனவும் கூறுகின்றனர். நேற் றைய தினம் வீடுகள் கையளிக் கப்பட்டிருந்தாலும், 90 வீடுகள் வரையில் இன்னமும் மின்சார இணைப்பு வழங்கப்படாத நிலையிலேயே உள்ளது.

இதேவேளை இந்தப் புனர மைப்புத் திட்டத்தில் வேலை செய்த பணியாளர்களுக்கு சுமார் 8 லட்சம் ரூபா இன்ன மும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்றைய தினம் நிகழ்வு முடி வடைந்ததும், தமது வேலைக் குரிய பணத்தை வழங்குமாறு பணியாளர்கள் அமைச்சர்க ளிடம் கோரிக்கை விடுத்தனர். இன்னும் ஒரு மாத காலத்தி னுள் அந்தப் பணத்தை வழங் குவதாக அவர்கள் தெரிவித்து விட்டுச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

(ற-5)

யாழ். ரயில் நிலையத்தின் புனரமைப்பு பணிகள் தூரிதமாக இடம்பெற்றுவருகின்றன. நாவற்குழி பால வேலைகள் பூர்த்தியடையாததால் ரயில்பாதை வழியாக யாழ். நகர்ப் பகுதிக்குள் கனரக இயந்திரங்கள் உபகரணங்களை எடுத்துவர முடியவில்லை. இதனால் கனரக வாகனங்களின் உதவியுடன் ஏ -9 வீதிவழியாக அவற்றைத் தருவித்து, யாழ். பிரதான ரயில் நிலையப் பகுதிகள் புனரமைக்கப்படுகின்றன. தண்டவாளங்கள் பொருத்தப்பட்ட நிலையில் அவற்றைச் சோதிப் பதற்கும் பண்படுத்துவதற்குமெனத் தற்போது ரயில் எஞ்சினும் பெட்டிகளும் கொண்டுவரப் பட்டுள்ளன. நேற்றும் இன்றும் இந்த இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டு தொடர்ந்து புனரமைப்பு பணிகள் நடைபெற்றுவருகின்றன. (ற)

டைனமட் கடத்தியோர் கைது

கொழும்பு, ஜூன் 16

அனுராதபுரத்திலிருந்து புத்த எத்திற்கு காரில் சட்ட விரோ தமான முறையில் டைனமைட் மற்றும் அதற்கு பயன்படுத்தும் நூல்என்பனவற்றினைகொண்டு வந்ததாக கூறப்படும் சந்தேக நபர்கள் மூவரை புத்தளம் விசேட அதிரடிப்படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர். தற்போது காரில் பயணித்த 03 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு புத்தளம் பொலி சாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள னர். (ற)

புதூர் நாகதம்பிரானில் அதிசயம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

வரலாற்று சிறப்பு மிக்க புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வசந்த மண்டப சுவர்களின் ஒன்பது இடங்களில் இருந்து பால் போன்ற திரவம் வெளியேறிக்கொண்டிருப்பதாக தேரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்து நாள்களாக வசந்த மட்டபத்தின் கிழக்கு, வடக்கு, மேற்கு திசைகளிலுள்ள சுவர்க ளில் இவ்வாறு பால்போன்ற திரவம் வடிவதை அங்கு சிரம தான பணியில் ஈடுபட்டிருந்த வர் கள் அவதானித்துள்ளனர். நேற்றுக் காலை பத்துமணியள வில் ஆலயநிர்வாகத்தினர் இதனை அவதானித்துள்ள

னர். தற்போதும் துளித்துளி யாக திரவம் சொட்டிக்கொண் டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. மேற்படி திரவம் வடியும் சுவர்களின் நிறப்பூச்சு உரிந்து காணப்படுகின்றதுடன் திரவம் விழுகின்றஇடத்தில் மெழுகு உருகி காணப்படுவது போன்று வெண்மையாகக் காணப்படுகின்றது. பொதுமக் கள் தொடர்ச்சியாகச் சென்று இதனைப்பார்வையிட்டு வரு கின்றனர். எதிர்வரும் 23ஆம் திகதி ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் நடைபெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

வெளிநாட்டுத் தலையீட்டை முறியடிக்க அணிசேருங்கள்

பொலிவியாவில் ஜனாதிபதி மஹிந்த அறைகூவல்

உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகளின் தலையீடுகளை முறியடிப்பதற்கான ஆதரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

ஜி 77 அமைப்பின் பொன் விழா நிகழ்வுகளிற்காக பொலிவியா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த நாட்டின் சாண்டா குறூஸ் நகரில் நமீபிய பிரதமரைச் சந்தித்த வேளை இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

வெளியுலகின் தலையீடுகளை சந்தித்த நாடுகளின் நிலைமை முன்ன ரைவிட மோசமானதாகக் காணப்படு கிறது. இந்த நாடுகளின் நிலை முன் னரை விடகுழப்பகரமானதாகக்காணப் படுகின்றது. நடந்தது இது மாத்திரம் தான் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நியாயப்படுத்த முடியாத தலை யீடுகள் உட்பட தடைகளை எதிர்கொள்வதற்கு இணைந்து பாடுபடவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து நமீபிய பிரதம ருக்கு அவர் தெளிவுபடுத்தி யுள்ளார். வடபகுதியில் தேர் தல்களை நடத்தியுள்ளோம். தேசிய நல்லிணக்கத்தை ஏற் படுத்துவதற்காக இரண்டு ஆணைக்குழுக்களை அமைத் துள்ளோம். அரசியல்வாதிக ளும் வெளிநாட்டுச் சக்திக ளுமே இது குறித்து திருப்தி யடையாத வர்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் வருகைக்கு பின்னர்தான் தேர்தல்

பாப்பரசர்

கொழும்பு.ஜூன் 16

எதிர்வரும் ஜனவரி மாதம் இடம்பெறும் என்று தெரிவிக் கப்பட்ட ஜனாதிபதி தேர்த லானது இரண்டு மாதம் பிற் போடப்படும் என்று தெரிவிக் கப்படுகிறது.

பாப்பரசர் எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம், 14 ஆம், 15 ஆம் திகதிகளில் இலங்கைக்கு வருகை தரவுள்ளமையே இதற்கான காரணமாகும் என்று கூறப்படுகிறது.

பாப்பரசரின் இலங்கை பய ணத்தின் போது ஜனாதிபதி தேர்தலை நடத்துவது இக்கட் டானது என்று அதிகாரிகள் அர சுக்கு ஆலோசனை வழங்கி யுள்ளார் என்றும் கூறப்படுகி றது. (ச)

தங்கத்துடன் ஒருவர் கைது

கொழும்பு.ஜூன் 16

இலங்கையிலிருந்து தங்கம் கடத்திச் செல்ல முயன்ற நபர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் இந்தியாவின் பெங் களூர் நோக்கி செல்ல முயன் றுள்ளார் என்று சுங்கத்திணைக் களம் தெரிவித்துள்ளது.

இந்த நபர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 100 கிராம் தங்கத்தை கடத்திச் செல்ல முயற்சித்துள்ளார்.

இந்த தங்கத்தின் பெறுமதி 5 லட்சம் ரூபா என்று கணிப்பி டப்பட்டுள்ளது.

தங்கம் அரசுடமையாக்கப்பட் டுள்ளதுடன் சந்தேகநபருக்கு 20,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ச)

பொலிவியாவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமான ஜி- 77 அரச தலை வர்கள் மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டபோது... (ச)

அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்கவில்லை பிரதமர்

டி எம் ஜெயரத்ன

கொழும்பு.ஜூன் 16

கடந்த இரண்டு மாதங்களாக பிரதமர் டி எம் ஜெயரத்ன வாராந்தம்நடைபெறும்அமைச் சரவை கூட்டங்களில் பங் கேற்கவில்லை என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

உடல்நலநிலை காரணமா கவே அவர் அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கேற்க வில்லை என்று பிரதமருக்கு நெருக்கமானவர்கள் குறிப்பிட் டுள்ளனர்.

அமைச்சர் விமல் வீரவன்ச, கடந்த இரண்டு மாதங்களாக அமைச்சரவையை பகிஷ்க ரிக்கும் நிலையிலேயே பிரதம ரின் பகிஷ்கரிப்பும் வெளிச்சத் துக்கு வந்துள்ளது.

பிரதமரின் மகன் அநுராத ஜெயரத்ன அதிக வாக்குகளை பெற்ற போதும், அவருக்கு மத் திய மாகாண முதலமைச்சர் பதவி வழங்கப்படாமையை அடுத்து பிரதமர் அரச உயர் தரப்புடன் முறுகலை ஏற்படுத் திக்கொண்டமை குறிப்பிடத் தக்கது.

அடுத்த அமைச்சரவை மீள மைப்பின் போது அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பிரதம ராக நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியுள் ளன. (ச)

வாக்கெடுப்பை புறக்கணிக்க எதிர்க்கட்சிகள் தீர்மானம்

ஐ.நா. விசாரணைக்கு எதிரான பிரேரணையின்

கொழும்பு.ஜூன் 16

இலங்கையில் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் விசாரணை நடத்து வதற்கு எதிராக, இலங்கை நாடாளுமன்றத்தில் நடக்க வுள்ள வாக்கெடுப்பைப் புறக் கணிக்க எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக்கு எதிர்ப்புத் தெரி வித்து, ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் 9 நாடாளு மன்ற உறுப்பினர்கள், சமர்ப் பித்த தீர்மான வரைவு மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நடக்கவுள்ளது.

அனையடுத்து, எதிர்வரும் 18 ஆம் திகதி மாலை 6 மணிக்கு வாக்கெடுப்பு இடம்பெறும் என்றுதீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த வாக்கெடுப்பை ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சி கள் புறக்கணிக்க முடிவு செய்துள்ளன.

ஐ.நா. விசாரணைக்கு ஏற் கனவே எதிர்ப்புத் தெரிவித் துள்ள அரசு, இதனை அரசி யல் நலனுக்காகவே நாடாளு மன்றில் விவாதிக்க முனை வதாக இந்தக் கட்சிகள் குற் றம்சாட்டியுள்ளன.

அதேவேளை, வெள்ளிக் கிழமை இந்த விவாதம் தொடர் பாக நடத்தப்பட்ட நாடாளு மன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்த விவா தம் தேவையற்றது என்று தெரிவித்திருந்தார். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த வாக்கெடுப்பில், தீர்மா னத்துக்கு எதிராக வாக்களிக் கும் என்று கருதப்படுகிறது.

இந்த தீர்மானத்தை எதிர்க் கவோ, ஆதரிக்கவோ எதிர்க் கட்சிகளுக்கு வழியில்லை என்பதால், வாக்கெடுப்பை புறக்கணிப்பதே அவர்களுக் குள்ள ஒரே வழி என்று அர சியல் ஆய்வாளர்கள் தெரிவித் துள்ளனர். (ச)

பிரதமர் பதவியில் மாற்றம் இல்லை

பொதுத் தேர்தலுக்கு முன்னர்

கொழும்பு.ஜூன் 16

பொதுத் தேர்தலுக்கு முன்னர் பிரதமர் பதவியில் மாற்ற மில்லை என்று சிங்களப் பத் திரிகையொன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

தற்போதைய பிரதமர் டி.எம். ஜெயரத்னவுக்குப் பதிலாக புதியபிரதமர்ஒருவரைநியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியி டப்பட்டிருந்தது. எனினும், பொதுத் தேர்தலுக்கு முன்ன தாக பிரதமர் பதவியில் மாற்ற மில்லை என்று ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அறிவித் துள்ளார். அவசரமாக பிரதமர் பதவியில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் கூறினார்.

இதேவேளை, அடுத்த மாதம் அமைச்சரவையில் திருத்தங் கள் செய்யப்பட உள்ளதாக வெளியான தகவல்களிலும் உண்மையில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

கொள்ளையுடன் தொடர்புடைய இருவர் கைது

கொழும்பு.ஜூன் 16

கொள்ளைச் சம்பவங்கள் உள் ளிட்ட பல குற்றச்செயல்களு டன் தொடர்புடைய இருவர் களுத்துறை குற்றத்தடுப்பு பிரி வினரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

எல்பிட்டிய மற்றும் கினியாவல பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்க ளுக்கு அமைய மேற்கொண்ட தேடுதலின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்படும்போது சந்தேகநபர்களிடமிருந்து, கொள்ளையிடப்பட்ட தங்க நகைகளை அடகு வைத்ததற் கான அடகுச் சீட்டுக்கள், துப் பாக்கி மற்றும் மோட்டார் சைக் கிள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)

நகைப்புக்குரியது நாடாளுமன்ற விவாதம்

ஐ.தே.க. தெரிவிப்பு

லக்ஸ்மன் கிரியெல்ல

கொழும்பு.ஜூன் 16

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் ஆணை யாளர் நவநீதம்பிள்ளையால் நியமிக்கப்பட்டுள்ள விசார ணைக் குழுவுக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் நாடாளுமன்றில் நடத்தப்படும் விவாதம் நகைப்புக்குரியது என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் சிரேஷ்ட துணைத்தலை வர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விசாரணைகளுக்கு ஒத்து ழைப்பு வழங்குவதில்லை என்று அரசு ஏற்கனவே தீட்ட வட்டமாக ராஜதந்திர ரீதியில் அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனி வாவுக்கான இலங்கைப் பிரதி நிதி ரவிநாத் ஆரியசிங்க, ஐக் கிய நாடுகள் மனித உரிமை சபையின் தீர்மானத்தை உத்தியோகபூர்வமாக எதிர்த்தி ருந்தார்.

இவ்வாறான ஓர் பின்னணி யில் விசாரணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவ ளிப்பதா, விசாரணைக்குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பதா என்பது குறித்து நாடாளுமன் றில் விவாதம் நடத்தி தீர்மா னம் நிறைவேற்றுவது நகைப் பிற்குரியதும், கால நேரத்தை விரயமாக்குவதுமான நடவ டிக்கையாகவுமே நோக்கப்பட வேண்டும்.

எதிர்க்கட்சிகளின் கருத்துக்க ளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மதிப்பளித்திருந் தால், கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை அமர்வுகளுக்கு முன்ன தாக சகல கட்சிகளினதும் கருத்தை கேட்டறிந்து செயற் பட்டிருக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன் னதாகவே ஏதேனும் நடவ டிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

போர்க் குற்றச்செயல் விசார ணைகளை முற்று முழுதாக நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சும், ஜெனிவா பிரதிநிதி யும் அறிவித்துள்ள நிலையில், ஏனைய கட்சிகளின் நிலைப் பாடு அவசியமற்றது.

அரசு திடமான தீர்மானம் ஒன்றை எடுத்துள்ள நிலை யில் இவ்வாறு நாடாளுமன் றில் விவாதம் நடத்தி பொது மக்களின் பணத்தையும் நேரத்தையும் விரயம் செய் வதில் அர்த்தமில்லை.

அரசின் தூரநோக்கற்ற கொள் கைகள் மற்றும் எதேச்சதிகார போக்கினால் பல்வேறு சிக் கல்கள் ஏற்பட்டுள்ளன.

அரசின் எதேச்சதிகார தீர்மா னங்களால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகளுக்குநாடாளு மன்றின் ஊடாக நியாயம் கற்பிக்க மேற்கொள்ளும் முயற் சியாகவே இந்தத் தீர்மா னத்தை கருத வேண்டும்.

எதிர்க்கட்சிகளின் நியாயமான ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கும் அரசு, அவ் வாறு ஆலோசனை வழங்கு வோரை துரோகி முத்திரை குத்தி உதாசீனம் செய்து வருகிறது-என்றார். (ச)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வறுமை நிலையில் வீழ்ச்சி

அரச அதிபர் சார்ள்ஸ் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜூன் 16

வறுமைநிலையில் 25 ஆவது இடத்திலிருந்த மட்டக்களப்பு மாவட்டம் தற்போது 21 ஆக குறைக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் சமுதாய அடிப்படை வங்கித் திறப்புவிழா மட்டக்களப்பு. எருவில் கிராமத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து மாதாந்தம் 200 மில்லியன் ரூபா மது பாவனைக்காக செலவு செய்யப்பட்டு வருகின்றது.

மறுபுறம் இங்கு வெளிநாட்டுப் பால்மாக்கள் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

வளங்கள் இருந்தும் வெளி மாவட்டங்களிலிருந்து பல

பி.எஸ்.எம்.சார்ள்ஸ்

வேறு பொருள்கள் நுகர்வுக் காகக் கொண்டு வரப்படுகின்றன. இந்த மாவட்டத்தை விட்டு மக்களின் நிதிவளம் தேவையற்ற முறையில் வெளியே செல்கிறது. அவற்றைத் தவிர்க்க வேண்டும். மக்கள் தேவையற்ற விடயங்களுக்கு பணத்தைச் செலவு செய்வதனை நிறுத்த வேண்டும்.

மக்களிடம் இது சம்பந்தமான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். பெண்கள் குடும்பத்தின் ஆதாரமாகச் செயற்பட வேண்டும் -என்றார். (ச)

முதல்வருக்கு எதிரான கோரிக்கை நிராகரிப்பு

விசாரணை நடத்த ஜனாதிபதி தீர்மானம்

திருகோணமலை,ஜூன் 16

கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிரான கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சரை பதவியிலிருந்து நீக்குமாறு கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள்சிலரால் எழுத்து மூலம் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்தக் கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

முதலமைச்சர் செயற்றிறன் இன்றி செயற்பட்டு வருவதாகவும், உதாசீனமான கொள்கைகளை கடைப்பிடிப்பதாகவும் உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

எனினும் மாகாணசபை உறுப்பினர்களின் கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்துள்ளார் என்று சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

மஹிந்தராஜபக்ஷ

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்டன் அரசு ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டின் அடிப்படையில் முதலமைச்சர் மஜித்தின் பதவிக் காலம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் நிறைவடையவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ்,ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் தலா இரண்டரை ஆண்டுகள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை வகிப்பது என்று இணக்கம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி வாரம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் அம்பாறை மாவட்ட திட்டமிடல் செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி வாரம் எதிர்வரும் 18ஆம்திகதி முதல்25ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக அரச அதிகாரிகளை அறிவுறுத்தும் செயலமர்வு அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.அன்வர்டீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் நீல் டி அல்விஸ் கலந்து கொண்டு இது தொடர்பான விளக்கங்களை வழங்கினார். இந்த அபிவிருத்தி வாரத்தை முன்னிட்டு பிரதேச செயலகங்களுக்கிடையிலான போட்டியொன்றும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. (ச)

பரிசோதனையில் சுகாதார பரிசோதகர்கள்

உணவகங்களில் திடீர் பரிசோதனை

அட்டாளைச்சேனை,ஜூன் 16

அட்டாளைச்சேனை பிரதேச உணவகங்களில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது நுகர்வுக்கு தவாத பல உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன என்று மாவட்ட மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் பி.பேரம்பலம் தெரிவித்தார்.

இந்த திடீர் சுற்றிவளைப்பின் போது அழுகிய மரக்கறிகள், காலம் கடந்த நூடில்ஸ் பொதிகள், கொத்துரொட்டி செய்வதற்காக சுகாதாரமற்ற முறையில் வெட்டப்பட்டு வைக்கப்பட்டிருந்த ரொட்டித்துண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மனித நுகர்வுக்குதவாத உணவுப் பொருள்களை வைத்திருந்த தேநீர்க்கடை ஒன்றை ஒரு மாதகாலத்துக்குத் திறப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன், இனம் காணப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து பிரதேச பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச)

கால்நடைகளுக்கு கால்வாய் தொற்று

அம்பாறை,ஜூன் 16

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த இரண்டு வாரங்களாக கால்நடைகளுக்கு மீண்டும் கால்வாய் நோய் தொற்றியுள்ளது என்று திருக்கோவில் பிரதேச கால்நடைகள் வைத்திய அதிகாரி டி.கோகுலதாஸ் தெரிவித்தார்.

இந்த நோய்த் தொற்றையடுத்து மாடுகளில் பால் கறப்பது மற்றும் மாடுகளை ஏனைய பகுதிகளுக்கு விற்பனை செய் தல் அல்லது மாற்றுதல் போன்ற நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டாம் என்று பண்ணையாளர்களுக்கு

கோப்புப்படம்

உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

அம்பாறை மாவட்டத்தில் ஏனைய சில பிரதேசங்களில் கால்வாய் தொற்று ஏற்பட்டுள்ளதால் வேறு பகுதிகளில் இருந்து கால்நடைகள் இ[illegible] பகுதிக்கு எடுத்து வருவது தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ளது என்று மேலும் அவர் குறிப்பிட்டார். (ச)

INVITATION FOR BIDS
TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

Work/Service Details	Non - refundable Deposit (Rs.) (Bid fee)	Security Deposit (Rs.)	Validity Period of Bid Security (Days)	Approximate Direct cost of the work (Rs.In million)	Minimum ICTAD Grade
Aluminium Partition in JICA Buildings Stores	500.00	7,000.00	90	0.31	C10
Renovation of Toilets in Ward No 07 & 08	500.00	36,000.00	90	1.7	C9

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 17.06.2014 up to 24.06.2014 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 15.00 hrs on 25.06.2014, late bides will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders representatives who choose to attend.

Director (Chairman), Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
16.06.2014

(இ14774)
(12.3.6)

அகவை வாழ்த்து

யா/சண்முகலிங்காய் இந்துக் கல்லூரி
பிரதி அதிபர்
இளையதம்பி ஆனந்தநடராசா
அவர்களின் மணிவிழா



எனக்குத் தமிழ்ப்பால் ஊட்டிய தந்தையே!
நீங்கள் பழகப் பழகப் புளிக்காத பால்
வானுயர்ந்த உங்கள் சேவையைப்
பாராட்டி வாழ்க இன்னும்
வளமுடன் என்று வாழ்த்துகின்றேன்.

உங்கள் அன்புள்ள, எஸ்.தயாளன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
ஆட்பதிவு திணைக்கள கிளைப் பணிமனை,
பிரதேச செயலகம்,
வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய்.

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மணிக்கூட்டு வீதி, BMC ('New Victors Building') ஒழுங்கையில் இலக்கம்: 27/2 இல்,(BMC கட்டடத்துக்கு பின்புறம் மூன்றாவதாக), அமைந்துள்ள நிலப்பரப்பு1½ v.e (2.5p.c.நெற்பரப்பு) அளவுடைய காணி விற்பனைக்குண்டு. இக்காணியில் நன்னீர்க் கிணறும்,Toilet-pit, "Goods-stores"அல்லது வீடாகத் திருத்தி அமைக்கக்கூடிய பாதிப்புற்ற கட்டடமும் அடக்கம்.

(42854)(5.6.3)

தொடர்பு: 077 356 1991

கல்விக்கான ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2005 பழைய மாணவர்களால் கல்விக்கான ஊக்குவிப்பு நடவடிக்கை கடந்த வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2005 பழைய மாணவர்களின் முதல் நடவடிக்கையாக முல்லைத்தீவு மாவட்டம் வன்னி விளாங்குளம் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு ஒரே நேர ஆரோக்கிய உணவு வழங்குவதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பிறந்த தினம் வருகின்ற மாதத்தில் ஒவ்வொருவராக பொறுப்பேற்று அந்தத் திட்டம் நடைபெறுகின்றது.

இரண்டாம் கட்ட நடவடிக்கையாக கிளி- பூநகரி, ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தாய் மற்றும் தந்தையை இழந்த இரு மாணவர்களுக்கு சைக்கிள்கள், பத்து மாணவர்களுக்கு கல்வி பயிலுவதற்கான ஊக்குவிப்புப்பணத்தொகை வழங்கப்பட்டன.

அத்துடன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 2005 பழைய மாணவர்களால் கல்லூரியின் 2012 பரிசளிப்புவிழாவின் போது மூன்று லட்சத்து முப்பதாயிரம் ரூபா பெறுமதி யான புத்தகங்கள் வழங்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

பாடசாலை மாணவருக்கு சைக்கிள்கள் வழங்கிய போது...

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் ஆறுமுகம் ஜெயபாலன்

தோற்றம்
12.04.1954

மறைவு
19.05.2014

அப்பா! எம்மை விட்டு எங்கே சென்றீர்கள்?
பிரிவுத் துயரில் தவிக்கின்றோம் நாங்கள்
தங்களின் இன்முகத்தைக் காணாது
தினமும் கலங்கி நிற்கின்றோம்
நாங்கள் மட்டுமல்ல
உற்றார், உறவினர் அனைவருமே
உங்கள் பிரிவால் பரிதவித்து நிற்கின்றனர்
தாங்கள் காட்டிய பாசம், பிரிவு
பரோபகாரம், உதவிகள் அனைத்தையும்
எவர்தான் எளிதில் மறந்துவிடுவர்!
உங்கள் ஆத்மா இறைவனடி சேர
இரந்து வேண்டி நிற்கின்றோம் தினமும்

கடந்த 19.05.2014 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் ஆறுமுகம் ஜெயபாலன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.06.2014) திங்கட்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (18.06.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவர் இயற்கை எய்தியதை அறிந்ததும் நேரில் சமூகமளித்த உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும் மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் யாழ்.போதனா வைத்தியசாலை 10 ஆம் விடுதி மருத்துவர்கள், தாதியர்கள், சிற்றூழியர்களுக்கும் பல்வேறு விதத்திலும் தேவையான உதவிகளைப் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.

பழைய பாடசாலை வீதி,
குகன் மில் அருகில்,
கல்வயல், சாவகச்சேரி.

மனைவி, மகன் மற்றும்
உறவினர்கள்.

நடமாடும் ஆயுள்வேத மருத்துவ சேவை

மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட நடமாடும் மருத்துவப் பிரிவினால் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் பிரதி செவ்வாய், சனி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடமாடும் ஆயுள்வேத மருத்துவசேவைநடத்தப்பட்டு வருகின்றது. பிரதேச மக்கள் இந்தச் சேவையினூடாகப் பயன் பெறலாமெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

பரதநாட்டிய ஆசிரியர்களுக்கு செயலமர்வு

வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களுக்கான பரத நாட்டியத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களுக்கான செயலமர்வுஇன்றும்நாளையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை மகரமையில் உள்ள தேசிய கல்வி நிறுவனத்தில் நடைபெறஉள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.ராசேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக வடமாகாணத்தில் 12 கல்வி வலயங்களிலிருந்தும் குறித்த பாடத் துக்குரிய அழகியற்பாட ஆலோசகர் உட்பட ஒவ்வொரு கல்வி வலயத்திலிருந்தும் தலா 5 ஆசிரியர்கள் முதல் 60 பேர் வரை தெரிவு செய்யப்பட் டுள்ளனர். பரத நாட்டியத்தை புதியபாடத்திட்டமாக அறிமுகம் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-500)

அரச பணியில் இருந்து இளைப்பாறல்

பளை, ஜூன் 16

பச்சிலைப்பள்ளி பிர தேச சபையில் செய லாளராகக் கடமை யாற்றிய சி.சிவப்பிர காசம் கடந்த வாரம் 25 வருட அரச பணி யிலிருந்து ஓய்வு பெற் றுள்ளார். (வ-9)

மரண அறிவித்தல்

ஏரம்பு சீவரத்தினம்

வேலணை மேற்கு முழப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும்திருகோணமலை சாம்பல்தீவு மாங்கணாய் அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு சீவரத்தினம் நேற்று (15.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏரம்பு - அமிர்தம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற காமாட்சி அம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கௌரி அம்மா மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரனும் அமிர்தவல்லி, காலஞ்சென்ற திருலோகநாதன் மற்றும் சிவகௌரி, தாண்டவநாத குருக்கள், காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் சபாநாதன், வள்ளிநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினேஸ்வரக்குருக்கள், தியானந்தராசா குருக்கள், தியாகேஸ்வரி, பானு மதி, ரவீந்திரன் ஆகியோரின் மாமனும் விக்கினேஸ்வரன், ஜெயந்தி, ஸ்ரீ அழகேஸ்வரி, சுந்தர மனோகரன், பரமேஸ்வரா, சாந்தினி, சாந்திமதி, இராஜேஸ்வர குருக்கள், மகேஸ்வரா, சிவதர்சினி, தனுஜா, கோகுலன், கஜலக்ஷன், பிரசாத், கஜேந்திரா, கீர்த்தனா ஆகியோரின் பேரனும் உமாசுதன், கஜானன், விதுஷன், ஜெயகரன், மதுரன், கீதசாயி, அஞ்சனா, முகிலன், திவானிகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2014) திங்கட்கிழமை திருகோணமலை சாம்பல்தீவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் சாம்பல்தீவு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லண்டை,
தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்:
வே.தியானந்த ராசாக் குருக்கள்
(மருமகன்)
0779565509

ஈரவிழிகளுடன்
31ஆம் நாளில்

கிருஷ்ணன் ஆனந்தக்குமார்

[தங்கப்பழம்]

உரிமையாளர், மோட்டார் ஊர்தி தீர்த்தகம்
கோப்பாய்-உரும்பிராய்

தாயின் அணைப்பில்
24.11.1961

காலனின் பிடியில்
17.05.2014

17.05.2014 அன்று எமது குடும்பத்திற்கு நேர்ந்த துயர் அறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்து, ஆறுதல் வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், தொலைபேசியூடாக எம்மை ஆற்றுப்படுத்தியோர், வெளிநாடுகளிலிருந்து அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டோர், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோர், சகலவிதத்திலும் உதவி புரிந்த அத்தனை உறவுகளையும் நன்றியுணர்வுடன் நோக்குகின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 14.06.2014 சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன.

இன்று (16.06.2014) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வபுரம், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். குடும்பத்தினர்

(49065)(7.6.3)

தசாக கிருஹயஜ்ஞ ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

கடந்த (08.06.2014) ஞாயிற்றுக்கிழமை சிவபதமந்தமடைந்த

சிவஸ்ரீ நடராஜ ஐயர் கணேசராஜக்குருக்கள்

(அத்தியடி பிள்ளையார் கோயில் பிரதம குரு)

அவர்களின் தசாகம் நாளை (17.06.2014)
செவ்வாய்க்கிழமை காலை 9 மணி
கிருஹயஜ்ஞம் 20.06.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி
ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் சனிக்கிழமை
காலை 11 மணியளவில் அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில்
நடைபெறும். அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் அன்பு
உள்ளம் கொண்ட அனைவரும் இந்த அழைப்பை ஏற்று
கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அத்தியடி பிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 9450

மனைவி க.நித்தியந்தினி
மற்றும் குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

வல்லிபுரம் கந்தசாமி

(முன்னாள் காசாளர் யாழ்ப்பாணம் ப.நோ.கூட்டுறவுச் சங்கம்)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொட்டடியை வாழ்விடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான வல்லிபுரம் கந்தசாமி நேற்று (15.06.2014) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கொட்டடி வல்லிபுரம் - பாக்கியம் தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான வேலணை கிழக்கு வை.நாகலிங்கம் - பராசக்தி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், துரைசிங்கம், பரமேஸ்வரி, இரத்தினசிங்கம், காலஞ் சென்றவர்களான ரூபசிங்கம், சிவமணி, சாரதா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2014)செவ்வாய்க்கிழமை 241 ஆஸ்பத்திரி வீதி பீரிஸ் மலர்ச்சாலை களுபோவல - கொழும்பில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் பகல் 12.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

தகவல்: க.இறைவன் பெறாமகன் - கொழும்பு
நா.துரைசிங்கம் (கஷியர்) மைத்துனன் - யாழ்ப்பாணம்.

(G/14789)

ஏறாவூரில் இஞ்சிச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றதைக் காணலாம்.

களுத்துறையில் மண்சரிவு அபாயம்; 320 குடும்பங்கள் வெளியேற்றம்

தேசிய கட்டட ஆய்வு நிலையம் உத்தரவு

கொழும்பு,ஜூன்16

களுத்துறை மாவட்டத்தின் மண் சரிவு அபாய எச்சரிக்கை காணப் படும் பகுதிகளில் உள்ள 320 குடும்பங்களை சேர்ந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு தேசிய கட்டட ஆய்வு நிலையம் உத்தரவிட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் பெய்த கடும் மழையின் பின்னர் மண் சரிவு அபாய எச்சரிக்கை காணப் படும் பகுதிகளில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளின் படி இந்த உத் தரவு விடுக்கப்பட்டது என்று மண் சரிவு மற்றும் இடர்முகாமைத்துவ பிரிவுப் பணிப்பாளர் ஆர்.எம். எஸ். பண்டார தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் களுத் துறையில் ஏற்பட்ட மண்சரிவால் 9 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அவர் கூறினார்.

இதேவேளை-

களுத்துறை மாவட்டத்தின் சில பகுதிகள் அதி எச்சரிக்கை வலய மாக அடையாளம் காணப்பட் டுள்ளது. அந்தப் பிரதேசங்கள் தொடர்பில் அவதானம் செலுத் தப்பட்டு வருகிறது என்று அவர் மேலும் கூறினார்.

(ச)

பள்ளிவாசல்கள் உடைப்பு; பணம்;பொருள்கள் திருட்டு

மட்டக்களப்பு,ஜூன்16

ஓட்டமாவடியில் இரண்டு பள்ளிவாசல்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம் பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி அல் மஸ்ஜிதுல் ஸலாம் பஸார் பள்ளிவாசல் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதி காலை உடைக்கப்பட்டு அங்கிருந்த பணமும், பொருள்களும் திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

உடைக்கப்பட்ட பள்ளிவாசல்

பள்ளிவாசலினுள் உள்ள பள்ளிவாசல் நிர்வாக அலுவலகம் மற்றும் பள்ளிவாசலில் கடமை புரிபவர்களின் அறைகள் என்பன உடைக்கப் பட்டுள்ளன. எனினும் அதனுள் இருந்து பொருள்கள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி அல் மஸ்ஜிதுல் ஸலாம் பஸார் பள்ளிவாசலின் உண்டியல் நான்காவது முறை யாக உடைக்கப்பட்டு அதிலிருந்து பணமும் திருடப்பட்டுள்ளது.

இதேவேளை- மேலும் ஓட்ட மாவடி முஹைதீன் ஜீம்ஆ பள்ளிவாசல் வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் கண்ணாடி உடைக்கப்பட்டு அதிலிருந்து டிஜிட்டல் கமரா , சார்ஜர் டோச் லைட் ஒன்றும் திருடப்பட்டுள் ளன என்று வாகன உரிமை யாளர் ஜே.எச்.எம்.ரினாஸ் வாழைச்சேனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தூர இடங்களில் இருந்து வியா பாரத்துக்காக வருபவர்கள் ஓட்டமாவடி முஹைதீன் ஜீம்ஆ பள்ளிவாசலில் வாடகைக்கு அறைகள் எடுப்பது வழக்கம். அந்த வகை யிலேயே திஹாரியில் இருந்து இரும்புக் கடைகளுக்கான வியாபாரப் பொருள்களை கொண்டு வந்து நேற்றுமுன்தினம் சனிக் கிழமை இரவு தங்கியவர்களின் லொறியிலேயே உடைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் இரண்டும் நேற்று அதிகாலை 3 மணி தொடக்கம் 3.30 மணிக்குள் இடம் பெற்று இருக்கலாம் என்று ஆரம்ப விசாரணை களில் இருந்து தெரிய வந்துள்ளது என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

(ச)

இதுவரை தீர்மானம் எதுவும் இல்லை

கொழும்பு,ஜூன்16

ஜனாதிபதி தேர்தலில் ஆளும் கட்சிக்கு ஆத ரவளிப்பது குறித்து இன்னமும் தீர்மா னிக்க வில்லை என்று ஜாதிக ஹெல உறு மயகட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என் பதை இதுவரை தீர் மானிக்கவில்லைஎன அவர் குறிப்பிட்டார்.

அண்மைக்காலமாக அரசின் நடவடிக்கை களை ரத்ன தேரர் கடுமையாக விமர் சனம் செய்து வருகின் றமை குறிப்பிடத் தக்கது.

(ச)

சேவை நயப்பு

செல்லத்துரை குமாரசாமி

கலையரங்கில் கன காலம் சேவை செய்தே கலைவளர தனதுழைப்பை அர்ப்பணித்துக் கலைப்பீட உயர்வுக்காய் உழைத்து வளம்பெற்ற கண்ணியச் சேவையாளன்.

உத்தம பண்பாளன் குவலயத்தில் குறையேதுமின்றிக் குடும்பத்துடன் குதூகலமாய் - எங்கள் குமாரசாமி நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

கலைப்பீடாதிபதி அலுவலகம் மற்றும் மொழியியல் ஆங்கிலதுறையினர், யாழ். பல்கலைக்கழகம்.

(49072)(45.6.3)

Personal Class

தரம்: 3 முதல் A/L மாணவர்களுக்கு English Class உம் Spokenwith Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாடங்களும் ஒழுங்கு செய்துதரப்படும். (49069)(25.6.3)

தொடர்புகளுக்கு: மோகன், யாழ்ப்பாணம். T.P.077 836 1521

நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள்களான உயர்தர ஜேர்மன் செப்பேட் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொ.பே: 077 845 1363 (49071)(7.6.3)

தொழில் புரிபவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள்

நவீன உலகின் சவால்களைச் சந்திக்கக்கூடிய மொழித்திறன்களுடன் கூடிய அடிப்படைக் கற்கைநெறி.

ஆற்றலும், அநுபவமும் மிக்க ஆசிரியர்களைக் கொண்டு நடாத்தப்படவுள்ளது.

கற்கை நெறியின் முடிவில் பெறுமதி மிக்க சான்றிதழுடன், சர்வதேசத் தராதரத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய பரீட்சைகளுக்கான வழிகாட்டுதல்களும் வழங்கப்படும்

குறுகிய காலத்தில் பேச்சுப் புலமையுடன் ஆங்கிலத்தில் தகைமை பெறும் அரிய வாய்ப்பு

மாணவர் வசதிக்கேற்றவாறு வார இறுதி நாட்கள், மற்றும் இரவு நேர வகுப்புக்கள்

கற்கைக் கட்டணம் 6,500/= மட்டுமே

விவரங்களுக்கு :

GATEWAY Language Centre

GATEWAY LANGUAGE CENTRE

#347, Kasthuriyar Road, Jaffna. phone : 021 567 5555

(51475)

கனடா ஜெயசாயி சூப்பர் சென்ரர்

இடம் மாற்றுவதை முன்னிட்டு 15.06.2014 முதல் இருப்பகற்றல்.

கொள்வனவு செய்யும் அனைத்து விதமான ஆடைகளையும் அதன் விலையில் இருந்து ½ வாசி விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P : 021 221 9393

வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான

கேள்வி விலை கோருதல்

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம், யாழ்ப்பாணம்

பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி மற்றும் வவுனியா/முல்லைத்தீவு நிறைவேற்று எந்திரி அலுவலகம் ஆகியவற்றின் பாவனைக்கு வாடகை அடிப்படையில் வான் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரலை இல.40, றக்கா லேன், சுண்டிக்குளியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 2014.06.24ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னராக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எந்திரி.செ.மோகனதேவன், தலைவர், பெறுகைக் குழு, கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், இல.40, றக்கா லேன், யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம்: 021 320 2638/021 222 8091

(P14775)(12.3.6)

யாழ்ப்பாணம், பண்ணைக் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மகிழ்விடம் மாணவர்கள் உல்லாசமாக பொழுதைக் கழிப்பதற்காகவா...? எங்கள் பிள்ளைகளின் கல்வி நிலை...? (வ-21)

பட்டப் பகலில் வீடுடைத்து திருடியவர் மாட்டினார்

தென்மராட்சி, ஜூன் 16

கொடிகாமம் கச்சாய்ப் பகுதியில் பட்டப் பகலில் வீடுடைத்து 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றை திருடிய நபரை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையினால் குறித்த நபரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் வெள்ளிக்கிழமை முற்படுத்தினர்.

வழக்கினை விசாரித்த நீதிவான் இந்த நபரை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-9)

புற்றுநோய் கிளினிக் மீண்டும் நடத்தப்படுமா?

சாவகச்சேரி மருத்துவமனையில்

தென்மராட்சி, ஜூன் 16

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மீண்டும் புற்றுநோய் கிளினிக் நடத்தப்படுமா என்று பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் மாதத்தில் பிரதி புதன்கிழமைகளில் யாழ். போதனா மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சை நிபுணரால் கிளினிக் நடத்தப்பட்டு வந்தது. குறித்த மருத்துவ நிபுணர் இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நடத்தப்பட்டு வந்த கிளினிக்கும் நிறுத்தப்பட்டது. இதனால் தென்மராட்சி பிரதேச மக்கள் கிளினிக்குக்காகயாழ்.போதனா மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மீண்டும் புற்றுநோய் கிளினிக்கை ஆரம்பித்தால் தென்மராட்சி பிரதேச மக்களுடன் பூநகரி, பளை, வட்மராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

அருள் வாக்கின் மூலம் அகப்பட்டான் திருடன்

வடமராட்சி கிழக்கில் சம்பவம்

தென்மராட்சி, ஜூன் 16

கடந்தவாரம் ஆலயமொன்றில் இடம்பெற்ற திருட்டு அருள் வாக்கின் மூலம் தெரியவந்து திருடன் அகப்பட்டான்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இயக்கச்சி முகாவில் பகுதியில் உள்ள திரியாய் அம்மன் ஆலயத்தில் கடந்தவாரம் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருட்டுப் போயுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

வடமராட்சி கிழக்கு ஆழியவளைப் பகுதியில் உள்ள இளம் யுவதிக்கு திடீரென அம்மன் அருள் வந்து வாக்குச் சொல்லியதால் பலர் அவரது வீட்டில் கூடியிருந்தனர். அவ்வேளையில் அங்கு வந்த பக்கத்து வீட்டு இளைஞனைப் பார்த்து எனது ஆலயத்தில் கடந்த வாரம் உண்டியல் உடைத்துக் களவெடுத்துள்ளாய். உடனடியாகப் பணத்தை அங்கு கொண்டு வந்து வை. இல்லையென்றால் எனது கோபத்துக்கு உள்ளாவாய் என அந்த யுவதி அருள்வாக்கு கூறியுள்ளார்.

அங்கு நின்ற மக்கள் இளைஞரைப் பிடித்து விசாரித்தபோது உண்மையை ஒத்துக் கொண்டதுடன் ஆலயத்தில் பல தடவைகள் திருட்டில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அந்தப்பகுதி மக்கள் இளைஞரைப் பிடித்து பளைப் பொலிஸாரை வரவழைத்து கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாகப் பளைப் பொலிஸ் நிலையத்தைத் தொடர்பு கொண்டபோது, பொதுமக்கள் கொடுத்த தகவலின் பிரகாரம் அங்கு சென்று திருடனைக் கைது செய்துள்ளதாகவும் அவரைக் கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் முற்படுத்த வுள்ளதாகவும் தெரிவித்தனர்.

முகாவில் திரியாய் அம்மன் ஆலயம் தனியான பற்றையான பகுதியில் அமைந்துள்ளதால் அங்கு சன நடமாட்டம் குறைவு. இதனால் பல தடவைகள் அங்கு திருட்டு இடம்பெற்றதாகவும் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆலய உட்பிரவாகத்திலுள்ள சென்ற திருடர்கள் மூலஸ்தான விக்கிரகத்தை அப்புறப்படுத்தி விக்கிரகத்துக்கு கீழே வைக்கப்பட்டிருந்த ஐம்பொன் தகட்டை த திருடிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

பரு.மத்தியஸ்த சபையில் 320 பிணக்குகள் பதிவாகின

கரணவாய், ஜூன் 16

பருத்தித்துறை மத்தியஸ்த சபையிடம் இதுவரை பிணக்குகள் தொடர்பான 320 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றுக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளன.

பருத்தித்துறை மத்தியஸ்த சபை கடந்த 2012 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு இன்றுவரை இயங்கி வருகின்றது. இதன் அமர்வுகள் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமைகளில் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து சுமார் 320 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் குடும்பப் பிணக்குகள், பணக் கொடுக்கல் வாங்கல் பிணக்குகள், காணி மற்றும் காணியின் எல்லை சம்பந்தமான பிணக்குகள் என்பவையே அதிகளவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸாரால் பாரப்படுத்தப்படும்

> நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸாரால் பாரப்படுத்தப்படும் சாதாரண பிணக்குகள் பருத்தித்துறை மத்தியஸ்த சபையிடம் ஒப்படைப்பு.

சாதாரண பிணக்குகள் பருத்தித்துறை மத்தியஸ்த சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்தப் பிணக்குகள் மத்தியஸ்த சபையால் தீர்த்தும் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - பருத்தித்துறை மத்தியஸ்த சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்துள்ளதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் 21 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட குறித்த சபை தற்போது 9 பேருடன் மட்டுமே இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-10)

சொந்த இடத்தில் மீண்டும் குடியமர வேண்டி வழிபாடு



பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டோர்.

வலி. வடக்கு, ஜூன் 16

வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து 25 வருடங்கள் நேற்றுடன் நிறைவு பெற்றுள்ளதையிட்டு தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்ப இறைவன் அருள் கிடைக்க வேண்டும் என்று கோரி வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் நேற்று மதியம் பகல் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

வலி. வடக்கு மீளக்குடியமர்வோர் சங்கத்தின் தலைவர் கே. குணபாலசிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந்த பூசை வழிபாட்டில் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (வ-86)

வேலணையில் சந்தை உடற்பயிற்சி நிலையம்

அடிக்கல் நடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 16

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேசத்தில் பிரதேச பொதுச் சந்தை, உடற் பயிற்சி நிலையம் ஆகியவற்றுக்கான அடிக்கல்நடும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கட்டடங்களுக்கான அடிக்கல்லை நட்டார்.

பொதுச் சந்தைக்கு ரூபா 14 மில்லியனும், உடற்பயிற்சி நிலையத்துக்கு ரூபா 11 மில்லியனும் செலவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மீரா திசை நாயகம்பிள்ளை, உதவி உள்ளூராட்சிஆணையாளர் கொன்ரக்ரஸ் ஜக்கில், யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-7)

கூடு பொருத்தி இறால் பிடிக்கத் தடை விதிப்பு

கோயிற் குடியிருப்பு கடற்றொழிலாளர் சங்கம் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இறால் கூடு பொருத்தி இறால் பிடிக்கத் தடை விதித்த தீர்மானத்தை சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு கடற்றொழிலாளர் சங்கம் தவிர்ந்த ஏனைய கடற்றொழிலாளர் சங்கங்கள் ஏற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடாக் கடல் பகுதியில் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டுவந்த கடல் மற்றும் கடலோரியில் இறால் கூடுகள் பொருத்தி இறால் பிடிப்பதை ஜூலை முதலாம் திகதி தொடக்கம் தடை செய்வது தொடர்பாக புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

> நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த கடல் மற்றும் கடலோரியில் இறால் கூடுகள் பொருத்தி இறால் பிடிப்பதை ஜூலை முதலாம் திகதி தொடக்கம் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் உட்பட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-1)

கழிவகற்றல் ஒழுங்காக இடம்பெறாததால் சிரமம்

குப்பையால் நிரம்பி வழியும் கூடை

கிளிநொச்சி.ஜூன் 16

கிளிநொச்சி நகரில் கழிவகற்றல் ஒழுங்காக இடம்பெறாதால் வீதிகளில் பயணிக்கும் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

அரச அலுவலகங்கள், வீதிகள், மருத்துவமனை எனப் பொது இடங்களில் கழிவுக் கூடைகள் வைக்கப்பட்ட போதிலும் அந்தக் கூடைகளில் கழிவுப் பொருள்கள் நிரம்பி வழிவதனை காணக் கூடியதாகவுள்ளது என்று மக்கள் கூறினர்.

கிளிநொச்சி நகரத்தில் பல இடங்களில் கழிவுக் கூடைகள் நிரம்பி வழிவதால் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று மக்கள் தெரிவித்தனர்.

> பல இடங்களில் கழிவுக் கூடைகள் நிரம்பி வழிவதால் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி நகரில் கழிவகற்றலில் கரைச்சி பிரதேச சபை மந்தகதியில் செயற்படுகிறது என்று பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ச-18)

மதுபானசாலையை வேறிடத்துக்கு மாற்றுக

கோருகின்றனர் மக்கள்

முல்லைத்தீவு.ஜூன் 16

ஒட்டுசுட்டான், வெடுக்குநாறியில் உள்ள மதுபானசாலையை வேறு இடத்துக்கு அகற்றவேண்டும்என்றுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ள மதுபானசாலையால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே இந்த மதுபானசாலையை வேறு இடத்துக்கு மாற்ற சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-500)

பாடசாலைக்கென பஸ்ஸை சேவையில் ஈடுபடுத்துக

பெற்றோர் வேண்டுகோள்

முல்லைத்தீவு. ஜூன் 16

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள மாணவர்களுக்கான பாடசாலை பஸ் சேவையை விரைவில் ஏற்படுத்த வேண்டும் என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் மற்றும் கற்சிலைமடு, பேராறு பாடசாலைகளுக்குச் செல்லும் முத்துஐயன்கட்டு, கெருடமடு, வசந்தபுரம், தட்டையர்மலை, கனக இரத்தினபுரம் பண்டாரவன்னியன், கற்சிலைமடு போன்ற பல கிராமங்களிலிருந்து மாணவர்கள் சுமார் 4 கிலோமீற்றர் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

ஆனால் பாடசாலை முடிந்து வீடு செல்லும்போது பல சிரமங்களை மாணவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். மாணவர்களை சில பஸ்கள் ஏற்றாது செல்கின்றபோது அவர்கள் டிப்பர், உழவு இயந்திரங்களிலும் ஏறிச் செல்கின்றனர்.

அதனால் மாணவர்கள் ஆபத்துக்களை எதிர்கொள்ள நேரிடலாம் என்று பெற்றோர் கூறினர்.

எனவே ஒட்டுசுட்டான் பாடசாலை மாணவர்களுக்கென பாடசாலை பஸ் சேவை இடம் பெற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றுபெற்றோர்கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-500)

மூடப்பட்டன ஐந்து கிளைகள்

ப.நோ.கூ.சங்கத் தலைவர் தகவல்

கிளிநொச்சி, ஜூன் 16

துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் உள்ள 17 கிளைகளில் 5 கிளைகள் மூடப்பட்டுள்ளன.

புத்துவெட்டுவான், திருநகர், பழைய முறிகண்டி, அம்பலப் பெருமாள்குளம், அமதிபுரம் கிளைகள் இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

போதிய அளவு இலாபம் கிடைக்காததால் 5 கிளைகள் மூடப்பட்டன என்று துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.பிறேமச் சந்திரன் தெரிவித்தார். (ச-18)

ஓய்வு பெற்ற அதிபர்களுக்கு கௌரவிப்பு

வவுனியா.ஜூன் 16

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் ஓய்வு பெற்ற அதிபர்களுக்கான கௌரவிப்பு விழா வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா தொழில் நுட்பக் கல்லூரியில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்களான கந்தையா கணேசமூர்த்தி, திருமதி லலிதாதேவி விஸ்வலிங்கம், வைத்தியலிங்கம் சத்தியநாதன் ஆகியோருக்கே இந்தக் கௌரவிப்பு விழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற அதிபர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு நினைவுச் சின்னப் பரிசில்களும் வழங்கப் பட்டன. (ச-402)

இரு பயிற்சிகள் விரைவில் ஆரம்பம்

கிளிநொச்சி.ஜூன் 16

மாற்றுவலுவுடையோருக்கு கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்லூரியில் இரு பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

கைத்தொலைபேசி திருத்தம், தையல் பயிற்சி நெறிகள் என்பன விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன என்று கல்லூரி தலைவர் ச.மோகனபவன் தெரிவித்தார். (ச-18)

குடும்ப விவரங்களை திரட்டும் இராணுவம்

மக்களிடையே பல்வேறு சந்தேகங்கள்

மன்னார்.ஜூன் 16

மன்னார் பெரிய கடை,உப்பளவீதி ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று குடும்ப விவரங்களை திரட்டி வருகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குச் செல்லும் இராணுவக் குழுவினர் வீட்டில் உள்ளவர்களின் விவரங்களை பதிவு செய்த பின்னர் வீட்டில் உள்ள ஒருவரிடம் கையொப்பத்தை பெற்றுக் கொள்ளுகின்றனர் என்று மக்கள் கூறினர்.

பொலிஸாரோ அல்லது கிராம அலுவலகரோ இல்லாத நிலையில் இராணுவம் தன்னிச்சையாக இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்று மக்கள் குறிப்பிட்டனர்.

> இராணுவத்தின் செயற்பாட்டால் அச்சமடைந் திருக்கும் மக்கள்.

வீடுகளுக்குச் செல்லும் இராணுவத்தினர் குடும்ப உறுப்பினர்களின் முழு விவரங்களையும் பதிவு செய்து கொள்வதோடு வேறு யாரும் வருகின்றார்களா, போகின்றார்களா என்ற கேள்விகளையும் கேட்கின்றனர் என்று மக்கள் தெரிவித்தனர்.

தற்போது சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் இராணுவத்தினர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன என்று மன்னார் மக்கள் தெரிவித்தனர். (ச-56)

வெடிபொருள் இல்லாததற்கான சான்றிதழ் வழங்கப்படவில்லை

கட்டடங்கள் அமைப்பதில் சிக்கல்

கிளிநொச்சி.ஜூன் 16

வவுனியா வடக்கு, கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் வெடிபொருள்கள் இல்லை என்ற சான்றிதழ் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதனால் புதிய கட்டடங்கள் நிர்மாணிப்பதால் இடர்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலையில் இரு மாதங்களுக்கு முன்பு மஹிந்தோதய ஆய்வு கூடம் அமைப்பதற்கு அத்திபாரம் வெட்டப்பட்டது. அதன்போது வெடிகுண்டு ஒன்று காணப்பட்டதாக தகவல் வழங்கப்பட்டது. அதனையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் வெடிகுண்டை மீட்டதுடன் கட்டட வேலைகளும் நிறுத்தப்பட்டு பாடசாலையில் முழுமையான வெடிபொருள் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

ஆனால் வெடிபொருள்கள் இல்லை என்றசான்றிதழ் அவர்களால் இதுவரை பாடசாலைக்கு வழங்கப்பட வில்லை.

1997 ஆம் ஆண்டு வவுனியாவில் இருந்து இராணுவம் மேற் கொண்ட ஜயசிக்குறு படை நடவடிக்கையின் போது இந்தப்பாடசாலை இராணுவ ஆயுதகளஞ்சியமாக பயன்படுத்தப் பட்டதால்பெரும் சேதங்களை எதிர்கொண்டுள்ளது.

இந்தப் பாடசாலை எதிர் காலத்தில் தரமுயர்த்தப்படுவதற்கு மஹிந்தோதய ஆய்வு கூடங்கள் உட்பட பல கட்டடங்கள் அமைக்கப்படுவது அவசியமாகும் என்று பெற்றோர்கள் தெரிவித்தனர். (ச-18)

யானை அட்டகாசம் தினமும் அதிகரிப்பு

கிளிநொச்சி.ஜூன் 16

வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பகுதியில் தினமும் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பகுதியில் தொடர்ந்தும் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

யானைகள் பெறுமதி வாய்ந்த பயிர்ச் செய்கைகளையும் பயன்தரும் மரங்களையும் அழித்து வருகின்றன என்று மக்கள் கூறுகின்றனர்.

நெடுங்கேணி மருதோடை, அரியாமடு ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் புகுந்து காட்டு யானைகள் சிறுபோக செய்கைகளை அழித்து வருகின்றன என்று மக்கள் கூறுகின்றனர்.

காட்டு யானைகளின் தொல்லையால் இரவில் கண் விழித்து அச்சத்துடன் வாழ வேண்டியுள்ளது என்று மக்கள் கூறினர்.

கோப்புப்படம்

காட்டு யானைகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

1,620 மில்லியன் ரூபா செலவில் இரண்டு தண்ணீர் தாங்கிகள்

அமைக்கப்படும் தண்ணீர்த் தாங்கி

கிளிநொச்சி.ஜூன் 16

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர்கள் பிரிவில் 1,620 மில்லியன் ரூபா செலவில் இரண்டு தண்ணீர்த் தாங்கிகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைப் பொறியியலாளர் தெரிவித்தார்.

ஜப்பான் அரசின் நிதியுதவி மூலம் இந்தத் தண்ணீர்த் தாங்கிகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர்கள் பிரிவுகளிலுள்ள 20 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் குடி தண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளும் பொருட்டே இந்த நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார்.

கண்டாவளைப் பிரதேசத்துக்கான தண்ணீர்த் தாங்கி பரந்தனிலும், கரைச்சி பிரதேசத்துக்கான தண்ணீர்த் தாங்கி டிப்போ சந்திப் பகுதியிலும் அமைக்கப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார். (ச)

தாழ்வு மனப்பான்மையும் பெண்களும்

> நாம் நினைப்பதெல்லாம் நடக்க வேண்டும் என்று யாரும் நினைக்கலாம். ஆனால் இதனைச் சாதிக்கத்தான் சிலருக்குத் துணிவு, தைரியம் என்பன இல்லாமல் போய்விடுகின்றது. இது நடக்குமா நடக்காதா? நம்மால் முடியுமா? இப்படி நினைத்து நினைத்தே தாழ்வு மனப்பான்மையை உறுதி செய்து கொள்கின்றனர்.

தாழ்வு மனப்பான்மையானது சிலர் பிறக்கும்போது கூடவே ஒட்டிப் பிறந்துவிடுகிறது. இது குழந்தைப் பருவம் முதல் ஆரம்பிக்கிறது என உளவியலாளர்கள் கூறுகின்றனர். இதற்கு மேலும் உரம் போடும் வகையில் சுற்றுச் சூழல் தாழ்வு மனப்பான்மைக்குச் சாதகமாக அமையும் பட்சத்தில் அது வேரூன்றி விருட்சமாக வளர்ந்து விடுகிறது.

பிறகு இதிலிருந்து மீண்டு வர முடியாமல் சுருங்கி வாழ்பவர்களும் தன்னைத்தானே தாழ்த்திக் கொண்டு வாழ்பவர்களும் என அனேகமானவர்கள் நம்மத்தியில் காணப்படுகின்றனர்.

இந்தத் தாழ்வு மனப்பான்மையானது, ஆண், பெண் என்ற இரு சாராரையும் விட்டு வைப்பதில்லை. என்றாலும் பெண்கள் உடல் கோட்பாடுகளின்படி சீக்கிரம் மனச்சிக்கல்களுக்குள் சிறைப்பட்டு விடுகின்றனர். சிறு வயதிலேயே இந்தத் தாழ்வு மனப்பான்மை தொற்று நோயாகத் தொற்றியிருந்தாலும் காலம் செல்ல, செல்லத் தான் அதன் வெளிப்பாடு பகிரங்கமாக வெளிப்படும்.

அன்றாட நடவடிக்கை, நடை, உடை பாவனை எல்லாவற்றிலும் இது தொற்றிக் கொள்ளும்

பெண்களைப் பொறுத்தமட்டில் (சிலர்) தங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து தரத்தைக் கூட்டிக் குறைத்துக் கொள்வதிலேயே பிரச்சினை ஆரம்பிக்கிறது.

இதற்கு வீட்டிலும் பெற்றோர்களும் மற்றவர்களும் தீனி போடுகின்றனர். எல்லாவற்றிலும் ஆண் பிள்ளைக்குத்தான் முதலிடம் பெண் பிள்ளைக்கு இரண்டாம் பட்சம் என்று தூவும் விதை என்ற விடயம் தான் தாழ்வுமனப்பான்மைக்கு வித்திடுகின்றது.

உண்மையிலேயே தாழ்வு மனப்பான்மையானது தன்னம்பிக்கைக் குறைவுக்கும் ஆரோக்கியத்துக்கு மிகப் பெரிய ஆபத்தாகவும் அமைந்து விடுகிறது. சமுதாயத்துடன் ஒன்றிப் போவதற்கும் இது பெரும் சவாலாகவும் காணப்படுகிறது.

ஒவ்வொரு பெண்ணிலும் ஒவ்வொரு அழகு உள்ளது. வித்தியாசமான திறமையும் அறிவும் உள்ளது. பெண் நினைத்தால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை என்றிருக்க, நாம் இவளைப்போல் சிவப்பாக இல்லையே உயரமாக இல்லையே பெரிய கல்வியறிவு இல்லையே என்ற இப்படிப்பட்ட எண்ணமே அவளது பலவிதமான திறமைகளை, நம்பிக்கைகளை அழித்துவிடுகிறது. நம்பிக்கைதான் வாழ்க்கை. அதற்கு மன உறுதி வேண்டும். மனச்சிதைவு கூடாது. முயன்றால் முடியாதது எதுவும் இல்லை.

கண்ணாடியில் பார்க்கும்போது கூட நாம் இன்னும் இளமையாக, அழகாகத்தான் இருக்கிறோம் என்று நினைத்துப் பார்த்தால் உருவம் அழகாகத்தானிருக்கும். எல்லாவற்றுக்கும் எண்ணங்கள்தான் காரணம்.

வெளிச்சத்தைத்தான் பார்க்க வேண்டும் விளக்கைப் பார்க்கக் கூடாது. பிறருடன் ஒப்பிடுவதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சமயத்தில் மனச் சாட்சியின் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும். தன்னம்பிக்கையை அதிகமாக்கும் எல்லா விடயங்களிலும் ஈடுபாடு காட்டலாம்.

ஒரு பெண்ணானவள் பருவ வயதிலோ அதற்குப் பிறகோ தன்னம்பிக்கை தரும் நல்ல புத்தகங்களைப் படிப்பதன் மூலம் எதிர்மறை எண்ணத்திலிருந்து வெளியே வந்துவிட வாய்ப்பு உண்டு அதன் பிறகு இயல்பான வாழ்க்கையே தன்னம்பிக்கையுடன் நடத்த முடியும்.

இது பிழைக்கும் பட்சத்தில், தனது குடும்பம், கணவன், குழந்தை போன்றவர்களின் முன்னேற்றத்துக்கு உதவ இயலாமல் போவதற்கு வாய்ப்பு உண்டு. இதனைப் போலவே வெளியில் சகஜமாகப் பேசிப் பழகச் சங்கடப்படுவார்கள். முதலில் நம்மை விட சிறிது வேறுபாடுடையவர்களை அல்லது வேறுபாடுடைய விடயங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதனைத் தவிர்க்க வேண்டும்.

நாம் நினைப்பதெல்லாம் நடக்க வேண்டும் என்று யாரும் நினைக்கலாம். ஆனால் இதனைச் சாதிக்கத்தான் சிலருக்குத் துணிவு, தைரியம் என்பன இல்லாமல் போய்விடுகின்றது. இது நடக்குமா? நடக்காதா? நம்மால் முடியுமா? இப்படி நினைத்து நினைத்தே தாழ்வு மனப்பான்மையை உறுதி செய்து கொள்கின்றனர்.

ஒரு விடயத்தை ஆரம்பித்து அது தோல்வியில் முடிந்தால் இனி எதுவும் நம்மால் முடியாது என்று துவண்டு விடுவதால் இந்தத் தாழ்வு மனப்பான்மையானது சிலந்தி வலையாக நம்மைச் சுற்றி வளைத்து அடுத்த எண்ணங்களை வளரவிடாமலும் புதிய விடயங்களைச் செய்யவிடாமலும் தடுத்து விடுகிறது.

உயரத்தை அடைய விரும்பினால் அடியிலிருந்துதான் தொடங்க வேண்டும். இதனை விட்டு நம்மால் எதுவும் முடியாது என்ற எண்ணமே நாளடைவில் மற்றவர்களின் வளர்ச்சியைப் பார்க்கும்போது வெறுப்பாகவும், பொறாமையாகவும், குரோதமாகவும் மாறிப் பெண்ணின் மென்மையையும் அழகையும் அழித்துவிடும். அனைத்து அம்சங்களும் ஒருசேரப் பொருந்திய இந்தப் பெண்கள் மனம் தாழ்வுச் சிக்கலுக்குள் நசுங்கி விடக் கூடாது. நோயை விட அச்சமே அதிகம் கொல்லும். எல்லோரையும் நேசிப்பது சிரமம். ஆனால் பழகிக் கொள்ள வேண்டும்.

நம்மால் பெரிதும் மதிக்கத்தக்க தேசியத் தலைவர்களும் பல உலகத் தலைவர்களும் இந்தத் தாழ்வு மனப்பான்மையினால் பாதிப்படைந்திருக்கிறார்கள். பல தொழிலதிபர்களுக்கும் இந்த மன நிலை ஏற்படுவதுண்டு. இருந்த போதும் இதை எவ்வாறு வெற்றிகொண்டு வெளியே வந்துள்ளார்களென்பதனை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இவர்களெல்லாம் தாழ்வு மனப்பான்மையை மேலும் வளரவிடாமல் தடுத்துக் கொண்டு வாழ்க்கையில் முன்னேறியுள்ளார்கள்.

பல்வேறு அங்கக் குறைபாடுகளைக் கொண்ட பலர் அவற்றினை ஒரு சவாலாக எதிர்கொண்டு உயரிய சேவைகளை உலகுக்கு வழங்கியதையும் வழங்கிக் கொண்டிருப்பதையும் நாம் அறிவோம். அவர்களின் இந்தச் சேவையால் மானிட வர்க்கமே பயன்பெற்று வருகிறது. இதேபோன்று அறிவும் ஆளும் தன்மையும் மன உறுதியும் கொண்ட பல தேசிய உலகத் தலைவர்களை நாம் அறிந்து வைத்துள்ளோம் என்பது கண்கூடு.

ஆகையால், பெண் நினைத்தால் முடியாதது எதுவுமே இல்லை. தாழ்வுமனப்பான்மை இல்லாத மனிதர்கள் இல்லையென்று கூறலாம். ஆனால், இந்த எதிர்மறை மனநிலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்தும் அதிலிருந்து மீண்டும் வருவதுதான் முக்கியம். இந்தத் தாழ்வு மனப்பான்மையிலிருந்து தப்பிக்க மனம்விட்டுச் சகஜமாகப் பழகலாம் நகைச்சுவையாகப் பேசலாம். நகைச்சுவையை ரசிப்பதற்கும் நல்ல புத்தகங்களை உள்வாங்கிக் கொள்ளவும் மற்றவர்களுக்கு உதவவும் நம்மை நாமே தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டும். எங்களை நாங்களே நேசிக்க வேண்டும் பாராட்டவேண்டும். நம்மை நாமே தட்டிக் கொடுத்தால் மற்றவர்கள் கைகொடுத்துப் பாராட்டுவார்கள். முட்கள் நிறைந்த செடியில்தான் ரோஜா மலர்கிற தென்பதனை மனதில் கொள்ள வேண்டும்

பெண்மையை மதியுங்கள்

பெண் என்பவள் தெய்வத்தின் அம்சம்
இந்த முழு உலகும் அவள் வசமே
தாயாக எம்மை அணைப்பவளும் அவளே
மனைவி உருவில் உபசரிப்பவளும் அவளே
சகோதரியின் பாசம் அவளின் வடிவில்
தாய்மைக்கு வேறெதுவும் இங்கு நிகராகுமோ
ஈரைந்து மாதங்கள் கருவறையில் சுமந்து
எம்மைக் காக்கும் தெய்வம் அவள்தான்
கருவறையில் தொடங்கி காலம் முழுவதும்
எம்மைக் காப்பதுவும் அந்தத் தெய்வம்தான்
பெண்மையை சிதைக்கத் துடிக்கும்
ஆணாதிக்க வாதிகளே சற்று சிந்தியுங்கள்
நீங்கள் வந்த பாதை மறந்துவிட்டதா
மறந்தது போன்று நடிப்பது சரியா
தாய்மையின் உருவம்தான் பெண் என்பதை
ஆண்களே நீங்கள் மறந்தது நியாயமா
உங்கள் மனச் சாட்சியை தட்டிவிடுங்கள்
மனமென்ற ஒன்று உங்களுக்கிருந்தால்



பெண்மையை மதியுங்கள் போற்றுங்கள்
இன்றேல் வீழ்ச்சிதான் உமக்கு நிச்சயம்

இ. பிரேமா

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

விசாரணைக் குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பதால் நன்மையா? தீமையா?

இந்த வருட கடைசியில் அல்லது அடுத்த வருட முற் பகுதியில் தேர்தல் ஒன்று வரப்போகிறது. அது ஜனாதிபதித் தேர்தலா, நாடாளுமன்றத் தேர்தலா என்ற மர்மத்தை விடுவிக்கும் மந்திரக்கோல் சகல நிறைவேற்று அதிகாரங் களும் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கைகளிலேயே இருக் கின்றது. எதுவானாலும் அந்தத் தேர்தலில் அரசுக்குச் சாதகமான கள நிலைகளை உருவாக்கிக் கொள்ளும் தமது காய் நகர்த்தலை சர்வதேச மனித உரிமைகள் சபையின் விசாரணையை ஒரு துருப்பு சீட்டாகவே பயன்படுத்திக் கொண்டுவிட அவர் முடிவு செய்துவிட்டார் போல் தெரிகிறது. அதன் துணிவுதான் மனித உரிமை விசாரணை குழு வினரை நாட்டுக்குள் அனுமதிப்பதா? இல்லையா? என்று தீர்மானம் எடுப்பதை நாடாளுமன்றத்தின் தலையில் சுமத்தி எதிர்க்கட் சியினரைத் திக்குமுக்காட வைத்திருப்பதன் நோக்கம்.

உண்மையில் மனித உரிமை விசாரணைக் குழுவின் வருகைக்கு அனுமதிக்கப்போவதில்லை என்ற தீர் மானத்தை அது பற்றிய அமெரிக்கத் தீர்மானம் நிறை வேற்றப்பட்ட சமயத்திலேயே அரசு அறிவித்துவிட்டது. மனித உரிமை சபையில் உள்ள இலங்கை நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க முதற்கொண்டு -ஜனாதிபதி, வெளியுறவு அமைச்சர் உட்பட அரச தலைவர்கள் அனைவரும் உறுதி படத் தெரிவித்திருந்தார்கள். இப்பொழுது நாடாளுமன்றத்தை ஏன் நாடுகிறார்கள் என்பது ஒரு முக்கிய கேள்வி தானே?

போரில் ஈடுபட்டவர்கள் இலங்கை அரச படையினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும். புலிகளை அழிப்பது என்று தீர்க்கமான முடிவை எடுத்து அதற்கு வேண்டிய ஆயுத மற்றும் ஆலோசனை உதவிகளை வெளிநாடுகளில் குறிப் பாக இந்தியாவில் இருந்து பெற்று போரை நடத்தி முடித் தவர்கள் அரசும்- அதன் தலைவர்களும்- படைத் தளபதி களுமே. இப்படியான ஒரு போரில் சம்பந்தமே இல்லாத அப்பாவிகளும் கொல்லப்படக்கூடும் என்பதை அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள் என்று கருதமுடியாது.

எதுவானாலும் இந்தப் போரினால் போர்க் குற்றங்கள், மனித உரிமைக்கு மாறான மற்றும் மனித குலத்துக்கு மாறான குற்றங்கள் இழைக்கப்பட்டிருப்பதாகக் கூறியே இப்போது சர்வதேச விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போரை நடத்தி வெற்றி விழாக்களை வருடந்தோறும் கொண்டாடிவரும் அரச தலைவர்கள் சர்வதேச விசாரணை என்று வரும்போது மட்டும் நாடாளுமன்றத்தை நாடுவ தேன்? ஜனநாயகக் கோட்பாடு என்றால் அதனை ஆரம்பம் முதலே செய்து வந்திருக்க வேண்டாமா?

தீர்மானமும் எடுத்து முடிந்து விட்ட நிலையில் அதற்கு எதிர்க்கட்சிகளின் பிரதிபலிப்பு எப்படி இருக்கப் போகின்றது என் பதை நாடிபிடித்துப் பார்ப்பதே இதன் நோக்கம்.

அரசில் உள்ள கட்சிகள் அனைத்துமே தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும். அதில் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸ், தேவானந்தாவின் ஈ.பி.டி.பி., தொண்ட மான்னின் இ.தொ.கா. ஆகியவை விதிவிலக்கல்ல. இல்லை யெனில் அவர்களின் பதவிகளுக்கு சீட்டு கிழிக்கப் படலாம். பிரதான எதிர்க்கட்சி யான ஐ.தே.கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் சில சிக்கல்களை கோரிக் கைகளை முன்வைத்துள்ளன. மக்கள் விடுதலை முன்னணி வைத்துள்ள நிபந்தனைகள் அரசி னால் எளிதில் ஜீரணிக்கக் கூடியவையாய் தென்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானத்தை ஆதரிக்கமாட் டாது என்பது தெளிவு. அரசுக்கு நாடாளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர் களின் எண்ணிக்கை தீர்மானத்தை சுலபமாக நிறைவேற் றிக்கொள்ள போதுமான தாக இருக்கும்.

இதன்போது இடம்பெறக்கூடிய வாதப் பிரதிவாதங்களை வரும் தேர்தலில் அரசுத் தரப்பு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதாக இருந்தாலும் விசாரணைக் குழு இலங்கைக்குள் வராமலே விசாரணைகள் முன்னெடுக் கப்படுமானால் அதன் விளைவுகள் நிச்சயமாக நாட்டுக்கு நன்மையாக இருக்கமாட்டாது. நாட்டுக்குள் விசாரணைகள் நடைபெறும் பட்சத்தில் அரச தரப்பில் மட்டுமல்ல அரசோடு ஒட்டிக் கொண்டிருக்கும் கட்சிகளும் கூட சாட்சியங்களையும், அறிக்கைகளையும் தாக்கல் செய்ய வாய்ப்பிருக்கும்.

விசாரணைக் குழுவை நாட்டுக்குள் வர அனுமதிப்பத னால் ஏற்படக்கூடிய பாதக நிலைமைகளை விட அது இங்கு வராமலே நடக்கக்கூடிய விசாரணைகள் அதிக பாதகமாக இருக்கலாம் என்ற கருத்தை அரசு ஆராய்வது நல்லது.

விசாரணைகளுக்கு மனதார பான் கீ - மூன் உதவ வேண்டும்

சேரலாதன்

இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார் ஐ.நா. பொதுச் செயலாளர் பான்-கீ மூன். அவரின் இந்த நடவடிக்கை எந்த வகையிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி விட முடியாது. ஏனென்றால் ஐ.நாவின் கீழுள்ள மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவி னால் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தமது கடமைகளை மேற்கொண்டு வரு கின்றார் மனித உரிமைகள் ஆணை யாளர். இதற்கு ஐ.நா. செயலாளர் நாய கம் தமது ஆதரவைத் தெரிவித்தே ஆக வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது ஏராளமான பொது மக்கள் கொல்லப்பட்டமைக்கு ஐ.நா. பொறுப்புக் கூறவேண்டுமென்ற குற் றச்சாட்டுக்கள் ஏற்கனவே எழுந்துள் ளன. குறிப்பாக வெள்ளைக் கொடி களை ஏந்தியவாறு சரணடைவதற்குச் சென்றவர்கள் மிலேச்சத்தனமான வகையில் கொல்லப்பட்டமைக்கு ஐ.நா வின் பொறுப்பற்றதும், பக்கச் சார் பானதுமான செயற்பாடுகளே காரண மெனப் பல தரப்பினராலும் கடுமை யான விமர்சனங்கள் முன்வைக் கப்பட்டுள்ளன.

ஐ.நா. சபை என்பது ஒரு பன்னாட்டு நிறுவனம் என்ற வகையில் அதில் அங்கத்துவம் பெற்றுள்ள சகல நாடு களின் பிரச்சினைகளிலும் பாரபட்ச மின்றி நடவடிக்கையை மேற்கொள் வதற்கான கடப்பாட்டைக் கொண்டுள் ளது.

முதலாவது உலகப்போர் இடம் பெற்ற போதே எதிர்காலத்தில் போர்களே நடைபெறாத வண்ணம் பார்த் துக் கொள்ளும் பொருட்டு பன்னாட்டு நிறுவனம் ஒன்று அமைக்கப்படு வதன் அவசியம் தொடர்பாக வலி யுறுத்திக் கூறப்பட்டது. இதன் அடிப் படையிலேயே 1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை அதிகாரபூர்வமாகச் செயற்பட ஆரம்பித்தது.

இதன் பிரகாரம் 1948 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐ.நா. சபை மனித உரிமைகள் பிரகட னத்தை அறிவித்தது. இந்தப் பிரக டனத்தில் மக்கள் அனைவரும் பிறப் பினால் சமமானவர்கள், அவர்களுக்கு மரியாதையும், உரிமைகளும் சம அளவில் உண்டு. அவர்கள் அனை வரும் தமது மனச்சாட்சியின் பிரகாரம் நடந்து கொண்டு ஏனையவர்களை சகோதரத்துவத்துடனும், அன்புடனும் நடத்த வேண்டும். இனம், நிறம், மொழி, சமயம், அரசியல் என்ற அடிப் படையிலும் ஆண், பெண் என்ற வித்தியாசம் இல்லாமலும் நடத் தப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள் ளது. இதனடிப்படையிலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபை செயற்பட்டு வரு கின்றது.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபை ஆரம் பிக்கப்பட்டு 69 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையிலும் அதன் செயற் பாடுகள் பூரணத்துவம் பெற்றதாக அமையவில்லையென்ற குற்றச் சாட் டுக்கள் பல தரப்பினரிடமிருந்தும் எழுந்த வண்ணம் உள்ளன.

உலகிலுள்ள பல சிறிய நாடுகள் ஐ.நா. சபையில் உறுப்பினர் ஆகாத நிலை காணப்படுவதால் இதனை முழு அள வில் ஓர் உலக நிறுவனம் என அழைக்க முடியாத நிலையும் காணப் படுகின்றது. பாதுகாப்புச் சபையில் எந்தவொரு தீர்மானத்தையும் நிறை வேற்றுவதில் பலத்த முட் டுக் கட்டைகள் ஏற்பட் டுள்ளன. ஏனென்றால் பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்தவர்க ளாகப் பதவி வகித்துக் கொண்டிருக்கும்.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு எந்த வொரு தீர்மானத்தையும் நிராகரித்து விடும் வீட்டோ அதிகாரம் வழங்கப்பட் டிருப்பதனால் அந்த நாடு கள்தமது இஷ்டம்போன்று செயற்பட்டுக் கொண்டி ருக்கின்றன. இதில் நீதி, நியாயங்களைப் பார்க் காது தமக்கு ஆதரவான நாடுகளின் சார்பாக இந்த ஐந்து நாடுகளும் தீர்மானத்தை மேற் கொள்வதால் ஏனைய நாடுகள் பாதிக் கப்பட்டு வருகின்றன.

இலங்கை விடயத்தில் கூட சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் ஆதரவு தனக்கு இருப்பதாக அந்த நாடு எண் ணுவதால் சர்வதேச விசாரணை தொடர்பாக அலட்சியத்துடன் நடந்து கொள்கின்றது.

ஆனால் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறை வேற்றப்பட்ட பின்னரும் விசாரணை களுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை யென அந்த நாடு பகிரங்கமாகத் தெரி விப்பதும். விசாரணைக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்றை நிறை வேற்றுவதற்குத் துடிப்பது ஐ.நாவுக்கு தெரியாததல்ல. இதைவிட ஐ.நா. பொதுச் செய லர் போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இலங்கை சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்த துடன் ஜனாதிபதியி மிருந்து சில உறுதி மொழி களையும் பெற்றுக் கொண்டார். ஆனால் இவற்றுக்கு என்ன நடந்தது என்பதை மஹிந்த ரும், பான்-கீ- மூனும் மட்டுமே அறிவார்கள். இந்த உறுதி மொழி வழங்கப்பட்ட பின்னர் இவர்கள் இருவரும் பல தடவைகள் சந்தித்துள்ளனர். ஆனால் வழங்கப்பட்ட உறுதி மொழிகள் தொடர் பாக இவர்கள் இருவருமே மறந்து விட்டதாகத் தெரிகின்றது.

ஐ.நா. பொதுச் செயலர் பதவியென்பது சாதாரணமானதொன் றல்ல. பல நாடுகளை உள்ளடக்கிய பல னாட்டு நிறுவனமொன்றின் தலைமை பதவியே அது. அந்த நிறுவனம் சிறப்பாகச் செயற்படுவதென்பது செயலாளர் நாய கத்தின் கரங்களிலேயே தங்கியுள்ளது. ஐ.நா. சபைக்குக் கிடைக்கும் புகழுக்கும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்கும் அவரே காரண கர்த்தா ஆவார். ஆகவே இறுதிப் போரின் இறுதிக்கட்டத்தில் சரண் அடையச் சென்றவர்கள் விடயத்தில் ஐ.நா தவறிழைத்துள்ளதாகப் பலரும் குற்றம் சாட்டிய போதிலும் பான் கீ-மூன் அது தொடர்பாகக் கவனத்திலெடுக்கவே யில்லை. இன்றும் தமது பதவியில் தொடர்ந்து கொள்கின்றார். நியாயப்படி பார்த்தால் அவர் தமது பதவியைத் துறந் திருக்க வேண்டும். ஆனால் அதில் ஒட்டிக் கொண்டிருக்கின்றார்.

இலங்கை அரசும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கைப் போன்று பான்-கீ மூனின் பலவீனத்தை நன்கு எடைபோட்டு வைத்திருப் பதால் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு மல்லுக்கு நிற்கின்றது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப் படவில்லையென்றால் இலங்கை அரச கலக்கம் கொள்ளவே தேவையில்லை. துணிவுடன் எந்த விசாரணைக்கும் முகம் கொடுக்க முடியும். விசாரணைகளின் முடிவில்தான் எதுவும் தெரியவரும்.

ஆகவே ஐ.நா. சபை தனக்குரிய கண் ணியத்தைக் காப்பாற்றிக்கொள்ள விரும் பினால் இலங்கை மீதான நவநீதம் பிள்ளையின் விசாரணைகளுக்குப் பூரண ஆதரவை வழங்க வேண்டும். பான்-கீ-மூனும் வழக்கம்போன்று ஏனோ தானோ வெனச் செயற்படாது ஆத்ம சுத்தியுடன் தமது கடமைப் பொறுப்புக்களை நிறை வேற்ற ஆரம்பிப்பாராயின் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிச்சயம் நீதி கிடைத்தே தீருமென்பதில் ஐயமில்லை.



இலங்கையில் மனித உரிமைகள் மீறப் பட வில்லையென்றால் இலங்கை அரசு கலக்கம் கொள்ளவே தேவை யில்லை. துணிவுடன் எந்த விசாரணைக்கும் முகம் கொடுக்க முடியும். விசாரணைகளின் முடிவில்தான் எதுவும் தெரியவரும். ஆகவே ஐ.நா. சபை தனக்குரிய கண் ணியத்தைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பினால் இலங்கை மீதான நவநீதம்பிள்ளையின் விசாரணைகளுக்குப் பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

திருமதி. தனேஸ்வரி ரவீந்திரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
மனிதவள முகாமைத்துவத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(மறைந்த பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் அவர்களின் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)

மன அழுத்தம்

அறிமுகம் இறுக்கமான சூழலில் சுழன்று கொண்டிருக்கிறது உலகம். எல்லாத் துறையிலும் எல்லா பணி நிலைகளிலும் அனைவரும் ஒருவிதமான மன இறுக்கத்துடனேயே உழன்று கொண்டிருக்கிறார்கள். மனிதனுக்கு வரும் நோய்களில் அனேகமானவை அழுத்தமான சூழல் காரணமாக வருபவை என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இதுவே மன அழுத்தத்தைக் கையாள்வதன் தேவையை நமக்கு எடுத்துக் கூறுகிறது. மேலதிகாரிகளின் கெடுபிடிகளால் தொல்லைகளுக்கு ஆளாகும் ஊழியர்கள், வாழ்க்கைத் துணையின் விட்டுக்கொடுத்தல் அல்லது புரிந்து கொள்ளல் இல்லாத சூழலில் உருவாகும் மன அழுத்தம், சாதி, மத, இன ரீதியாக அழுத்தமான சூழலுக்கு உள்ளாகும் பொது மக்கள் என எந்த ஒரு சூழலை எடுத்துக் கொண்டாலும் இன்று மக்கள் ஒருவித மன அழுத்தத்துடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மன அழுத்தத்தை சரியாக முகாமை செய்யத் தவறினால் இயல்பான வாழ்க்கையைப் பறித்து நிம்மதியற்ற பொழுதுகளையும், நோய்களையும்தந்து வாழ்வில் பெரிய தாக்கங்களை ஏற்படுத்திவிடக்கூடும்.

எதிர்பாராத சூழலுக்கு மனிதன் தள்ளப்படும் போதே அதிக மன அழுத்தத்துக்கு உள்ளாகிறான். எதிர்பார்ப்புகளைக் குறைக்கும்போது மன அழுத்தம் பெருமளவில் குறைந்து போகின்றது. குழந்தைகள், எதிர்பார்ப்புகள் அதிகம் இலலாதவர்கள், அவர்கள் எதையும் ஆனந்தத்துடன் பெற்றுக் கொள்ளும் தன்மையுடையவர்கள். எனவே அவர்களால் மன அழுத்தம் இல்லாமல் வாழ முடிகிறது. ஆனால் மற்றையவர்கள் எதிர்பார்ப்புகளை அதிகப்படுத்துவதும், கிடைப்பதில் திருப்தி பெறாத நிலையையும் கொண்டிருப்பதால் அதிகமான மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள் என்றுகூறலாம்.

மன அழுத்தம் எப்போதுமே கெடுதியான ஒன்றா?

மன அழுத்தம் எப்போதுமே பாதகமான அல்லது கெடுதியான ஒன்று எனவோ தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று எனவோ கூற முடியாது. மன அழுத்தத்தினால் சாதகமான விளைவுகளும் பெறப்படும். ஒருவருக்கு ஒரு குறித்த அளவு மன அழுத்தம் இருந்தாலே அவர் திறமையாக செயற்படுவார். தனது நேரத்தை உச்ச அளவில் பயன்படுத்தி தனது முழுத்திறமையையும் பிரயோகித்து வேலைகளை நிறைவேற்றுவார். எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார். சுறுசுறுப்பாக இயங்கும்போது அது உள்ளார்ந்த திருப்தியைக் கொடுக்கும். அதுவே அவருக்கு சிறந்த சுய ஊக்கப்படுத்தலாகவும் (self moti vation) அமையும். மன அழுத்தம் இல்லாத வாழ்க்கை சவாலற்ற மந்த போக்கானதாக இருக்கும். எனவே வாழ்வில் மன அழுத்தம் ஓரளவுக்கு இருக்கவேண்டும். மன அழுத்தம் இருப்பது ஒரு சக்தி தரும் பானம் (energizer) உட்கொள்வதை ஒத்தது. எனவே ஒருவர் உத்தம மட்ட (optimum) மன அழுத்தத்தை நாட வேண்டும் விலகி ஓட முயற்சிக்கக்கூடாது. சாதாரண மன அழுத்தத்தின்போது மனம் சோர்ந்து போவது மன அழுத்தத்தை சமாளிக்க முடியாமையினையே புலப்படுத்தும்.

நல்ல மன அழுத்தம் உங்களை கடினமாக உழைக்கவும் செயல்களைச் செம்மையாகச் செய்யவும் வழிவகுக்கும். நம் ஒவ்வொருவருக்கும் சிறப்பாகப் பணிபுரிய சிறிதளவு மன அழுத்தம் நமக்கு தேவை என்றாலும் அது குறைந்த அளவில் நம் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். தீய மன அழுத்தம் அல்லது அளவுக்கதிகமான மன அழுத்தம் ஒரு மனிதனிடம் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி உடலில் அல்லது உணர்ச்சியின் அறிகுறிகளாக வெளிப்படும். தீவிர மன அழுத்தத்தால் உடலில் நோய் சமாளிப்பு ஆற்றல் அழிந்து போகும். தீவிர இதயநோய், உயர் இரத்த அழுத்தம் முதலான உடல் நலக் குறைகளும் சோர்வு, ஏக்கம், கவலை போன்ற மனச் சிக்கல்களும் அம்மனிதனை வந்தடையும். மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள பழகுவது உங்களை மகிழ்ச்சியாக வாழ வைக்கும்.

சில தீர்வுகள்

மன அழுத்தத்துக்கான காரணங்கள்

ஏமாற்றம், பயம், நிராகரிப்பு, எரிச்சல், அதிக வேலை, அதிக சிரத்தை, குழப்பம் இவை எல்லாம் மன அழுத்தத்தைத் தோற்றுவிக்கும் சில காரணிகள். சிலருக்கு அதிக வெளிச்சம், அதிக சத்தம் இவைகூட மன அழுத்தத்தை அதிகரிக்கும். பிறப்பு, இறப்பு, போர்கள், திருமணங்கள், விவாகரத்துகள், நோய்கள், பிள்ளைகளின் கல்வி, பதவி இழப்பு, பெயர் இழத்தல், கடன், வறுமை, பரீட்சை, போக்குவரத்து நெரிசல், வேலை அழுத்தம், நட்பு முறிவு, உறவு விரிசல் என நம்மைச் சுற்றி நிகழும் எல்லா விதமான காரணிகளும் மன அழுத்தத்துக்குள் நம்மை இட்டுச் செல்ல முடியும். புகை பிடித்தல், சரியான உணவுப் பழக்கம் இல்லாமை, போதைமருந்துப் பழக்கம், குடிப்பழக்கம், சரியான தூக்கம் இல்லாமை இவையெல்லாம் மன அழுத்தத்தை நாம் விலை கொடுத்து வாங்கும் செயல்கள். புகை பிடிக்கும்போது உடலில் கலக்கும் நிக்கோட்டினுக்கு மன அழுத்தத்தை அதிகரிக்கும் சக்தி இருப்பதாக ஆராய்ச்சிகள் நிரூபித்திருக்கின்றன. முதுமை நிலையை அடைபவர்களிடமும், மாதவிடாய் காலத்தில் பெண்களிடமும் இந்த மன அழுத்தம் அதிகமாய் இருக்கும். அத்தகையவர்களிடம் அன்புடன் உரையாடி மன இறுக்கத்தைத் தணிக்க வேண்டும்.

சரியான திட்டமிடல் இல்லாமல் செயற்படுபவர்களை இந்த மன அழுத்தம் எளிதில் பிடித்துக் கொள்கிறது. எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துபவர்கள் மன அழுத்தம் உருவாகும் சுழலை பெரும்பாலும் விலக்கி விடுகிறார்கள். செய்ய முடியாத வேலைகளை முடியாது என்று மறுத்து விடும் மனதைரியம் மன அழுத்தத்திலிருந்து தப்புவதற்கு மிகவும் அவசியம். எல்லா வேலைகளையும் இழுத்துப் போடுபவர்கள் பிரச்சினையிலிருந்து தப்ப முடியாது. உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் அழுத்தம் மனிதனுக்கு பல இன்னல்களைத் தருகிறது. சிறு சிறு அழுத்தமான சுழல்களைத் தவிர்க்காதபோதோ, அல்லது தீர்க்காதபோதோ அழுத்தம் அதிகரித்து பெரிய இன்னலுக்கு ஆளாக்கி விடுகிறது.

அழுத்தம் நமது வாழ்க்கை முறை, சிந்தனைகள் என்பவற்றாலும் வருகிறது. நேர சிந்தனை (pósitivc thinking) உள்ளவர்கள் எல்லாவற்றையும் நல்ல விதமாகப் பார்க்கிறார்கள். அதிக நேரம் பயணிக்க வேண்டியிருந்தால் அதிக நேரம் இசை கேட்க முடியுமே என்று நினைக்கக்கூடிய அளவுக்கு மனதை இலகுவாக வைத்திருக்க வேண்டும். இந்த வேலை எனக்குப் பிடிக்கவேயில்லை. அல்லது என்னை யாருக்கும் பிடிக்கவில்லை இது போன்ற சிந்தனைகள் பரிதவிக்க வைத்து மன அழுத்தத்துக்குள் இட்டுச் செல்கிறது.

மன அழுத்தத்தினால் தசைகள் உடலில் இறுகுகின்றன. சிறிது நேரத்திலேயே உடல் தளர்ச்சி அடைவதை உணர்கிறோம். தசைகள் இறுகுவதால் உடல் சக்தி வீணாகிறது. மன உளைச்சலுக்கு எப்போதும் ஒரு காரணமாயிருப்பது நம் எண்ண அலைகளே! எனக்கு என்ன நேர்ந்துவிட்டது? *(தொடரும்)*

கால்வாய் நோயைக் கட்டுப்படுத்தி விலங்குகளைக் காத்திடுவோம் !

ஆ.ஜென்சன் றொனால்ட்
பொது சுகாதார பரிசோதகர்

கால்நடைகள் மூலம் மனிதன் தனது வாழ்வாதாரத்துக்கான பெரும் பயன்களைப் பெற்றுக் கொள்கின்றான். கால்நடைகள் மனிதனது உழைப்பு முதல் பாதுகாப்பு, செல்லப்பிராணி என பல வகைகளில் துணை புரிந்து வருகின்றன. குறிப்பாக "மாடுகள்" எனப்படும் மாடுகள் எம்மோடு மிகவும் அதிகமான நெருங்கிய தொடர்புடன் காணப்படுகின்றன. எனவே நாம் கால்நடைகளை கவனிப்பதும் அவற்றுக்கு நோய் ஏற்படாது பாதுகாப்பதும் எமது கடமையாகும்.

மிருசுவிலில் கால்வாய் நோய்

அண்மையில் மிருசுவில் பகுதியில் மாடுகளுக்கு கால்வாய்நோய் ஏற்பட்டு வேகமாகப் பரவுகிறது என தென்மராட்சி கால்நடை சுகாதார பிரிவு அறிவித்துள்ளது. எனவே மாடுகளை மறு அறிவித்தல்வரை இறைச்சிக்காக வெட்ட வேண்டாமெனவும், பால் உற்பத்திகளை விற்பனை செய்வதையும் நிறுத்துமாறு அறிவுறுத்தி அந்தப் பிரதேச நகர, பிரதேச சபைகளுக்கு கடிதங்களையும் அனுப்பியுள்ளது.

இந்த ஆண்டின் முற்பகுதியில் வவுனியா வடக்கிலும், யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளிலும் இந்தக் கால்வாய் நோய் மாடுகளுக்கு ஏற்பட்டு அதைத் தொடர்ந்து இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவது, நோயுள்ள பிரதேசத்திலிருந்து மாடுகள் கொண்டு செல்வது என்பன தடை செய்யப்பட்டதோடு தடுப்பு நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டிருந்தது. பின்னர் சில வாரங்களில் இந்த நோய் கட்டுப்பாட்டுக் குள்ளும் கொண்டு வரப்பட்டது.

கால்வாய் நோய் என்றால் என்ன?

இது விரைவாகத் தொற்றக்கூடிய "வைரஸ்" ஸால் ஏற்படுகின்ற சிலவேளைகளில் இறப்புகளையும் ஏற்படுத்தக்கூடிய குளம்புள்ள மிருகங்களில் ஏற்படுகின்ற நோயாகும். இதனை ஏற்படுத்தும் நோய்க்காரணி "picorna virus" ஆகும். இது நோயுள்ள விலங்கிலிருந்து அதன் காயங்கள் அல்லது உமிழ்நீருடனான திரவத் துளித் தெளிகை (droplet) மூலமும் அல்லது நோயுண்ட விலங்குகளுடன் தொடர்புபட்ட உயிரற்ற பொருள்களின் தொடுகையினூடாக (பயன்படுத்திய வாகனங்கள், கயிறு, பாத்திரங்கள்)வும் பரவுகின்றது. இது விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு தொற்றுதலடைதல் மிக அரிதாகவே உள்ளது. எனினும் நோய்த் தொற்று, இறப்பு என்பன மிகச் சிறிய அளவில் ஏற்பட்டிருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளது.

அறிகுறிகள்

குளம்புள்ள கால்நடைகளையே இந்த நோய் அதிகளவில் தாக்குகிறது. அதாவது மாடுகள், செம்மறி, ஆடுகள், பன்றிகள், மான்கள் போன்றவற்றில் இதன் தாக்கம் காணப்படுகின்றது.

கால்வாய் நோயினால் (Food and Mouth Disease) பாதிக்கப்பட்ட விலங்குகளின் வாயின் உட்பகுதி, வெளிப்பகுதி, நாக்கு, குளம்புகளுக்கு இடையே, தலைப்பகுதி, மடிப்பகுதிகளில் புண்கள் (sores/blister) காணப்படும். அதிகப்படியான காய்ச்சல் இரண்டுமுதல் மூன்று நாள்கள்வரை காணப்படும். அதிகளவான உமிழ்நீர் நுரைத் தன்மையுடன் வெளியேறும். வெளியேறுகின்ற உமிழ்நீரில் virus காணப்படுவதால் அது காலின் குளம்புகளில் தேங்கி அங்கும் புண்கள் உருவாகின்றது. பசுக்களில் பால் உற்பத்தி குறையும். காளைகளில் விதை வீக்கமும் காணப்படலாம். தொடர்ச்சியாக ஒரு மாதத்துக்கு மேலாக கால்வாய் நோய் குணப்படாது காணப்படின் நிறை இழப்பு ஏற்படவும் விலங்கு மரணமடையவும் வாய்ப்புக்கள் உண்டு. இதைவிட புதிய கன்றுக் குட்டிகளுக்கு இந்தக் கால்வாய் நோய் ஏற்பட்டால் இந்த virus ஆனது இதயத் தசைகளை அழற்சியுற வைப்பதால் இதயத்தாக்கம் ஏற்பட்டு கன்றுகள் இறக்கவும் நேரிடலாம்.

ஆபத்துக்கள்

நோயுடைய கால்நடைகளில் இறைச்சியில் பால் பொருள்களில் நோயாக்கியாகிய virus காணப்படும். இது மனிதன் உணவாக உள்ளெடுக்கும் போது அவனது இரைப்பையின் அமிலத்தன்மையால் அழிக்கப்படுவதால் பாதிப்பு ஏற்படுவதில்லை. எனினும் பாதுகாப்பு முன் எச்சரிக்கைக்காக நோய் ஏற்பட்ட விலங்குகளின் இறைச்சி மற்றும் பால் பொருள்கள் தடை செய்யப்படுகின்றன.

இதைவிட சில விலங்குகள் நோய் அறிகுறிகள் இன்றி (asymptomatic) நோய்க் கிருமிகளைக் காவக்கூடியனவாக உள்ளன. இவற்றின் மூலமும் கால்வாய் நோய் ஏனைய விலங்குகளுக்கு பரவுதலடையும்.

நோய்க்கிருமி தொற்றுதலடைந்து இரண்டு முதல் பன்னிரெண்டு நாள்களில் நோய் அறிகுறிகள் ஏற்படலாம். நோய் அறிகுறிகள் ஏற்பட்டு, ஒரு வாரங்கள்வரை நோய்க் கிருமிகள் பரவக் கூடியனதாக காணப்படும்.

நோயைக் கட்டுப்படுத்தல்

நோய் ஏற்பட்ட விலங்குகளை தனியாக்கி (Rsolation) பராமரிக்க வேண்டும். முதலுதவியாக நாவில் புண் ஏற்பட்ட இடங்களில் "Alum" தடவுதலும் குளம்பு பகுதிக்கு கழிவு ஓயில் இடுவதும் கிராமப்புறங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனினும் உடனடியாக அருகிலுள்ள கால்நடை சுகாதாரப் பிரிவுக்கு அறிவித்து உரிய ஆலோசனையையும் சிகிச்சையையும் பெற வேண்டும்.

கால்வாய் நோய் சம்பந்தமாக கால்நடை சுகாதார பிரிவுக்கு அறிவிப்புக்கள் மூலம் முற்பாதுகாப்பு நடவடிக்கையாக ஆரோக்கியமான விலங்குகளுக்கு தடுப்பு மருந்து ஏற்றல், கண்காணிப்பு, தடுப்பு நடவடிக்கை என்பவற்றை விரைவாக முன்னெடுக்க உதவியாக இருக்கும்.

கால்வாய் நோய் பரவுகின்ற பிரதேசத்திலும், ஆபத்துப் பிரதேசத்திலும் கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டப்படுவது முற்றாகத் தடுக்கப்படும். மேலும் இவ்வாறான பிரதேசங்களிலிருந்து வேறு இடங்களுக்கு கால்நடைகள் கொண்டு செல்வதும் தடுக்கப்படும். இது குறித்து கால்நடை வைத்தியப் பிரிவினரும், உள்ளூராட்சி மன்றங்களும், பொது சுகாதாரப் பரிசோதகர்களும் அவதானத்துடன் செயற்படுவதன் மூலம் நோய் பரவுவதையும், விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு ஏற்படும் நோய் அபாயத்தையும் கட்டுப்படுத்தலாம்.

சட்டவிரோத செயற்பாடுகள்

சட்டபூர்வமாக சுகாதாரப் பரிசோதனைகளுடனான விலங்குகளை இறைச்சிக்காக அறுப்பது இந்தக் காலப் பகுதியில் தடை செய்யப்படும் போது, சட்டவிரோதமாக நோயுடைய/நோயற்ற விலங்குகளை இறைச்சிக்காக சுகாதாரமற்ற இடங்களில் அறுத்து உள்ளூரிலும் வேறு இடங்களிலும் விற்பனை செய்யும் நடவடிக்கைகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எனவே பொதுமக்கள் இந்தக் காலப்பகுதியில் விழிப்புணர்வுடன் இருந்து தடை செய்யப்பட்டிருக்கும் காலப்பகுதியில் கால்நடையின் இறைச்சி நுகர்வைத் தவிர்ப்பதும், அதிகாரிகள் சட்டவிரோத இந்தச் செயற்பாடுகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதும் மக்களைப் பாதுகாக்கும் வழிவகைகளாகும்.

எனவே நோயுடைய விலங்குகளை தனிமைப்படுத்திப் பராமரிப்பதும் நோய் ஆபத்துடைய விலங்குகளுக்கு தடுப்பு மருந்து அளிப்பதும், நோய் பரவும் காலப்பகுதியில் இறைச்சி பால் பொருள், நுகர்வைத் தவிர்ப்பதும், நோய் பரவுதல், குறித்து கால்நடைப் பிரிவுக்கு அறிவிப்பதும் விலங்குகளையும் சமூகத்தையும் பாதுகாக்க நாம் செய்யும் கடமையாகும்.

அனல் பறக்கும் ஆந்திரா

ஒரே நாளில் 160 பேர் சாவு

புதுடில்லி, ஜூன் 16

ஆந்திராவில் வெய்யில் கொடுமையை தாங்க முடியாமல் ஒரே நாளில் 160 பேர் பரிதாபகரமாக உயிரிழந் துள்ளனர்.

கிழக்கு கோதாவரியில் 34 பேரும், விஜயநகரத்தில் 16 பேரும், மேற்கு கோதாவரியில் 12 பேரும், விசாகப்பட்டினத்தில் 8 பேரும் , கிருஷ்ணா மாவட்டத்தில் 9 பேரும் மற்றும் ஸ்ரீகாகுளத்தில் 40 பேருமாக மொத்தம் 160 பேரும் ஒரே நாளில் உயிரிழந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் முதியவர்கள் மற்றும் குழந்தைகளாவர்.

இதுகுறித்து வானிலை ஆய்வாளர்கள் கூறுகையில்; ராஜஸ்தானில் இருந்து வீசும் தரைக்காற்றால் அனல் அடிக்கின்றது. தென்மேற்கு பருவகாற்று தமிழ்நாட்டுடன் நிற்பதாலும் வெய்யில் அதிகமாக இருக்கிறது. இந்த வெய்யில் இன்னும் 2 நாள் நீடிக்கும்"- என்று தெரிவித்துள்ளனர். (ற)

உத்தர்கண்ட் மாநிலத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவில் ஐந்தாயிருக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். அவர்களுக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. அங்குள்ள பல்கலைக்கழகம் ஒன்றின் மாணவிகள் உயிரிழந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்துகின்றனர்.

பூட்டானில் மோடிக்கு அமோக வரவேற்பு

திம்பு, ஜூன் 16

பூட்டானுக்கு இரு நாள் பயணமாகச் சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு செங்கம்பள வரவேற்பு மற்றும் இராணுவ மரியாதையுடன் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், வெளியுறவு செயலாளர் சுஜாதா சிங் உள்ளிட்டோருடன் சென்ற விமானம், பூட்டானின் பாரோ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

அங்கு பூடான் மன்னர் ஜிக்மி வாங்சக், அரசு அதிகாரிகள் மற்றும் பூட்டான் இராணுவ வீரர்கள் மோடிக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளித்தனர். பூட்டான் சிறுவர், சிறுமியர்கள் கொடுத்த மலர்க் கொத்தையும் புன்னகையுடன் பெற்றுக் கொண்ட பிரதமர் மோடி, அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

பின்னர் பூட்டான் அரசின் சார்பில் வழங்கப்பட்ட இராணுவ மரியாதையையும் பிரதமர் ஏற்றுக் கொண்டார். பூடானில் உள்ள ஒரே ஒரு சர்வதேச விமான நிலையமாக பாரோ திகழ்கிறது. அதனால் அங்கு தரையிறங்கிய பிரதமர் மோடி அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலமாக தலைநகர் திம்புவுக்கு பணமாகவுள்ளார். (ற)

வரவேற்று அழைத்துச் செல்லப்படும் நரேந்திர மோடி

பேஸ்புக்கில் மோடி சாதனை

புதுடில்லி, ஜூன் 16

பேஸ்புக்கில் சர்வதேச அளவில் பிரபலமான இரண்டாவது தலைவராகத் திகழ்கின்றார் நரேந்திர மோடி.

இந்தத் தகவலை பேஸ்புக்கின் இந்திய மக்கள் தொடர்பு அதிகாரிகளாக அன்கிதாஸ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கும்போது;

"சர்வதேச அளவில் பேஸ்புக்கில் பிரபலமான தலைவர்களில் இரண்டாவது இடத்தை மோடி பெற்றுள்ளார். டுவிட்டரில் மூன்றாவது இடத்தை வகிக்கிறார்.

கடந்த மே 28ஆம் திகதி, பிரதமர் அலுவலகம் பேஸ்புக் கணக்கை ஆரம்பித்தது. சில நாள்களிலேயே 24 லட்சம் பேர், பார்வையாளர்களாக உள்ளனர்.

உலக தலைவர்களிலேயே, மோடிக்கு தான் குறைந்த காலத்தில் ஏராளமான பார்வையாளர்கள் சேர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது."- என்று தெரிவித்துள்ளார். (ற)

எந்தவொரு நாட்டுக்கும் அடிபணியாது இந்தியா

பிரதமர் நரேந்திர மோடி தெரிவிப்பு

கோவா, ஜூன் 16

நாம் உலகில் எந்த நாட்டுக்கும் அச்சுறுத்தல் விளைவிக்கக் கூடாது. அதேபோல எந்த நாடு முன்பும், நாம் மண்டியிட்டு நிற்கும் நிலை வராது - என்று தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

இந்தியக் கடற்படையினருக்கு மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கும்போது;

"இன்னும் எத்தனை நாளுக்கு தான் நாம் பிற நாடுகளில் இருந்து ஆயுதங்களை வாங்கிக் கொண்டிருக்க வேண்டும். இனிமேல் நமது நாட்டில் இருந்து பிற நாடுகள் ஆயுதம் வாங்கும் நிலைக்கு நாம் வர வேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சியை நமக்கு சாதகமாக்க வேண்டும்.

நாம் உலகில் எந்த நாட்டுக்கும் அச்சுறுத்தல் விளைவிக்கக் கூடாது. அதேபோல எந்த நாடு முன்பும், நாம் மண்டியிட்டு நிற்கும் நிலைவரக் கூடாது" - என்று தெரிவித்துள்ளார். (ற)

தமிழகத்தின் விதண்டாவாதத்துக்கு கர்நாடகம் அடிபணியாது

அந்த மாநில முதலமைச்சர் சித்தராமையா திட்டவட்டம்

மைசூர், ஜூன் 16

காவிரி மேலாண்மை சபை அமைக்கும் விவகாரத்தில், தமிழக அரசின் விதண்டாவாத அரசியலுக்கு கர்நாடகம் ஒருபோதும் அடிபணியாது என்று அந்த மாநில முதலமைச்சர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

மைசூரில் செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

"அரசியல் இலாபத்துக்காக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, காவிரி பிரச்னையை அடிக்கடி எழுப்பி வருகிறார். காவிரி விவகாரத்தில் கர்நாடகத்தின் நலனைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கின்றோம். கிருஷ்ணராஜசாகர் அணை நிரம்பினால் தமிழகத்துக்கு தாராளமாக தண்ணீர் திறந்துவிடப்படும்.

காவிரி மேலாண்மை சபை அமைப்பது அவசியமற்றது. எந்தக் காரணத்தைக் கொண்டும் காவிரி மேலாண்மை சபையை அமைக்க கர்நாடக நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய அமைச்சர்கள் அனுமதிக்க மாட்டார்கள். காவிரி மேலாண்மை சபை அமைக்கும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபடாது.

காவிரி விவகாரத்தை அவசியமில்லாமல் அவ்வப்போது ஜெயலலிதா எழுப்பி வருகின்றார். இதுபோன்ற நடவடிக்கைகளை அவர் நிறுத்திக் கொள்வது நல்லது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

> காவிரி விவகாரத்தை அவசியமில்லாமல் அவ்வப்போது ஜெயலலிதா எழுப்பி வருகின்றார். இது போன்ற நடவடிக்கைகளை அவர் நிறுத்திக் கொள்வது நல்லது

இந்தியாவின் முதலாவது விமானம் தாங்கிக் கப்பலான ஐ.என்.எஸ்.விக்ரமாதித்தியா நேற்றுமுன்தினம் பிரதமர் நரேந்திர மோடியால் நாட்டுக்கு அர்ப்பணிப்புச் செய்யப்பட்டது. அந்த நிகழ்வுகளின் பின்னர் கப்பலில் தரித்து நின்ற இந்தியப் போர் விமானத்தில் அமர்ந்து பார்வையிடுகின்றார் பிரதமர். (ற)

துருக்கியரை விடுவிக்க பேச்சு ஆரம்பம்

பாக்தாத், ஜூன் 16

ஈராக்கின் மோசுல் நகரில் கடத்திச் செல்லப்பட்ட 80 துருக்கியர்களையும் மீட்பதற்கான பேச்சு நடைபெற்று வருகின்றது என்று துருக்கி அரசு தெரிவித்துள்ளது.

ஜசில் எனப்படும் தீவிரவாத அமைப்பு சில நாள்களுக்கு முன்னர் ஈராக்கின் மோசுல் நகரைக் கைப்பற்றியதுடன் அங்கிருந்த 80 துருக்கியர்களை கடத்திச் சென்றது.

இந்நிலையில் பிணைக் கைதிகளை மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ள துருக்கி அரசு, அதற்கான பேச்சு தொடங்கப்பட்டுள்து என்றும் கூறியுள்ளது.

துருக்கியர்கள் யாரும் ஈராக்கிற்கு பயணிக்க வேண்டாம் என அறிவுறுத்தியுள்ள அந்நாட்டுவெளியுறவு அமைச்சகம், ஈராக்கில் உள்ள அனைவரையும் சொந்த நாட்டுக்கு திரும்பும்படியும் அறிவுறுத்தியுள்ளது. அதேவேளை, கடத்திச் செல்லப்பட்ட துருக்கியர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையும் வலியுறுத்தியுள்ளது. (ற)

பாகிஸ்தானில் நிலநடுக்கம்

இஸ்லாமாபாத், ஜூன் 16

பாகிஸ்தானின் பெஷாவர், ஸ்வத் எல்லைப் பகுதியில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிச்டர் அளவுகோலில் 6.0 அலகுகளாகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தின் மையம் இந்துகுஷ் மலைப்பகுதியில் காணப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் எவையும்வெளியாகவில்லை.(ற)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் அவரின் மனைவி மிச்சல் ஒபாமா ஆகியோர் பாம் சிபிரிங்ஸுக்குச் சுற்றுப்பயணம் சென்றுள்ளனர். அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் தம்து பாரம்பரிய உடையணிந்து வந்திருந்த சிறுவர்களுடன் உரையாடிக் குதூகலித்தார் பராக் ஒபாமா. (ற)

உக்ரைனின் விமானத்தை வீழ்த்தினர் கிளர்ச்சியாளர்கள்

இராணுவத்தினர் உட்பட 49 பேர் சாவு

கீவ், ஜூன் 16

உக்ரைன் இராணுவத்துக்குச் சொந்தமான விமானம் ஒன்று ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களால் சுட்டுவீழ்த்தப்பட்டதில், உக்ரைன் இராணுவத்தினர் உட்பட 49 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தத் தகவலை அந்த நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

உக்ரைன் விமானப் படைக்குச் சொந்தமான 'ஐஎல்-76' ரக ஜெட் விமானம் தலைநகர் கீவில் இருந்து மாற்று பாதுகாப்பு பணிக்காக இராணுவத்தினரையும், போர் தளபாடங்களையும் ஏற்றிக்கொண்டு

லுகான்ஸ்க் விமான நிலையத்துக்குப் பயணித்தது.

லுகான்ஸ்க் விமான நிலையத்தில் குறித்த விமானம் தரையிறங்க முயன்றபோது அந்த விமானம் மீது கிளர்ச்சியாளர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். அதில் சேதமடைந்த விமானம் விழுந்து நொருங்கியது. விமானத்தில் பயணித்த 40 இராணுவத்தினர் மற்றும் விமான ஊழியர்கள் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்ய மேற்கு எல்லையில் 25 கிலோமீற்றர் தொலைவுக்குள் உள்ள லுகான்ஸ்க்கில் உக்ரைன் இராணுவத்துக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் நடைபெற்று வரும் கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பகுதியில் கடும் துப்பாக்கிச்சூடு மற்றும் குண்டு வெடிப்பு சத்தங்கள் கேட்ட வண்ணம் உள்ளன என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ற)

'எம்.ஹெச் -370' பயணிகளுக்கு இழப்பீடு

கோலாலம்பூர், ஜூன் 16

காணாமற் போன மலேசிய விமானத்தில் பயணம் செய்தவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற் கட்டமாக ஒவ்வொரு பயணியின் குடும்பத்தினருக்கும் சுமார் 90 லட்சம் ரூபா வழங்கப்படுகிறது.

இதுவரை மலேசியாவைச் சேர்ந்த 6 பேரின் குடும்பத்தினருக்கும், ஒரு சீனப் பயணியின் குடும்பத்தினருக்கும் இழப்பீடுத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ள காப்பீட்டு நிறுவனம், மேலும் 40 சீனக் குடும்பத்தினரின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவித்துள்ளது.

மலேசிய அரசு இன்னமும் காணாமற் போன விமானத்தின் நிலை குறித்து இறுதி முடிவை அறிவிக்காததால் முழு இழப்பீடையும் தற்போது வழங்கஇயலாதுஎன்றுகாப்பீட்டு நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த மார்ச் 8ஆம் திகதி கோலாலம்பூரில் இருந்து பீஜிங் நோக்கி 239 பேருடன் பயணித்த 'எம்.ஹெச் -370' விமானம் காணாமற் போனது.(ற)

பாக்தாத்தில் போர்ப் பதற்றம்

தீவிரவாதிகள் கடும் தாக்குதல்

பாக்தாத், ஜூன் 16

ஈராக் தலைநகர் பாக்தாத்தை நோக்கித் தீவிரவாதிகள் கடும் தாக்குதல்களை நடத்திவருகின்றனர். அதனால் பாக்தாத்தில் போர்ப்பதற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கைகளுக்கு அந்த நாட்டு இராணுவம் தயார் நிலையில் உள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதங்களால் ஈராக்கில் தீவிரவாத அமைப்புகள் தாக்குதல் நடத்தி வருவதுடன் சில நகரங்களையும் கைப்பற்றியிருந்தன. அவற்றில் சில நகரங்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தி மீளக் கைப்பற்றியபோதும், தீவிரவாதிகள் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடத்தியவண்ணம் உள்ளனர்.

தற்போது அவர்கள் தலைநகர் பக்தாத்தை நோக்கி முன்னேறிய வண்ணம் உள்ளனர். அதனால் அங்கு போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது..

பெருமளவு இராணுவத்தினர் பாக்தாத்தில் குவிக்கப்பட்டுள்ள நிலையில், அங்குள்ள இளைஞர்கள் தாமாக முன்வந்து இராணுவத்தினருடன் இணைந்து வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)

தாமாக முன்வந்து இராணுவத்தில் இணையும் இளைஞர்கள் முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

ஆப்கனில் தாக்குதல்

46 பேர் பரிதாபச் சாவு

காபூல், ஜூன் 16

ஆப்கனில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் நடைபெற்றுவரும் நிலையில், தலிபான்கள் நடத்திய தாக்குதல்களில் 46 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கன் ஜனாதிபதி ஹமீட் கர்சாயின் பதவிக்காலம் முடிவடைவதால், அந்தப் பதவிக்காக முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்லா அப்துல்லாவும், முன்னாள் உலக வங்கி அதிகாரி அஷ்ரஃப் கனியும் போட்டியிடுகின்றனர். தேர்தலில் யாரும் பங்கெடுக்கக் கூடாது என்று தலிபான் அமைப்பு எச்சரிக்கை விடுத்திருந்த நிலையிலும், பெருமளவு மக்கள் வாக்களித்திருந்தனர்.

இந்தநிலையிலேயே தேர்தலுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தலிபான்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் 150 இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்றும், 46 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ற)

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

மேடம்: உறவினர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்து மனநிறைவு அடைவீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். மழலைச் செல்வம் இல்லாதவர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும்.

இடபம்: உங்கள் எதிரிகளின் பலம் குறையும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். மன அழுத்தம் மறையும். சிந்தனையில் தெளிவு உண்டாகும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள். உத்தியோகத்தர்கள் நன்மை அடைவர்.

மிதுனம்: சகோதர, சகோதரிகள் மற்றும் நண்பர்கள் மூலமாக நன்மை அடைவீர்கள். புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். ஆன்மிகப் பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். புத்திசாலிகளின் நட்பைப் பெற்று பயனடைவீர்கள்.

கடகம்: எதிரிகளால் தொல்லைகள் ஏற்படாது. வீண் வழக்கு களிலிருந்து விடுபடுவீர்கள். அலைச்சல்களுடன் நடைபெற்ற செயல்கள் நல்லபடியாக முடிவடையும். வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் கை வந்து சேரும்.

சிங்கம்: சிலர் மனம் விரும்பிய வீட்டுக்குக் குடி பெயர்வார்கள். தக்க சமயத்தில் உயர்ந்தவர்களின் நட்பைப் பெற்று கௌரவக் குறைவு ஏற்படாமல் காக்கப்படுவீர்கள். உறுதியின்றிச் செய்த வேலைகளில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு அவை உடனடியாக நடந்தேறும்.

கன்னி: உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு தேடி வரும். விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கும். மேலதிகாரிகளின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். சக ஊழியர்களுடன் நல்ல நட்பு தொடர்வதால் உங்களின் வேலைகள் குறித்த காலத்துக்குள் நிறைவேறிவிடும்.

துலாம்: உங்களின் வேலைத் திறனைக் கூட்டிக்கொள்ள புதிய அலுவலகப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக் கும். வியாபாரிகள் போட்டிகளையும், பொறாமைகளையும் சந்தித் தாலும் பொறுமையுடன் செயற்பட்டு அவற்றைச் சமாளிப்பீர்கள்.

விருச்சிகம்: உங்களின் சமயோசிதமான புத்தியால் பிரச்சினை களிலிருந்து தப்பித்துக்கொள்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு இன்றைய நாள் நன்றாக இருக்கும். அரசியல்வாதிகள் மிகப் பெரிய உதவிகளைச் செய்து பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

தனுசு: சுலபமாக முடிந்துவிடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். மனதில் இருந்த கவலையை போக்கி நம்மதி தருவார். தடைப்பட்ட பணவரத்து தடைநீங்கி கைக்கு வந்து சேரும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும்.

மகரம்: போட்ட திட்டங்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்த தன வருவாய் சிக்கல்களை மெல்ல மெல்ல சமாளிப்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் இருந்த தாமத நிலை மாறும்.

கும்பம்: பணம் தாராளமாகக் கிடைக்கும். அவ்வப்போது சிற்சில வேளைகளில் கையைப் பிசைந்து கொண்டு இருப்பீர்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் நட்பைப் பெற்றுக் கொள் வீர்கள்.

மீனம்: நீங்கள் படும் கஷ்டம் வெளியே தெரியாது. நீங்கள் எபோதுமே பிறர் கண்ணுக்கு செளகரியமான வாழ்க்கை வாழும் ஆளாகத் காட்சி தருவீர்கள். நீங்கள் யாரிடமும் உங்களது குறைகளைத் தெரி வித்துக்கொள்ள மாட்டீர்கள்.

நாளை

ஆனி-03 செவ்வாய்க்கிழமை | 17.06.2014

திதி: பஞ்சமி மு.இ.10.43 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.ப.07.47 வரை

சுபநேரம்: 10.23-11.53 வரை
இராகுகாலம்: 02.53-04.23 வரை

விவேகானந்தர் சிந்தனையில் இருந்து.... ஆன்மாவுக்கு அழிவில்லையா?

மகாபாரதம் என்ற ஒரு பெருங்காப்பியம் இந்தியாவில் வழக்கில் இருக்கிறது. இந்தக் காப்பியத்தின் தலைவரான யுதிஷ்டிரரைத் தர்ம தேவதை பின்வரும் கேள்வியைக் கேட்டது:

"உலகத்தில் உள்ள அனைத்திலும் வியப்பைத் தருவது எது?"

"தம் வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் தம்மைச் சுற்றிலும் சாவையும் அழிவையும் மேமக்கள் கண்டுகொண்டிருந்தாலும், தங்களுக்கு அழிவே இல்லை என்ற உறுதியான கொள்கையை அவர்கள் விடாமல் பிடித்துக் கொண்டிருப்பதே வியப்பைத்தருவது" என்று விடை கூறினார் அவர்.

உண்மையிலேயே இந்தப் பிரபஞ்சத்தில் மிகவும் வியப்பைத் தருவது இதுதான். பல்வேறு கொள்கைஉடையவர்கள் பல்வேறு சமயங்களில் ஆன்மாவுக்கு அழிவு உண்டு என்று பரப்புரை செய்திருந்த போதிலும் புலனுலகம், புலனைக் கடந்த உலகம் இவற்றுக்கு இடையே உள்ள திரையைப் பகுத்தறிவால் விலக்க முடியாவிட்டாலும், தனக்குச் சாவே இல்லை என்ற உறுதிமட்டும் மனிதனை விட்டு நீங்கவில்லை.

நாம் வாழ்க்கை முழுவதும் ஆராய்ந்தாலும், வாழ்வு, சாவு என்ற பிரச்சினைகள் உண்டு அல்லது இல்லை என்பதை நம்மால் அறிவுபூர்வமாக விளக்க முடிவதில்லை. மனிதனின் அழியும் தன்மை அல்லது அழியாத் தன்மையைப் பற்றி நாம் நம் ஆசை தீர விரிவாக எழுதலாம், பேசலாம், அறிவுரை வழங்கலாம், கற்பிக்கலாம்; நாம் இந்த இரண்டுள் ஒன்றின் தீவிரவாதிகளாகவும் மாறலாம்; நாம் நம் கொள்கைக்குப் பயன்படுகின்ற புரியாத பெயர்களால் மற்றவர்களைக் குழப்பலாம்; இப்படியெல்லாம் செய்த பிறகு, 'நாம் இந்தப் பிரச்சினைக்கு முடிவு கண்டுவிட்டோம்' என்ற தவறான கருத்து நிலையால் நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு மன அமைதி பெற்றதாக எண்ணலாம்; அபூர்வமான சமய சம்பந்தமான மூடக் கொள்கைகளை நாம் அல்லது இவற்றிலும் மோசமான விஞ்ஞான மூடக்கொள்கைகளைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ளலாம். ஆனால் நாம் தர்க்க அறிவான சதுரங்க விளையாட்டில் மீண்டும் அடித்துத் தள்ளப்படுகிறோம்.

உலகிலேயே விலை உயர்ந்த நீல நிற வைரம் கண்டுபிடிப்பு



உலகிலேயே விலையுயர்ந்த நீல நிற வைரம் தென் ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தென் ஆபிரிக்கா வின் குழினென் சுரங்கத்தில் பெட்ரா வைரம் என்ற நிறுவனத்தால் 122.52 கரட் நீல நிற வைரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் 50% கரட் வெள்ளை நிற வைரம் 20 மில்லியன் யூரோக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் இந்த வைரம் அதை விட அதிகமான விலையில் விற்பனையாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த நிறுவனம், சில மாதங் களுக்கு முன் 29.6 கரட் நீல நிற வைரத்தை 14 மில்லியன் யூரோக்களுக்கு விற்பனை செய்துள்ளது. இதற்கிடையில் இந்த வைரம் கிடைத்துள்ளதால் சந் தோஷத்தில் மிதக்கின்றனர் அந்த நிறுவனத்தினர்.

வெள்ளை நிற வைரத்தை விட நீல நிற வைரம் விலை மதிப் பானது என்பதால் இந்த வைரம் முந் தைய உலக சாதனையை முறி யடிக்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

சுடோக்கு
எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

8				9		2	1	
5			1		7	4		6
	2		6					
		8		5		1	6	4
			4	3	6			
4	9	6		8		3		
					5		7	
1		7	3		9			2
	5	2		7				1

நேற்றைய சுடோக்கின் விடை

5	9	1	7	8	6	2	3	4
4	6	2	1	5	3	8	7	9
8	7	3	2	4	9	1	6	5
3	1	6	5	7	2	9	4	8
9	2	4	6	1	8	3	5	7
7	5	8	3	9	4	6	2	1
1	3	9	4	6	7	5	8	2
6	8	7	9	2	5	4	1	3
2	4	5	8	3	1	7	9	6

புத்தாக்குநர் போட்டியில் வெற்றி பெற்றோர்

தென்மராட்சி வலயத்தின்

தென்மராட்சி, ஜூன் 16
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட வலய மட்ட புத்தாக்குநர் போட்டியில் பின்வருவோர் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளோரின் விவரத்தை வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.
வகுப்பு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு:-
தரம் 6- பாலச்சந்திரன் ஹம்சிகா, சதானந்தன் துளிஸ்னா, கணேசலிங்கம் சாம்பவி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
தரம் 7 - புனிதநாதன் வைசாலி, முகுந்தன் தர்சிகா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
என்.சுடாரினி- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, ராஜ்குமார் கேஜுஜன்- மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை, ஆர்.ராகவன்- கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.
தரம் 8 - வீரபத்திரசர்மா திருபரன், திருநாவுக்கரசு தனுஷியன். கிருஷ்ணமூர்த்தி ஐயர் பிருந்தாவன்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
விஜயரத்தினம் அபிராம்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ரி.அர்ச்சகி- சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
தரம் 9 - எம்.ஆரூரன்- கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை. (வ-9)

மாணவரின் முத்தமிழ் விழா

பளை, ஜூன் 16
பளைக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களின் முத்தமிழ் விழா வியாழக்கிழமை பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.
இந்த விழாவில் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 14 பாடசாலைகளின் மாணவர்களால் இயல், இசை, நாடக நிகழ்வுகள் அரங்கேற்றப் பட்டன.
கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.ஆனந்தசிவம் தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேலும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் எஸ்.பரமநாதபிள்ளை, வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மதுரநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
புலம்பெயர் நாட்டில் உள்ள கல்லூரியின் பழைய மாணவன் எஸ்.சிவபாலராஜாவின் நிதிப் பங்களிப்புடன் விழா நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

சூழல் தினத்தையொட்டி நடைபெற்ற சிரமதானப் பணிகள்



கொழும்புத்துறை சென்.ஜோசப் மாணவர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டபோது...

கொழும்புத்துறை, ஜூன் 16
உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கடந்த 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரம் வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.
பாடசாலைகள் சனசமூக நிலையங்கள், பொது அமைப்புகள், திணைக்களங்கள், நிறுவனங்கள் என்பன பல சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.
சந்தைகள், வீதிகள், பொது இடங்களில் உள்ள பற்றைகள், குப்பை கூளங்களை அகற்றி சூழலை சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காண முடிகிறது.
சுற்றுச்சூழல் விழிப்புணர்வு விளம்பரப் பலகைகள் பல இடங்களிலும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளதோடு, விழிப்புணர்வுப் பேரணிகளும் நடைபெற்று வருகின்றன. (வ-135)

அனைவரது மனங்களையும் கவர்ந்த சேவையாளர்

கைதடி முதியோர் இல்லப் பணியாளருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 16
இங்கு வாழும் முதியோர்களது மனங்களை தனது அளப்பரிய சேவையால் வென்றுள்ளார் திருமதி வி.செல்வராணி.
இவ்வாறு கைதடி அரச முதியோர் இல்லத்தில் 23 வருடங்கள் சேவை புரிந்து தனது 60 ஆவது வயதின் நிறைவில் இளைப்பாறிய திருமதி வி.செல்வராணியின் சேவை நலன் பாராட்டு விழாவுக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்திய கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.
இந்தச் சேவை நலன் பாராட்டு நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி கைதடி அரச முதியோர் இல்லத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.
அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-
அரச உத்தியோகத்தர் தமது 60 ஆவது வயதைப் பூர்த்தி செய்தவுடன் இளைப்பாறிச் செல்லவேண்டும். இதுதவிர்க்க முடியாதது. திருமதி செல்வராணி ஊதியத்துக்காக மட்டும் வேலை செய்யவில்லை. இங்குள்ள அனைவரினதும் ஆசீர்வாதமும் அன்பும் அவருக்குப் பரிசாகக் கிடைத்துள்ளன. அவரது சேவைக் காலத்தில் தனது அர்ப்பணிப்பான சேவையால் எம்மையும் இங்கு வாழும் முதியவர்களைக் கவர்ந்துள்ளார் இங்குள்ள அனைவருடனும் மிகுந்த அர்ப்பணி புடன் பழகியுள்ளார். அவருக்கு விரோதிகள் எவருமில்லை. அவருடைய தாயார் 28 வருட கால சேவையை அமைய அடிப்படையில் இங்கு ஆற்றி இளைப்பாறியுள்ளார். முதியோருக்காக அந்தக் காலத்தில் சேவையாற்றிய அவரது சேவையை அளவிட முடியாது. 23 வருடங்கள் சேவை புரிந்துள்ள செல்வராணி சிறந்த பாடகி. முதியோர்களை அவர் தனது பாடலாலும் கவர்ந்துள்ளார். இவர் எமது நலன்புரி சங்கத்தின் அங்கத்தவரும் ஆவார்.
முதியோர்கள் முதற்தடவையாக இவரது பிரியாவிடை நிகழ்வில் கலந்துள்ளார்கள். அவரது பிரிவு ஈடுசெய்ய முடியாதது எனத் தெரிவித்துள்ளார்.
இந்த நிகழ்வில் வடமாகாண சமூக நலத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ் உரையாற்றுகையில்:
அன்பு, பாசம், பண்பு ஆகிய வற்றில் எவரும் தப்பிவிடமுடியாது. செல்வராணி எல்லோருடனும் அன்பாகப் பழகும் பண்புள்ளவர். இங்கு அவர் சிறப்பாகக் கடமையாற்றியதை நான் பார்த்துள்ளேன். முதியவர்களுக்கு சேவையாற்றியதை அவர் சுமையாக நோக்கவில்லை. சுகமாகவே அவர் நோக்கித் தனது கடமையை ஆற்றியுள்ளார். அவரது பணி மிகவும் மகத்தானது எனத் தெரிவித்தார்.

நோயாளர் நலன்புரி சங்க புதிய நிர்வாகம் தெரிவு

தென்மராட்சி, ஜூன் 16
கொடிகாமம் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிசங்க புதிய நிர்வாகம் அண்மையில் தெரிவுசெய்யப்பட்டது.
சங்கத்தின் தலைவராக மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் திருமதி குமுதினி பாஸ்கரனும், செயலாளராக க.ஜெனகனும், பொருளாளராக கா.கஜேந்திரனும் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.
மருத்துவமனையின் தேவைகள் அதிகம் காணப்படுவதால் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ள நலன்விரும்பிகளிடமிருந்து உதவிகள் கோருவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சங்கத்தில் ஆயுள்கால உறுப்பினர்களாக இணைய விரும்புவோர் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கச் செயலாளர் க.ஜெனகன் அறிவித்துள்ளார். (வ-9)

குடும்ப வன்முறை குறித்து நடைபெற்ற செயலமர்வு

தென்மராட்சி, ஜூன் 16
கிளிநொச்சி மாவட்ட செயலக தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையினர் யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் அனுசரணையுடன் கிளாலிப் பிரதேச மக்களுக்கான "குடும்ப வன்முறைகளும் சிறுவர் பாதுகாப்பும்" என்ற தலைப்பிலான செயலமர்வை கடந்த திங்கட்கிழமை கிளாலிப் பாடசாலையில் நடத்தினர்.
தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட உத்தியோகத்தர் இ.செந்தூரனால் குடும்பங்களில் இடம் பெறும் வன்முறைகள் சிறுவர்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பது தொடர்பாகவும் குடும்பங்களில் சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப் படும் வன்முறைகள் தொடர்பாகவும் செயலமர்வில் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன. (வ-9)



ஐம்பது வருடங்களாக திருத்தப்படாத வீதி

கடந்த 50 வருடங்களுக்கு மேலாகச் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப் படும் கைதடி மேற்கு புலம் வீதியைப் புனரமைத்துத் தருமாறு வீதியைப் பயன்படுத்தும் மக்கள் சாவகச்சேரி பிரதேச சபையினரைக் கோரியுள்ளனர். குறித்த வீதி அமைக்கப்பட்ட காலம் தொடக்கம் புனரமைக்கப்படாமல் உள்ளது. வீதியில் செல்லும் கனரக வாகனங்களால் சேதமடைந்து வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் சைக்கிள்களில் செல்வோரும், நடந்து செல்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
மழை காலங்களில் வீதியின் பலஇடங்களில்வெள்ளம்தேங்கி நிற்பதால் நடந்து செல்லும் மாணவர்கள்அணியும்காலணி மற்றும் காலுறைகள் நிறம் மாறும் நிலை உள்ளது.
எனவே குறித்த வீதியை தார் வீதியாகப் புனரமைத்து வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-9)

ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்கத்தில் இணைவதால் பல்வேறு நன்மைகள்

நம்பிக்கை நிதிய தாய்ச் சங்கத் தலைவர் கருத்து

அச்சுவேலி, ஜூன் 16
"பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் உறுப்பினர்களாக இணைந்து கொள்வதன் மூலம் ஓய்வூதியக் காரர்கள் மற்றும் அவர்களின் பின் உரித்தாளிகள் பல்வேறு நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும். உறுப்பினர்களின் நல உதவிகளை கருத்தில் கொண்டே சங்கத்தின் சகல செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன"
இவ்வாறு கூறினார் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் தாய்ச் சங்கத்தின் தலைவர் ஆர்.எம்.வி.ஜே.ரணதுங்க.
பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ்.மாவட்ட சங்கத்தின் 5 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் சங்கத்தின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.
கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தாய்ச் சங்கத்தின் தலைவர் தொடர்ந்து உரையாற்றும் போது:
யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்துக்கு நிரந்தரமான கட்டடம் இல்லை என்ற குறையாடு கருத்தில்கொள்ளப் பட்டுள்ளது. பொருத்தமான காணியை அடையாளப் படுத்தினால் நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான நிதி உதவியை தாய்ச் சங்கம் வழங்குவதற்கு தயாராக உள்ளது.
எனவே, புதிய நிர்வாகிகள் இந்த விடயத்தில் கூடிய அக்கறை எடுத்து உரிய காணியை தேடிக்கொள்ள முன்வரவேண்டும்" என்று

சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஜூன் 16

புலோலி வடமேற்கு, வில்லிபாதி அருள்மிகு முருகன் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும் தீர்த்தத் திருவிழாவுடன் உற்சவம் நிறைவு பெறும். (ஒ-173)

* * *

யாழ்.வண்ணார்பண்ணை வடகிழக்கு, கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத்திருவிழாவும், 3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் 4 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஒ)

* * *

தென்மராட்சி, ஜூன் 16

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஞான வீரபத்திரர் ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை பகல் விசேட சங்காபிஷேகம் நடைபெற்று இரவு சுவாமி நகர் வீதியுலா வருவார். (ஒ-9)

* * *

சாவகச்சேரி, ஜூன் 16

சாவகச்சேரி சங்கத்தானை முருகமூர்த்தி (வைரவர்) ஆலய பெருந்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ-9)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை மஞ்சத்திருவிழாவும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும். (க-7)

* * *

புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரம் பிட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி மாலை வேட்டைத்திருவிழாவும் இரவு சப்பரத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

தேர்த்திருவிழா 3 ஆம் திகதி வியாழக்கிழமையும், தீர்த்த உற்சவம் மறுநாள் வெள்ளிக்கிழமையும் இடம்பெறவுள்ளன. (க)

* * *

அச்சுவேலி, ஜூன் 16

ஆவரங்கால் பார்வதவர்த்தனி அம்மை சமேத நடராஜ இராமலிங்க சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், அடுத்த மாதம் 2 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், மறுநாள் 3 ஆம் திகதி இரதோற்சவமும், 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (க)

* * *

வவுனியா பூந்தோட்டம் அருள்மிகு ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் காலை 9 மணியளவில் பறவைக் காவடிகள், செடில் காவடிகள், பாற்செம்பு, தீச்சட்டி ஆகியவற்றுடன் பக்தர்கள் வவுனியா கந்தசாமி ஆலயத்திலிருந்து புறப்பட்டு நரசிங்கர் ஆலயத்தை வந்தடைவார்கள். (க)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபராக நவமணி கடமைகளைப் பொறுப்பேற்கின்றார் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 16

உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு அதிபராக முன்னரே நியமனம் செய்யப்பட்ட திருமதி நவமணி சந்திரசேகரம் இன்று காலை 8 மணிக்கு தனது அதிபர் பொறுப்புக்களை ஏற்கவுள்ளார். மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவை அடுத்து வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனால் அவருக்கான கடிதம் வழங்கப் பட்டது.

குறித்த அதிபரது நியமனம் முறையற்றது என்று குறித்த பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தன. அவரது நியமனம் வடமாகாண ஆளுநரின் பரிந்துரையில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நியமனம் செய்யப்பட்டது.

அந்த நியமனம் முறையற்றது என்று பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன இணைந்து யாழ்.மேல் நீதிமன்றில் எழுத்தாணை ஒன்றைக் கேட்டிருந்தது. அதன்பிர்காரம் குறித்த அதிபர் நியமனத்துக்கு யாழ்.மேல்நீதிமன்று இடைக்காலத் தடைபிறப்பித்திருந்தது. அதற்கு எதிராக அந்த அதிபர் மேன் முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு விண்ணப்பம் ஒன்றை சட்டத்தரணி தி.ஜனகன் மூலமாகத் தாக்கல் செய்திருந்தார். இலங்கை ஆசிரியர் சங்கம் அதனை முன்னெடுத்திருந்தது.

அதனைப் பரிசீலித்த மேன் முறையீட்டுநீதிமன்று மீளாய்வு மனுவில் கேட்கப்பட்டிருந்த இடைக்கால நிவாரணத்தை இரத்துச் செய்து நவமணி சந்திரசேகரம் குறித்த பாடசாலையில் அதிபராகக் கடமையாற்ற முடியும் என்று கடந்த மாதம் 5 ஆம் திகதி இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தது.

ஆனால் அந்த உத்தரவை செயலாளர் சத்தியசீலன் நடைமுறைப்படுத்தவில்லை. அதனால் அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் அது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் சட்டத்தரணி மூலமாக நகர்தல் பத்திரம் சமர்ப்பித்திருந்தார்.

அதனையடுத்து செயலாளர் சத்தியசீலன் மற்றும் தற்போது அதிபராகவுள்ள திருமதி கௌரி சேதுராஜா ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டனர். முன்னர் விடுத்த நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தவில்லை என்று கேள்வியெழுப்பிய நீதிமன்று எதிர்வரும் திங்கட்கிழமை (இன்று) காலை 8 மணிக்கு மனுதாரரான நவமணி அதிபர் குறித்த பாடசாலையில்அதிபர்கடமையைப்பொறுப்பேற்க வேண்டும். அதற்கான கடிதம் அதற்கு முதலே வழங்கப்பட வேண்டும் என்றும் தவிர திருமதி கௌரி சேதுராஜா அதே பாடசாலையில் உப அதிபராகவோ அல்லது ஆசிரியராகவோ பணியாற்ற வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நேற்று கடிதம் அனுப்பப்பட்டு விட்டது. நவமணி இன்று அங்கு அதிபர் கடமைகளைப் பொறுப்பேற்கிறார்.

குறித்த பாடசாலைக்கு தரம்2-II தராதரமுடைய திருமதி கௌரி சேதுராஜா வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனால் நியமனம் செய்யப்பட்டிருந்தார். அதன்பின்னர் தரம் I தராதரமுடைய நவமணி சந்திரசேகரம் ஆளுநரின் பரிந்துரையின்போில் அதே சத்திய சீலனால் கடந்த வருடம் நியமனம் செய்யப்பட்டார். ஆனால் ஏற்கனவே அங்கு அதிபராக உள்ள கௌரி அதிபர் பதவியில் தொடர்ந்தும் அங்கேயே இருந்து வந்துள்ளார். உரிய பாடசாலையும் செயலாளரால் வழங்கப்பட வில்லை. மாற்று ஏற்பாடும் செய்யப்பட வில்லை. அதனால் அந்தப் பாடசாலைக் கென நியமனம் செய்யப்பட்ட நவமணி அதிபருக்கு உரிய இடம் வழங்கப் படவில்லை. இந்நிலையிலேயே அவரது நியமனம் முறையற்றது என்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

வடக்கில் கல்விப் புலத்தில் தொடரும் இத்தகைய அராஜகத்துக்கு எதிராக தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கல்வி அதிகாரிகள் தமது வேண்டியவர்களுக்கு சலுகை வழங்கி வருகின்றனர் என்று இடமாற்றத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சில வாரங்களுக்கு முன்னர்சுட்டிக்காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (வ-4)

முதியோருக்கான விநாடி வினா போட்டி

தென்மராட்சி, ஜூன் 16

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி முதியோர்களுக்கு இடையிலான விநாடி வினாப் போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச, மாவட்ட, மாகாண நிலைகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் முதியோர்கள் தத்தமது பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவைகள் பிரிவில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மட்டப் போட்டிகள் ஜூலை மாதம் ஆரம்பமாகி மாவட்ட, மாகாண நிலை போட்டிகளின் தேசிய நிலைப் போட்டிகள் செப்ரெம்பரில் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்படுவோருக்கு ஒக்ரோபர் மாதம் நடைபெறும் முதியோர் தின விழாவில் பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த முதியோர்கள் தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பதிவு செய்யுமாறு தென்மராட்சி பிரதேச முதியோர் பேரவையினர் அறிவித்துள்ளனர். (வ-9)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் வசந்தினி

(வசந்தி)

அருளானந்தம்

மண்ணில் 05.11.1960

விண்ணில் 17.05.2014

கடந்த 17.05.2014 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு வசந்தினி (வசந்தி) அருளானந்தம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இன்று (16.06.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(49074)(7.6.3)

404, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

சிவகுரு நித்தியானந்தன்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு நித்தியானந்தன் நேற்று (15.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு மற்றும் இந்திராதேவி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி தம்பிராசா தம்பதியரின் மருமகனும், திருமதி ஞானரூபம் அவர்களது அன்புக் கணவரும், நிஷாந்தி (தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி 2011-2013) சிவஞானரத்னம் (சிவா) ஆகியோரது அன்புத் தந்தையும், சுதனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.06.2014) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு. (49073) (7.6.3) தகவல் : குடும்பத்தினர்.

சமாதான நீதிவான்

சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் தனபாலசிங்கம் சுதர்ஸன் நீதி அமைச்சால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு அண்மையில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (வ-9-4)

மரண அறிவித்தல்

சின்னையா மகேந்திரன்



சரசாலையைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மகேந்திரன் நேற்று முன்தினம் (14.06.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், நேசமலரின் (வவி) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வைரவி மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வக்சன், கிரிஜன், ஓவியா, கோகுலன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மதுசா (திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜீந்திரன், டிசானா ஆகியோரின் மாமனும், கஸ்மினாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி தூவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயிலடி, மட்டுவில். (43665) (45.6.3) தகவல்: குடும்பத்தினர்.

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்துக்கான சமூர்த்தி அலுவலகக் கட்டடம் புளியம்பொக்கணை பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. (ச-421)

நாடாளுமன்ற அரசியலிலிருந்து ஓய்வு பெறுகிறார் ஆனந்தசங்கரி

கொழும்பு, ஜூன் 16

எனது 55 வருட கால அரசியல் வாழ்வில் நான் எதிர்பார்த்த சமூகத்தை என்னால் உருவாக்கமுடியவில்லை. இதனால் நாடாளுமன்ற அரசியலில் இன்றுடன் (நேற்று) ஓய்வுகுகின்றேன். இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

அவரின் 81 பிறந்ததினத்தை ஒட்டி அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

'952 இல் ஆரம்பித்த எனது அரசியல் வாழ்வு, 1959 இல் தீவிரமடைந்து 55 ஆண்டுகள் சலிக்காது, மக்களுக்கு தொண்டாற்றி, கரடு முரடான பாதையில் காடு மேடுகள் ஏறி நீண்ட பிரயாணம் செய்து பல்வேறு துன்ப, துயரங்களில் பங்கேற்று, சலைக்காது, களைக்காது செயற்பட்டுள்ளேன். ஏறக்குறைய 60 ஆண்டுகளின் பின், கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கும் போது, எனக்கு வெறுமைபோல் தோன்றுகிறது. என் முயற்சிகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகிப் போய்விட்டன.

சமூக சேவையில் இருந்த ஈடுபாடே என்னை அரசியல் வாதி ஆக்கியது. அரசியலூடாகவே சமூக சேவை செய்வது இலகுவாக இருந்ததால், ஓயாமல் ஓடி உழைத்தேன். உண்மையை உரத்துக் கூறினேன் -உண்மையாகவே நடந்தேன். சமூகம் என்னை ஏற்று பதவிகளைத் தந்தது. கிராம சபைத் தலைவராக, பட்டணசபைத் தலைவராக, நாடாளுமன்ற உறுப்பினராக உயரவைத்தும் பார்த்தது.

தந்தை செல்வா அகிம்சாவாதி. அவர் வழி - அகிம்சை வழி. அவர் இன ஒற்றுமையையும், எமது மக்களின் விடுதலையையும் விரும்பினார். அவர் விருப்பத்தை நிறைவேற்ற அவர் விட்டுச் சென்ற பணியில் நிரந்தரமாக ஈடுபட உத்தேசித்து, அமரர் அமீரின் தலைமையில் ஏனைய பலரின் பங்கெடுப்போடு அரசியல் பணி அதி தீவிரமாக நடந்தது. இன்று அவர்கள் அனைவரும் மறைக்கப்பட்ட - மறக்கப்பட்ட நிலையில், தமிழர் விடுலைக் கூட்டணியின் பெரும் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றிய நான், முறைப்படி அக்கட்சியின் செயலாளர் நாயகமாக உயர்ந்தும், சந்தர்ப்ப சூழ் நிலைகளால் என்னால் தந்தை செல்வாவின் கனவை நிறைவேற்ற முடியவில்லை என்பதை, எனது இந்த 81வது பிறந்த தினத்தில் எண்ணிப் பார்க்கின்றேன்.

இனி எதிர் காலத்தில் நடக்கும் எந்தத் தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை என தீர்மானித்துள்ளேன். தந்தை செல்வாவினால் உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்காக உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியை பலப்படுத்தி தந்தை செல்வாவின் கனவை நனவாக்குவதற்கும், போரால் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது மக்களின் நல் வாழ்விற்காகவும் எனது எஞ்சிய காலத்தை செலவு செய்யத் திட்டமிட்டுள்ளேன். எனது எதிர் காலத் திட்டம் பற்றி விரைவில் விரிவான அறிக்கையொன்றை வெளியிடுவேன் - என்றுள்ளது.(ஜ)

மெஞ்சக் கதவினை கொஞ்சம்.....

கபடத்துக்குத் துணை போகாதீர்

பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகம் சென்றால் போதும் என்ற எண்ணம்தான் இங்கு கூடுதலான மாணவரிடையே நிலவுகிறது. கலைத்துறைப்பாடங்களை, அதிலும் குறிப்பிட்ட சிலவற்றைத் தெரிவதே பட்டப்படிப்புக்கான வழி எனும் மனக் கணிப்பில் மருத்துவ, பொறியியல் துறைகளைத் தவிர்த்து விடுகின்றனர். இந்த நிலை தொடரின் பாலர் முன்பள்ளி ஆசிரியர் பதவிக்குக்கூட கலைப்பட்டதாரிகள் விண்ணப்பிக்கும் நிலையும் வரலாம். "ஆசிரியத்தரங்களின் தகுதியின்மை கல்வித்துறை அமைப்பில் குறை இருப்பதற்குக் காரணமாக இருக்கலாம்" எனக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்திருப்பது இதற்குப் பொருந்தி வருகிறதா? தமிழக அறிஞர் ஒருவர், "யாழ்ப்பாணத்தில் தடுக்கி விடுபவரைத் தூக்கி விடுபவர் ஓர் ஆசிரியராகத்தான் இருப்பார்" என்றது மண்ணில் தடுக்கி விழுபவருக்கு மட்டுமல்ல, சமூகத்தில் தடுக்கி விழுபவருக்கும் பொருந்தும். தூண்டியாக இருந்து எமது சமூகத்தைத் துலங்கச் செய்ய வேண்டியவர்கள், மாணவரது கற்றல் பயத்தைப் போக்கி, அவர்தம் வினைத்திறன்களை வெளிக்கொணர்வதில் ஆர்வமில்லாதிருப்பின் அது தமிழரின் கல்வித் தரத்தை மட்டுப்படுத்தும் - கட்டுப்படுத்தும் கபடத்துக்குத்துணை போவதாகும். கற்றல் செயற்பாடுகளில் மாணவரை ஓர்மத்துடன் ஈடுபடவைப்பதில் ஆசிரியர் சமூகத்தின் கவனக்குவிப்பு இங்கு கட்டாயமாகிறது.

கிழக்கு மாகாண மருத்துவமனை ஒன்றின் வெளிநோயாளர் பிரிவு மருத்துவரிடம் இரண்டு பெண்கள் ஒன்றாக வந்தனர். ஒருவர் தன்னுடன் வந்தவரைக் காட்டி "இவதமிழ், சிங்களம் தெரியாது" என்று சிங்களத்தில் தெரிவித்தார். மருத்துவரும் தன்னைப் போல் பெரும்பான்மை இனந்தான் என நினைத்த அந்தப் பெண்ணின் மனம் நோகாத விதமாக மருத்துவர் மென் சிரிப்புடன் "நானும் தமிழ்தான். தமிழில் கதையுங்கோ" என்றாராம் நோயென்று வந்தவரைப் பார்த்து. நாளை இங்குள்ள மருத்துவமனைகளுக்கு நோய் என்று வரும் உங்கள் உறவுகள் பிடரியைச் சொறியாமல் இருந்தால் போதும்.

செல்வவேலாயுதம்

சகல வசதிகளுடனும் புற்றுநோய் ஆஸ்பத்திரி

கொழும்பு,ஜூன் 16

அநுராதபுரம் வைத்திய சாலை வளவில் சகல வசதிகளுடன் கூடிய புற்று நோய் ஆஸ்பத்திரி ஒன்று நிர்மாணிக்கப்படும்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் ரஞ்சித் சமரகோன் இந்த வைத்தியசாலையின் நிர்மாண வேலைகளுக்காக 150 லட்சம் ரூபாவை பெற்றுத்தருவதாக உறுதியளித்துள்ளார் என்று அநுராதபுரம் மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் வைத்திய சாலையின் 8ஆம், 38ஆம் விடுதிகள் புற்று நோயாளர்களால் நிறைந்து காணப்படுகின்றன. ஒரு கட்டிலில் இரு நோயாளர் வீதம் இங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர். வெளி நோயாளர் பிரிவிலும் பெரும் எண்ணிக் கையான புற்று நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகை தருவதால் இந்த வைத்திய சாலை நிர்வாகம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகிறது. இதனையடுத்தே அநுராதபுரம் வைத்தியசாலை வளவில் சகல வசதிகளுடன் கூடிய புற்று நோய் ஆஸ்பத்திரி ஒன்று நிர்மாணிக்க வடமத்திய மாகாண முதலமைச்சர் ரஞ்சித் சமரகோன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

> அநுராதபுரம் வைத்திய சாலையின் 8ஆம், 38ஆம் விடுதிகள் புற்று நோயாளர்களால் நிறைந்து காணப்படுகின்றன.

உத்தேச புற்று நோய் ஆஸ்பத்திரியின் நிர்மாண வேலைகளுக்கு முதற்கட்டமாக 150 லட்சம் ரூபாவை வழங்குவதாகவும் நன்கொடையாளர்களின் உதவிகளையும் தாம் எதிர்பார்ப்பதாகவும் வடமத்திய மாகாண முதலமைச்சர் தெரிவித்தார்.

(ச)

விண்ணப்பங்களை ஒப்படையுங்கள்

ஜூலை 4 ஆம் திகதிக்கு முன்னர்

வடமராட்சி, ஜூன் 16

அடுத்த ஆண்டுக்கு அரச பாடசாலைகளில் முதலாம் தரத்துக்குமாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைக்கு முதலாம் தரத்தில் சேர்க்கப்படவுள்ள மாணவனின் வயது, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதியன்று 5 வயதைப் பூர்த்தி செய்திருப்பது அவசியமாகும். முதலாம் தரத்துக்கு ஒரு வகுப்புக்கு 40 பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்களில் நேர்முகப் பரீட்சை மூலம் 33 பேரும், முப்படைகள் மற்றும் பொலிஸாரின் பிள்ளைகள் 7 பேரும் உள்வாங்குவார்கள். தேசிய பாடசாலை ஒன்றுக்கு விண்ணப்பிக்கும் போது குறைந்த பட்சம் 3 மாகாணப் பாடசாலைகள் உட்பட 6 பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

(ச-173)

> முதலாம் தரத்துக்கு ஒரு வகுப்புக்கு 40 பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

வெடி பொருள்களுடன் மூன்று பேர் மாட்டினர்

கொழும்பு,ஜூன் 16

புத்தளம், அநுராதபுரம் பிரதான வீதியில் வெடி பொருள்களுடன் மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது, நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக புத்தளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஜெலட்னைட் குச்சிகளும், ஒரு தொகை வயர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

புத்தளம் ,ஆனமடுவ தோணிக்கல் பகுதியை சேர்ந்த இரு வரும், கடுவலை பகுதியை சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச)

எந்தத் தீர்மானமும் இதுவரை இல்லை

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அறிவிப்பு

கொழும்பு,ஜூன் 16

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் விசாரணைகளை எதிர்க்கும் வகையில் நாடாளுமன்றில் அரசால் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானத்துக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர் ஹசன் அலி ஆங்கில ஊடகமொன்றுக்கு அறிவித்துள்ளார்.

விசாரணைக் குழுவை நாட்டுக்குள் அனுமதிக்கக் கூடாது என்று தெரிவித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 13 ஆம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம், உத்தேச யோசனைத் திட்டமொன்றை ஒப்படைத்துள்ளனர்.

எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் இது தொடர்பிலான விவாதமும் நாடாளுமன்றில் நடத்தப்பட்டு, தீர்மானம் குறித்த வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. வாக்கெடுப்பில் ஆதாரவாக வாக்களிப்பதா? இல்லையா என்பதை இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்று ஹசன் அலி தெரிவித்தார். (ச)

அடுத்த தேர்தலில் மு.காவே ஆட்சியைத் தீர்மானிக்கும்

தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



அடுத்த ஆறு மாத காலத்தில் நடை பெறவுள்ள தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியே ஆட்சியைத் தீர்மானிக்கும் என்று கட்சியின் தலைவரும் நீதித்துறை அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்றையதினம் கொழும்பு புதிய நகரமண்டபத்தில் இடம் பெற்ற முஸ்லிம் காங்கிரஸின் 25 ஆவது பேராளர் மாநாட்டில் தலைமையேற்றுப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாணசபைகளுக்கான அதிகாரங்களைப் பறிக்கும் வகையில் செயற்படக்கூடாது என்பது உட்பட 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட நேற்றைய மாநாட்டில் மேலும் கருத்து வெளியிட்ட ஹக்கீம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றக் கைதியாக சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை எனத் திட்டவட்டமாக தெரிவித்த அதேவேளை முஸ்லிம்களின் பிரச்சினை விடயத்தில் அசமந்தப் போக்கை கைவிட்டு உடனடித் தீர்வுகளைக் காண ஜனாதிபதிக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

யாழ். விவசாயிகளின் முயற்சிகள் பாராட்டுக்குரியது

கமநல சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 5 வருடங்களில் விவசாயம் சார்ந்த பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றால், கைவிடப்பட்ட நிலையில் இருந்த விவசாயக் காணிகள் தற்போது விவ சாயத்துக்காக பயன்படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் யாழ்.மாவட்டம் சார்ந்த விவ சாயிகளின் முயற்சியால் தான் நடைபெற்றுள்ளன என்று கமநல சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எஸ்.எ.வீரசிங்க.

யாழ். மாவட்டத்தில் பயிர் இழப்பீட்டுக் காப்புறுதிக்கு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கும் நிகழ்வும், விவசாயிகளின் பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வும், விவசாய சம்மேளனங்களின் வருடாந்த ஒன்றுகூடலும் நேற்றுப் புத்தூர் கமநல சேவைகள் திணைக்களத்தில் நடை பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அராலி, அச்சுவேலி, பருத்தித்துறை உள்ளிட்ட பகுதிகளில் விவ சாயிகளது முயற்சிகளால் விவ சாயக் காணிகள் பச்சை வயல் களாக மாற்றப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களில் இருந்து வருகை தரும் விவ சாயிகள் தாங்களும் இது போன்று விவசாய நடவடிக்கை களை மேற்கொள்ள ஆர்வம் கொண்டுள்ளோம் என்று கூறுகின்றனர்.

இந்தமாவட்டம் கல்வியிலும் அபிவிருத்தி பெற்று உயர்வடைந்திருப்பதை அவதானிக்க முடிந்துள்ளது. விவசாயிகளின் பிள்ளைகளின் கற்றல் செயற் பாடுகளை ஊக்குவிக்க புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இன்னும் விவசாயம் சார்ந்த பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் இந்த மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும்"- என்று தெரிவித்தார்.

விவசாயின் மகளுக்கு புலமைப்பரிசில் வழங்கல்

யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விசேட கருத்திட்டல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எஸ். எம்.சந்திரசேன, பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில்கள் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் உட்பட கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

தெரிவு செய்யப்பட்ட 26 விவசாயிகளின் பிள்ளைகளுக்கு மாணவர்களுக்கான 20 ஆயிரம் ரூபா புலமைப்பரிசில், பெரும் போகத்தில் வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட பயிரழிவு கொடுப்பனவாக தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் 10 பேருக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவும் வழங்கப்பட்டன.

(ற-14)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

சிங்கள

ளையே நேற்று அமைச்சர் வழங்கி வைத்தார்.

2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ்.புகையிரத நிலையப் பகுதியில் திடீரென வந்திறங்கிய 150இக்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள், தாம் போருக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வசித்தவர்கள் என்று கூறித் தங்கியிருந்தனர். அதன் பின்னர் அதே ஆண்டு டிசெம்பர் மாதம் நாவற்குழியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் அத்துமீறிக் குடியமர்ந்து கொட்டில்கள் அமைத்துக் கொண்டனர். அதன் பின்னர் அவர்கள் அங்கேயே தங்கியும் விட்டனர்.

அதன் பின்னர் காணியில்லாத தமிழ் மக்களில் ஒரு தொகுதியினர் 2011 ஆம் ஆண்டளவில் சிங்கள மக்கள் குடியிருந்த பகுதிக்கு அருகிலேயே கொட்டில்களைப் போட்டு குடியமர்ந்தனர். தொடர்ச்சியாக 2012 ஆம் ஆண்டளவில் இலங்கை அரசின் ஆதரவுடன், நாவற்குழியில் சிங்கள மக்கள் தமக்கான காணிகளில் நிரந்தர வீடுகள் அமைக்கத் தொடங்கினர். எந்தவொரு காணிக்கும் உரிய உறுதிவழங்கப்படாத நிலையிலேயே தமக்கான நிரந்தர வீடுகளை அத்து மீறி அமைத்தனர்.

ஆனால் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை. அத்துடன் சிங்கள மக்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ், காணி உறுதி இல்லாத நிலையிலும் மின்சாரம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில், நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கு நேற்றைய தினம் காணி உறுதிகளை வழங்கிய அமைச்சர் விமல் வீரவன்ஸ சிங்களக் குடியேற்றத்தை உறுதிப்படுத்தினார்.

குருநகரில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் வைத்தே 3 சிங்கள குடும்பங்களுக்கு காணி உறுதி வழங்கப்பட்டது. அத்துடன் 7 தமிழ்க் குடும்பங்களுக்கும் காணி உறுதி வழங்கப்பட்டது. இதேவேளை குறித்த காணிப் பங்கீடானது தேசிய வீடமைப்பு அதிகார சபையினாலேயே முன்னெடுக்கப்பட்டது. வழமையாக காணிகள் பகிர்ந்தளிக்கும் நடைமுறைகள் எவையும் பின்பற்றப்படாமலேயே, காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியை தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குப் பாரப்படுத்துமாறு பல முறை கோரப்பட்ட போதும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் பாரப்படுத்தவில்லை. காணிக் கச்சேரி எதுவும் நடத்தப்படாமலேயே, தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் குறித்த காணி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. (ற-5)

தமிழ்

போவதில்லை என்பதையே அரசு கூறுகின்றது - இவ்வாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன். கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்ட விவசாயப் பீட திறப்பு விழாவுக்கு அழைப்பு விடுக்கப்படாமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"விவசாய பீடம் கிளிநாச்சியில் உத்தியோக பூர்வமாக நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுக்கு விவசாய அமைப்பு சார்ந்தவர்கள் கலந்து கொள்ளவில்லை. 1990ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த பேராசிரியர் அழகையா துரைராஜாவின் முயற்சியால் விவசாய திணைக்களத்துக்கு சொந்தமான கட்டடத்தில் தற் காலிகமாக இயங்க ஆரம்பித்தது. இன்று சொந்தமான இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகண சபையை சிறுமைப்படுத்துகின்ற நிகழ்சியாகவே கருதுகிறோம். அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அழைப்பிதழ் இல்லை. ஆனால் விவசாயம் சார்ந்த பல்கலைக் கழகம் திறக்கும் போது பங்கேற்பு அதிகாரம் தொடர்பாக பேசப்படும் போது அது அவசியமாகக் கொள்ளப்படுகிறது.

உயர்கல்வி அமைச்சர் முதலமைச்சரை அழைக்க வேண்டாம் என்று வலியுறுத்தியிருந்தமையால் தாம் அவரை அழைக்கவில்லை என்று பீடாதிபதி தெரிவித்திருந்தார். முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்காதபோது அமைச்சு சார்ந்த எம்மால் அந்த நிகழ்வில் கலந்துகொள்ள முடியாது. ஆனால் நல்லெண்ணத்துக்கான சமிக்ஞையாகவே ஜனாதிபதியின் முன்னால் முதலமைச்சர் பதவியேற்பு செய்து கொண்டார். அரசோ வடக்கு மாகாண சபையையும் ஒட்டுமொத்த தமிழர்களையும் உதாசீனப்படுத்தும் செயற்பாடுகளையே தொடர்ந்தும் மேற்கொள்கிறது.

வடக்கு மாகாண சபையுடனும், தமிழ் மக்களுடனும் நெருக்கமாக இருக்கின்றோம் என்று அரசு உலகுக்கு காட்டுகிறது. மறுகையால் எங்களது கழுத்தை நெரிப்பதாகவே கருதுகிறோம். மாகண சபைக்கான அதிகாரம் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது. அதனால், அதிகாரத்தை கொடுத்திருப்பதாகக் காட்டுவதற்கு அரசு இத்தகைய செயல்களை செய்கிறது.

அதே போன்றே நேற்று கமநலசேவைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட நிகழ்வுக்கு பிரதி விவசாயப் பணிப்பாளரோ, மாகாண பணிப்பாளரோ அழைக்கப்பட வில்லை. இவையெல்லாம் எங்களது அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளதையே எடுத்துக் காட்டுகிறது.

இராணுவம் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள எங்களது நிலங்களில் இருந்து முற்றாக வெளியேற வேண்டும். விவசாய நிலங்களிலும் மக்களது சொந்தக் காணிகளிலும் ஆக்கரமிப்பு செய்து, அத்துமீறி இருந்துகொண்டு விடுதலைப் புலிகளும் அவ்வாறுதான் செய்தார்கள், இருந்தார்கள் என்று கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு போராட்ட அமைப்பை இராணுவத்துக்கு ஒப்பாகக் கருதுவது அவர்களது மடைமைத்தனம்."- என்று தெரிவித்தார். (ற-14)

வடக்கில்

கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்போர் தாக்கப்படுவது, குறித்து நாம் தொடர்ந்தும் கவலை கொண்டுள்ளோம்.

இலங்கையில் போரின் போது இருதரப்பினாலும் இழைக்கப்பட்ட மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கான, தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர், அதனை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்துலகப் பங்காளர்களுடன் இணைந்து செயற்படுகிறோம். இலங்கையில் அமைதி, நல்லிணக்கத்தை ஏற்படுத்த, பொறுப்புக்கூறல், மனித உரிமைகள், நல்லிணக்கம் என்பன முக்கியமானவை என்று நாம் நம்புகிறோம்.

இந்த முன்னேற்றத்தின் மூலம், இலங்கையை ஒரு வளமான - வலுவான நாடாக கட்டியெழுப்ப முடியும்"- என்று அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

அநுராதபுரத்தி

பொருளாதார அமைச்சின் கீழ் 25 மாவட்டங்களிலும் 558 கமநல சேவை நிலையங்கள் உள்ளன. அனைத்து மாவட்டங்களுக்கும் ஒருமித்த சேவையே வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் விவசாயத்துக்கு நீர் பற்றாக்குறை காணப்படுவது தொடர்பில் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 4 ஆண்டுகளுக்குள் அனுராதபுரத்தில் இருந்து இரணைமடுவுக்கு குழாய் மூலமாக நீரைக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கிருந்து நீர் யாழ்ப்பாணத்துக்கும் கொண்டு வரப்படும். முன்னைய அரசு போன்று அல்லாது உறுதி மொழிகளை நாங்கள் வழங்க வில்லை. ஆனால் செய்து கொண்டிருக்கிறோம். இரணைமடுவுக்கு தண்ணீர் கொண்டு வருவோம் என்பதும் அவ்வாறனதொரு செயற்பாடே"- என்று அவர் மேலும் அங்கு தெரிவித்தார். (ற-14)

சாட்சியமளிப்போர்

துள்ளார் அதன் பேச்சாளர் ருபேட் கொல்வி.

இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் இடம் பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் 12 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் விசாரணைகளை அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளனர். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் அமர்வில் முதற்கட்ட விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்படும். அடுத்த வருடம் மார்ச் மாதம் இடம் பெறும் அமர்வில் முழுமையான இறுதி அறிக்கை ஐ.நா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படும்.

அதன் பின்னர் குறித்த அறிக்கையை ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு அனுப்புவது தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் சபையே முடிவு செய்யும்.

இதேவேளை கடந்த 5 ஆம் திகதி இலங்கை அரசுக்கு, ஐநா மனிதஉரிமைகள்ஆணையாளர் நவநீதம்பிள்ளை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், சர்வதேச விசாரணையின் போது சாட்சியமளிப்பவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சாட்சிகள் மற்றும் சாட்சியமளிக்க முன்வருவோரின் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு தேவையான சகல நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

ஐ.நாவில்

இலங்கை அரசு ஒத்துழைக்காதுவிடினும், நம்பகமான பரீட்சிக்கப்பட்ட முறைகளின் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்திருக்கும் நிலையிலேயே, அரசு இவ்வாறான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, "இலங்கை அரசுக்கு எதிராக போர்க்குற்றச் சாட்சியங்களை அளிப்பவர்களுக்கு எதிராக, எதிரிகளுக்கு தகவல்களைக் கொடுப்பவர்கள் என்ற அடிப்படையில் அரசால் பொருத்தமான நடவடிக்கைக் எடுக்கப்படும்"- என்று தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் சிலோன் ருடே ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இது மிகவும் மோசமான நிலைமை. நாம் இதனை உன்னிப்பாகக் கண்காணிப்போம். எதிரிகளுக்குத் தகவல் கொடுத்தது என்ற அடிப்படையில், அவர்கள் மீது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். உலகின் வேறேந்த நாடும் செய்திராத வகையில், உலகின் மிகமோசமான இயக்கத்தை, தோற்கடித்த இலங்கைக்கு எதிராக, வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் உள்ள புலம்பெயர் தமிழர்களும் ஏனையோரும் பரப்புரை செய்து வருகின்றனர் என்பதை நாம் அறிவோம். இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நம்பகமற்றவை. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை கூடத் தவறானது - பக்கசார்பானது"- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-5)

கடலில்

திருநெல்வேலி பகுதியைச் சோந்த குறித்த இளைஞர் தனது நண்பனான றிக்ஸனின் மாமியாரின் மரணச் சடங்குக்காக வடலியடைப்பிற்கு சென்றுள்ளார். மரணச் சடங்கின் சடலத்தினை சம்பில் துறை பகுதியில் உள்ள மயானத்தில் எரித்து விட்டு இரு இளைஞர்களும், ஏனையோரும் கடலில் குளித்துள்ளனர். அதன்போதே, இரு இளைஞர்களும் கடலில் மூழ்கியுள்ளார்கள். அருகில் குளித்துக் கொண்டிருந்த ஏனையோர் இவர்கள் இருவரையும் காணவில்லை என்று கடலில் தேடியபோது கேதீஸ்வரன் றிக்ஸன் உயிருடன் மீட்கப்பட்டார். ஆயினும் லட்சன் மாதகல் கடற்படையினரின் உதவியுடன் சடலமாக மீட்கப்பட்டார். குறித்த இளைஞனின் உடல் தற்போது சங்கானை வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ற-106)

வென்றது இத்தாலி

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பிரிவு-டி போட்டியில் இத் தாலி அணி இங்கிலாந்து அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

இத்தாலி வீரர்கள் கிளாடியோ மார்சீசியோ மற்றும் மரியோ பாலோ டெல்லி ஆகியோர் கோல்களை அடிக்க இங்கிலாந்து தரப்பில் டேனி யல் ஸ்டர்ரிட்ஜ் ஒரு கோலை அடித்தார்.

ஆட்டத்தின் 35ஆவது நிமிடத்தில் இத்தாலி வீரர் கிளாடியோ மார்சீசி ஒரு வேகமான அடியை அடிக்க தாழ்வாக அந்த முதல் கோல் விழுந்தது. ஆனால் அடுத்த 2 நிமிடங்களில் இங்கிலாந்தின் ரகீம் ஸ்டெர்லிங் மற்றும் வெய்ன் ரூனி ஒரு அருமையான நகர்வைச் செய்து இத்தாலிய கோல் எல்லைக்குள் பந்தை கொண்டு வந்து ரூனி அருமையான ஒரு பரிமாற்றத்தைச் செய்ய அதனை டேனியல் ஸ்டார்ரிட்ஜ் கோலாக மாற்றினார்.

பிறகு இடைவேளைக்குப் பிறகு 5 நிமிடங்கள் கழித்து இத்தாலி வீரர் அன்டோனியோ கான்ட்ரீவா அடித்த ஒரு இலகுவான பரிமாற்றத்தை பாலோடெல்லி தலையால் முட்டி கோலாக மாற்றினார்.

இந்தத் தோல்வியை அடுத்து உருகுவே அணியை வெற்றி பெற் றேயாக வேண்டிய நிலையில் இங்கிலாந்து ஜூன் 19ஆம் திகதி கள மிறங்க நேரிடும். உருகுவேயை கோஸ்டா ரிக்கா 3:1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியுறச் செய்ததால், அடுத்த ஆட்டத்தில் இரு அணிகளில் ஒன்று வெற்றி பெற்றேயாகவேண்டும், சமனிலை ஆனால் கூட அடுத்த சுற்றுக்கு முன்னேற இதே பிரிவில் மற்ற அணி களின் ஆட்டத்தைப் பொறுத்தே இந்த அணிகளின் விதி நிர்ணயிக் கப்படும்.

இந்த ஆட்டத்தில் மொத்தம் 9 மூலை உதைகள் இங்கிலாந்துக்கு கிடைத்தது. அதனை கோல்களாக மாற்ற முடியவில்லை. ஆனால் இத் தாலி இங்கிலாந்தின் 7 கோல் முயற்சிகளைத் தடுத்தது. இத்தாலியும் அதிக கோல்களை அடித்திருக்கும். ஆனால் 7 முறை 'ஒப் சைட்' என்று அந்த அணி அத்துமீறியது. இங்கிலாந்து தரப்பில் அத்துமீறல் இல்லை.

மொத்தம் 18 உதைகளை இங்கிலாந்து அடித்தது. இலக்கை நோக்கி 8 உதைகளை அடித்தது. ஆனால் இத்தாலியின் தடுப்பு அரண் இங்கிலாந்தை எழும்ப விடாமல் செய்தது.

இத்தாலி அணி இங்கிலாந்தின் பலவீனத்தை பயன்படுத்தும் விதமாக வலது புறத்தில் நெருக்கடி கொடுத்தது. இதனால் இடைவேளைக்கு முன்பே இங்கிலாந்து வீரர்கள் களைப்படைந்து விட்டனர். ஒரு கோல் அடித்தாலும் இத்தாலி வலது புறமாக தாக்குதல் தொடுப்பதை வெய்ன் ரூனியால் கூட ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தது. இத்தாலி அடித்த 2ஆவது கோல் கூட வலது புறத் தாக்க்குதலால் விளைந்ததே.

ஆட்டத்தின் 63ஆவது நிமிடத்தில் ரூனி ஒரு முயற்சி செய்தார். அதுவும் கை கூடவில்லை. நேரத்தை ஈடுகட்டும் கடைசி நிமிட ஆட்டத்தில் இத்தாலி வீரர் ஆண்ட்ரியே பிர்லோ அடித்த '30 யார்ட் ஃப்ரீ கிக்' கோலாக மாறியிருக்கும். ஆனால் அது கோல் கம்பத்தில் பட்டுச் சென் றது.

இங்கிலாந்தை தொடர்ந்து வலது புறத்திலிருந்து சிக்கலுக்கு உள் ளாக்கிய இத்தாலி வீரர் ஆண்டனியோ காண்ட்ரிவா ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். (ற)

அழகிகளின் அதிரடி சலுகை

பிரேஸில் உதைபந்துப் போட்டிகளை காண வரும் ரசிகர்களுக்காக அங்குள்ள சிவப்பு விளக்கு பகுதிகளில் உள்ள பெண்கள் அதிரடி சலுகைகளை வழங்கியுள்ளனராம்

32 நாடுகளின் அணிகள் மோதும் இந்தப் போட்டிகளை காண பல்வேறு பகுதிகளில் இருந்தும் ரசிகர்கள் வருகின்றனர். இந்த நிலையில் உதைபந்தாட்டத்தைப் பார்க்க வரும் ரசிகர்களுக்கு பிரேசிலின் ரியோடி ஜெனிரோ நகரில் உள்ள விலா மிமோஸா நகரில் இருக்கும் சிவப்பு விளக்கு பகுதியைச் சேர்ந்த 4,000 பெண்கள் அதிரடி சலுகைகளை வழங்க தயாராகிவிட்டனர்.

பிரேஸிலில் உள்ள பிரபலமான மராகான்னா மைதானம் மற்றும் கோபகபானா கடற்கரையில் இருந்து 6 மைல் தொலைவில் தான் நாட்டிலேயே மிகப்பெரிய அளவில் விபச்சாரம் நடக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



நடால் அதிர்ச்சி தோல்வி

புல் தரையில் நடைபெறும் கிராண்ட்ஸ்லாம் ரென் னிஸ் தொடரான விம்பிள்டனுக்கு, ஒத்திகை பார்க் கும் வகையில் நடைபெற்று வரும் ஹாலே ஓபன் தொடரில், ஸ்பெயினின் ரஃபேல் நடால் 2ஆவது சுற்றில் தோல்வி அடைந்தார்.

ஜேர்மனியில் ஹாலே வெஸ்ட்ஃபேலன் நகரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற 2ஆம் சுற்று ஆட்டத்தில் ஜேர்மனியைச் சேர்ந்த டஸ்டின் பிரெ னுடன் நடால் மோதினார். களிமண்ணில் நடை பெற்ற பிரெஞ்சு ஓபன் தொடரில் பட்டம் வென்ற நடா லுக்கு, புல்தரை சாதகமான சூழலை ஏற்படுத்த வில்லை. அதனால் 6:4, 6:1 என்ற நேர் செற்களில் தோல்வி அடைந்தார்.

தோல்வி குறித்து நடால் கூறுகையில்,

"ஆட்டம் குறித்து என்ன கூறுவது என்று தெரிய வில்லை. விம்பிள்டனுக்கு தயார் செய்யும் வகையில் இந்த ஆட்டம் தரமானது இல்லை. தற்போது ஸ்பெ யின் திரும்ப உள்ளேன். அங்கு ஆட்டத்தில் கலந்து கொள்வேனா என்று உறுதியாகக் கூற முடியாது. ஏனெனில், விம்பிள்டனுக்கு முன் போட்டிக்கு ஓய்வு தேவைப்படுகிறது' என்று தெரிவித்தார். (ற)

பிரேஸில் அணியின் வெற்றிக்கு முக்கியமான காரணம் ரசிகர்கள் கொடுத்த உற்சாகம். பந்தை உதைக்கத் தொடங்கிய நிமிடத்தில் இருந்து கடைசி நிமிடம் வரை ஆரவாரம் குறையவில்லை. மைதா னத்தில் எங்கு பார்த்தாலும் மஞ்சள் (பிரேசில் சீருடை) நிறம். வீரர் களை உற்சாகப்படுத்திய ரசிகர்களுக்கு பயிற்சியாளர் ஸ்காலரி நன்றி தெரிவிக்கத் தவறவில்லை. அவர் கூறுகையில் முதலில், மைதானத்தில் இருக்கும் அனைத்து ரசிகர்களுக்கும் நன்றி தெரி வித்துக் கொள்கிறோம். நாங்கள் கற்பனை செய்ததை விட அதிக உற்சாகம் அளித்தீர்கள்' என்று கூறியுள்ளார்.

ஐவரிகோஸ்ட்டிடம் ஜப்பான் படுதோல்வி

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடை பெற்ற போட்டியில் ஐவரிகோஸ்ட் - ஜப்பான் (சி' பிரிவு) மோதின. 16ஆவது நிமிடத்தில் ஜப்பான் வீரர் ஹோண்டா முதல் கோல் அடித்தார். அதன்பின் 64ஆவது நிமிடத்தில் ஐவரிகோஸ்ட் அணி பதில் கோல் அடித்தது. வில்பிரைட் கோல் அடித்தார். அடுத்து 66ஆவது நிமிடத்தில் ஐவரிகோஸ்ட் வீரர் ஜர்வின்ஹோ 2ஆவது கோலை அடித்தார்.

கடைசி வரை ஜப்பான் அணியால் மேலும் கோல் அடிக்க முடியவில்லை.

முடிவில் ஐவரி கோஸ்ட் 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (த)

பணிப்பெண் தேவை

வீட்டு வேலை செய்வதற்கும், குழந்தையைப் பராமரிப்பதற்கும் பணிப்பெண் தேவை.

தொ.பே: 021 791 2997



பலம் கொண்ட உருகுவே அணிக்கு கோஸ்டாரிக்கா அதிர்ச்சி வைத்தியம்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் முதல் அதிர்ச்சித் தோல்வி ஏற்பட்டுள்ளது. பலமான உருகுவே அணியை கோஸ்டாரிக்கா அணி 3-1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சியளிக்கும் விதத்தில் வீழ்த்தியது. உருகுவே அணியின் மிக முக்கிய வீரர் லூயிஸ் சுவாரேஸ் விளையாடாதது இந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் மிகப்பெரிய அதிர்ச்சித் தோல்வி நிகழ்ந்தது.

உருகுவேயே முதலில் 1 கோல் அடித்து முன்னிலை வகித்தது. ஆனால் இடைவேளைக்குப் பிறகு 10 நிமிடங்களில் ஆட்டம் அப்படியே தலைகீழாக மாறியது. உருகுவே அணிக்கு எடின்சன் கவானி முதல் கோலை அடித்தார். ஆனால் கோஸ்டாரிக்கா திடீர் விஸ்வரூபம் கண்டு 3 நிமிடங்களில் 2 கோல்களை அடிக்க உருகுவே அதிர்ச்சியடைந்தது. ஜோயேல் கேம்பெல் மற்றும் ஒஸ்கார் டுவார்ட் ஆகியோர் இந்த அதிர்ச்சிக் கோல்களை அடித்தனர்.

பிறகு 3ஆவது கோலை பதில் வீரர் மார்கோஸ் யுரீனா அடித்தார். மேலும் இந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தில் முதல் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்ட அதிர்ச்சியும் இந்த ஆட்டத்தில் நடந்தது. உருகுவே வீரர் மாக்ஸி பெரெய்ரா சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். நல்ல வேளையாக அது கடைசி நிமிடங்களில் நிகழ்ந்ததால் உருகுவே ஓரளவுக்குப் பிழைத்தது.

ஆட்டத்தில் மோதல் போக்கும் இருந்தது. 22ஆவது நிமிடத்தில் உருகுவே அணித் தலைவர் டீகோ லுகானோவை கோஸ்டாரிக்கா வீரர் ஜூனியர் டயஸ் பிடித்துக் கீழே தள்ள பெனால்டி உதை உருகுவே சார்பாக வழங்கப்பட 24அவது நிமிடத்தில் அதனை எடின்சன் கவானி கோல் அடித்தார். உருகுவே 1-0 என்று முன்னிலை வகித்தது.

54ஆவது நிமிடத்திலிருந்து கோஸ்டாரிக்கா ஆதிக்கம் தொடங்கியது. முதலில் கிறிஸ்டியன் காம்போவா பந்தை அருமையாக கடந்து கொண்டு வந்து அடிக்க அதனை கேம்பெல் கோலாக மாற்றினார். ஆட்டம்1:1 என்று சமன் ஆனது. 3 நிமிடங்கள் கழித்து மற்றொரு தாக்குதலில் டுவார்ட்டே அருமையாக தலையால் முட்டி 2ஆவது கோலை அடித்து கோஸ்டாரிக் காவுக்கு முன்னிலை கொடுத்தார். பிறகு உருகுவே ஆட்டம் சொதப்பலாக மாற 84ஆவது நிமிடத்தில் பதில் வீரர் மார்கோ யுரீனா 3ஆவது கோலை அடிக்க உருகுவே அதிர்ச்சித் தோல்வி தழுவியது. (த)

வீடு வாடகைக்கு

பிரதான வீதி சங்கானையில் வீடு வாடகைக்கு உண்டு. அரச ஊழியர் குடும்பம் விரும்பத்தக்கது.

(49077) (10.6.3)

தொடர்பு: 077 623 7037

மரண அறிவித்தல்

சதாசிவம் அரியநாயகம்



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கை வதிவிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய சதாசிவம் அரியநாயகம் 09.06.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சிவக் கொழுந்து-சொரூபராணி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், தட்ஷாயணியின் அன்புத் தந்தையும், சிவனொளி பவனின் அன்பு மாமனாரும், அருந்ததி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோபிதன், நேகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2014) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குருந்தடிப்பிள்ளையார் கோயிலடி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (7.6.3)

(49076)

தகவல் : குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

கந்தசாமி வவிகரன்

கீரிமலை வீதி, சித்தங்கேணியைச் சேர்ந்த கந்தசாமி வவிகரன் 15.06.2014 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் வசந்தா தம்பதியரின் அன்பு மகனும் மதிவாணியின் அன்புக்கணவரும் டனிஸ்ரன், தர்சிகா, ஸ்ரீராம் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு.திருமதி. தங்கராஜா (கண்ணன் சவுண்ட்) வின் அன்பு மருமகனும் ஸ்ரீ கருணாகரன் (பவா), மஞ்சுளா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.06.2014) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கீரிமலை வீதி, சித்தங்கேணி.

(C/14789)

தகவல்; குடும்பத்தினர்.

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தான அன்னதான அறிவித்தல்

நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் **2014.06.18**ஆம் திகதி மஹோற்சவம் ஆரம்பிக்க உள்ளது.

மஹோற்சவ காலத்தில் நடைபெறும் அன்னதான நிகழ்வுகள் வழமைபோல நீதிமன்ற பெறுநர் கண்காணிப்பின் கீழ் தொண்டர் சபையினாலேயே மேற்கொள்ளப்படும் என்பதை **உபயகாரர்கள், அடியார்கள் அனைவருக்கும்** அறியத் தருகிறேன்.

அன்னதானம் செய்ய விரும்புபவர்கள், பொருள்கள் வழங்க விரும்புபவர்கள் ஆலய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பெறுநர்/பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

(49078) (6.3)

இறுதி யாத்திரை

திருமதி **தவநிதி மாசிலாமணி**

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிட மாகவும் தாவடி வடக்கை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி தவநிதி மாசிலாமணி இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் தாவடியூர் கலாபூஷணம் முத்தையா மாசிலாமணியின் (ஓய்வு நிலை காணி உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் காலம்சென்ற திரு கோ.செல்லையா- தங்கம்மா தம்பதியரின் ஏக புத்திரியும் மற்றும் காலஞ்சென்ற செ.சிவகுணநாதன் மற்றும் செ.சற்குணநாதன் (USA), DR - செ.ஜெகநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தங்கையும் மற்றும் இரகுபரன் (கணனி பொறியியலாளர் கனடா), இராகுலன் (பட்டயக் கணக்காளர் கனடா), திருமதி பானு துஷ்யந்தன் (லண்டன்) (முன்னாள் உதவி விரிவுரையாளர், விவசாயபீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு அன்னையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (17.06.2014) செவ்வாய் அன்று மு.ப. 10 மணியளவில் வன்னியசிங்கம் வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும் என்பதை அன்புடன் அறியத் தருகிறோம்.

தொ.பே.இல - 021 321 4095

கணவர் - பிள்ளைகள்

45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்		மறைவு
05		03
04		05
1951		2014

நடராசா சண்முகநாதன்

கடந்த 03.05.2014 சிவபதமடைந்த எமது தந்தை அமரர் நடராசா சண்முகநாதன் அவர்களின் அந்தியேட்டி (16.06.2014) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(103)39, இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

அராலி விளையாட்டுக் கழகம் உதைபந்தில் சம்பியனானது

வலி.வடக்கு, ஜூன் 16

உலகக் கிண்ண உதை பந்துத் தொடரை முன்னிட்டு வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கால் நடத்தப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக் கான பதினொரு பேர் பங்கு பற்றும் உதைப்பந்தாட்டத் தொடரில் அராலி விளையாட் டுக்கழக அணி சம்பியனாகத் தெரிவானது.

இளவாலை புனித ஹென்றியர சர் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம்சனிக்கிழமை இரவுநடைபெற்ற இறுதியாட்டத் தில்அராலி விளையாட்டுக்கழக அணியும் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியும்மோதின. இரு அணிகளும்பலம்மிக்க அணி களாகக் காணப்பட்ட போதி

அராலி விளையாட்டுக்கழக வீரர்கள்

லும் முதல் பாதி ஆட்டத்தில் மைதானத்தின் கட்டுப்பாடு அராலி விளையாட்டுக் கழ கத்தின் பக்கமே காணப்பட் டது.

இரண்டு கோல்களை அராலி விளையாட்டு அணியைச் சேர்ந்த கே.ரவி மற்றும் எஸ்.ஜெயக்குமார் பெற்றுக் கொடுத்த நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் உத் வேகத்துடன் களமிறங்கி மோதிக்கொண்ட நிலையில் தண்டனை உதை ஒன்று கிடைக்கப் பெற்றது. இதனை உரிய முறையில் உதைத்து கே.தனேஸ்வரன் ஒருகோலை பெற்றுக் கொண்ட நிலையில் விளையாட்டு மிகவும் உற் சாகமாகக் காணப்பட்டது.

இந்தநிலையில் மீண்டும் ஒரு கோலை தனேஸ்வரன் தனது அணிக்காகப் பெற்று போட்டியை சம நிலைப்படுத் திய நிலையைத் தொடர்ந்து போட்டி மிகவும் விறு விறுப் பானது.

போட்டி முடிவடைய ஒரு சில நிமிடங்கள் இருக்கையில் அராலி விளையாட்டுக் கழ கத்துக்கு ஒரு மூலை உதை கிடைக்க அதனை என். சுதாசன் கோலாக்கிக் கொண் டார்.போட்டி நிறைவில் அராலி விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் யங் ஹென்றிஸ் விளை யாட்டுக் கழகத்தைவெற்றி பெற்றுச் சம்பி யனாகத் தெரிவானது. (ற-86)

போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம். ஜூன்16

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ரொப் பாஸ் நிறுவனத்தின் அனுச ரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழ கம் மற்றும்மகாத்மா சனசமூக நிலையம் ஆகியவை இணைந்து நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொட ரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத் தில் இடம் பெற்று வருகின்றன. அவற்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஆட் டங்களில் வெற்றி பெற்ற அணி களின் விவரங்கள் வருமாறு:

முதலாவது ஆட்டத்தில் யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதய சூரியன் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதியது.

அதில்உதயசூரியன்விளையாட் டுக் கழக 'பி' அணி 2:1 என்ற கோல்கணக்கில்வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து தெல்லிப் பழை நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோல்லப் பெற்று ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. அதையடுத்து வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப் பட்டன.

அதில் தெல்லிப்பிழை நாமகள் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட் டுக்கழக 'பி' அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி விளையாட் டுக் கழக 'பி' அணி மோதிக் கொண்டது.

அதில் நாவாந்துறை சென் .நீக்கிலஸ் விளையாட்டுக்கழக 'பி' அணி 2:1என்றகோல்கணக் கில் வெற்றி பெற்றது. (ற-23)

மாவட்டங்களுக்கிடையிலான எல்லே

யாழ்ப்பாணமும், வவுனியாவும் வெற்றிக் கிண்ணம் சுவீகரித்தன

தனது இரண்டாவது இன்னிங் ஸுக்காக துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி 4 ஓட்டங்களைப் பெற்றது. ஆட்டத்தின் முடிவில் வவு னியா மாவட்ட அணி 6:5 என்ற ஓட் டங்களைப் பெற்று சம்பியன் ஆனது.

யாழ்ப்பாணம், ஜூன்16

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம்நடத்தும்மாவட் டங்களுக்கு இடையிலான ஆண் - பெண் இருபாலாருக்கு மான எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட அணி யும், பெண்கள் பிரிவில் வவு னியா மாவட்ட அணியும் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம்பெற்ற இறுதி யாட்டங்களில் ஆண்களுக் கான இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது.

தனது முதலாவது இன்னிங் ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட அணி 8ஓட்டங் களைப் பெற்றது.

அதன்பின் தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத் தாடிய முல்லைத்தீவு மாவட்ட அணி 6ஓட்டங்களைப் பெற் றது.

தனது இரண்டாவது இன்னிங் ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு மாவட்ட அணி 2 ஓட்டங்களைப் பெற்றது.

அதையடுத்து இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத் தாடிய யாழ்.மாவட்ட அணி ஒரு ஓட்டத்தைப் பெற்றது.

ஆட்டத்தின் முடிவில் யாழ். மாவட்ட அணி 9:8 என்ற ஓட்டங்களைப் பெற்று சம்பி யன் ஆனது.

பெண்களுக்கான இறுதியாட் டத்தில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத் தீவு மாவட்ட அணி மோதிக் கொண்டது.

தனது முதலாவது இன்னிங் ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு மாவட்டஅணி 4 ஓட்டங்களைப் பெற்றது.

தனது முதலாவது இன்னிங் ஸுக்காக துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணி 2 ஓட்டங்களைப் பெற்றது.

தனது இரண்டாவது இன்னிங் ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு மாவட்ட அணி ஒரு ஓட்டத்தைப் பெற்றது.

தனது இரண்டாவது இன் னிங்ஸுக்காகத் துடுப்பெடுத் தாடிய வவுனியா மாவட்ட அணி 4 ஓட்டங்களைப் பெற் றது.

ஆட்டத்தின் முடிவில் வவு னியா மாவட்ட அணி 6:5 என்ற ஓட்டங்களைப் பெற்றுச் சம்பியன் ஆனது. (ற-23)

இன்றைய ஆட்டம்

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொற்பதி விளை யாட்டுக் கழகம் நடத்தும் சிவகுருநாதர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கொக்கு வில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்றுதிங்கட்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறும்ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரி யாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் றெட் றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ரொப்பாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகம், மகாத்மா சனசமூக நிலையம் ஆகி யவை இணைந்து யாழ். மாவட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட் டித் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இன்று திங்கட்கிழமை மாலை 6மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காளியாம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 6.30மணிக்கு இடம்பெறும்ஆட்டத்தில்செனிஸ்ரா விளை யாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து ஞானமுருகன் விளை யாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 7மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து ஈவினை கலைமகள் விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற் கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்க இடம் பெறும் ஆட்டத்தில் சென்.சேவியர் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் யாழ்.மாவட்டத் தில் முதன்முறையாக லீக் முறையில் நடத்தப்படும் இளை யோருக்கான கூடைப்பந்தாட்டத் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:- யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் மாலை 4 மணிக்கு இடம்பெறும் 15வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

மாலை 5மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை சிவப்பு அணியை எதிர்த்து யாழ்ப்பாணக்கல்லூரி அணி மோதவுள்ளது. 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவையொட்டி வடமாகாண ரீதியாக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன. பி.ப 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி ஏ.ஏல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.ஐக் கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

யாழ்.பல்கலை மகளிர் கரப்பந்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங் களுக்கு இடையில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட் டித் தொடரின் பெண்களுக் கான இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் சனிக் கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இட பெற்ற இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

3 செற்களைக்கொண்ட இறுதி யாட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம் பியன் ஆனது. (ற-23)



காதலனால் காயப்பட்டுவிட்டேன்

குமுறுகிறார் ப்ரீத்தி

பஞ்சாப் அணியின் உரிமையாளரும், பிரபல இந்தி நடிகையுமான ப்ரீத்தி ஜிந்தாவிற்கு பல்வேறு பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

ஐ.பி.எல். ஆட்டங்களில் பஞ்சாப் அணியின் தொடர் வெற்றியில் உற்சாகமாக இருந்தார் ப்ரீத்தி. ஆனால் இறுதிப் போட்டியில் கொல்கத்தா அணி கிண்ணத்தை கைப்பற்றி அவரின் கனவை கலைத்தது.

இது பற்றி அவர் கூறுகையில்,

"ஐ.பி.எல் கிண்ணத்தை வென்றிருந்தால் அதனை அணைத்துக் கொண்டு தூங்கியிருப்பேன். ஆனால் எனது கனவு கோட்டையை கொல்கத்தா அணி தகர்த்துவிட்டது.

மேலும் பஞ்சாப் அணியின் உரிமையாளராகவும், என் மனம் கவர்ந்த காதலராகவும் இருந்த நிஸ் வாடியாவின் சில நடவடிக்கைகள் என்னை காயப்படுத்தியதால் அவருடனான 5 வருட உறவினை முறித்துக் கொள்ள வேண்டியதாகி விட்டது.

ஆனால் அந்த தனிப்பட்ட பிரிவு எங்களுக்குள் தொழில் முறை உறவில் கசப்பை ஏற்படுத்தவில்லை" என்று கூறியுள்ளார்.

கிறீஸை வென்றது கொலம்பியா

உலக கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் போட்டியில் கிறீஸ் அணியை கொலம்பியா 3:0 கோல்கள் விகிதத்தில் வென்றுள்ளது.

குழு சி இலுள்ள இவ்விரு அணிகளுக்கிடையிலான இப்போட்டி பெலோ ஹொரிசென்டே நகரில் நடைபெற்றது. போட்டி ஆரம்பித்து 5 ஆவது நிமிடத்தில் கொலம்பிய வீரர் பப்லோ ஆர்மெரோ முதல் கோலை அடித்தார்.

58 ஆவது நிமிடத்தில் கொலம்பியாவின் இரண்டாவது கோலை டெபோலியோ புகுத்தினார். 90 ஆவது நிமிடத்தில் ஜேம்ஸ் ரொட்ரிகஸ் கொலம்பியாவின் மூன்றாவது கோலை அடித்தார். இதனால் கிறீஸ் அணியை கொலம்பியா 3:0 கோல்கள் விகிதத்தில் வென்றது. (த)

பெண்களை கலக்கும் மெஸ்ஸி

ஆர்ஜென்டினாவின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி இந்திய பெண்களிடையே ஹீரோவாக விளங்குவதாக புதிய கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

உலகமே கொண்டாடி வரும் உலகக்கிண்ண உதைபந்துப் போட்டிகள் பிரேஸிலில் நடந்து வருகின்றது. 32 அணிகளும் தங்களின் சிறப்பான ஆட்டத்தை காட்டதயாராகி விட்டனர். இந்நிலையில் 2014 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தில் மிகவும் பிரபலமான கால்பந்து வீரர் யாரென்று 4,000 பெண்களிடம் சமீபத்தில் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் இந்தியாவில் 59.6 சதவிகித பெண்கள் மெஸ்ஸிக்கு வாக்களித்துள்ளனர். இதற்கு அடுத்தபடியாக போர்த்துக்கல் நாட்டின் கிறிஸ்டினோ ரோனல்டோவுக்கு 53.3 சதவிகித பெண்கள் வாக்களித்துள்ளனர். மூன்றாவதாக 51.5 சதவிகித பெண்கள் இங்கிலாந்து அணியின் வேண்ருணியை தேர்ந்தெடுத்துள்ளனர். (ற)

உதயன் பிளம்பர் தொடர்புகளுக்கு 021 567 111

மரண அறிவித்தல்

சிறீஸ்கந்தராஜா கஜன் (கிருபைராஜ்)

அளவெட்டி கணேஸ்வரம் கருகப்புலத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிறீஸ்கந்தராஜா கஜன் (கிருபைராஜ்) நேற்று முன்தினம் (14/06/2014) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா. மற்றும் ஜெகதேவி தம்பதியரின் சிரேஷ்ட மகனும் ந.தம்பிமுத்தன் (சட்டத்தரணி)- சகுந்தலாதேவி தம்பதியரின் பெறாமகனும், ஆன் ஜொனி இன் அன்புக்கணவரும், மேதாத் கிறிஸ் இன் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சத்தியசீலன் மற்றும் செல்வராணி தம்பதியரின் மருமகனும், கீதன் மலரவன் (குட்டி), இந்துகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், இளையவி- சின்னவியின் பேரனும், டல்ரின் கிரியான்சி, செறோன், டிவோன்கா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16/06/2014) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மேற்கு அமெரிக்கன் சிலோன் மிஷன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேஸ்வரம்,
அளவெட்டி
0772219392, 0212059649
0774564656

(C/14789)

தகவல்:
குடும்பத்தினர்

சிறி நதியா டிஜிட்டல் கலர் லாப்பில்
பதவி வெற்றிடம்

போட்டோ சொப் டிசைனர்
(Photo Shop Disigner)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

18.06.2014
அன்று
10.00 A.M 1.00 P.M
நேரில்
வரவும்

சிறி நதியா நகைமாளிகை
இல.56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல- 021 222 6744

உடனடி வேலைவாய்ப்பு

பணிநிலை வெற்றிடம்

Kord Machine Helpers (உதவியாளர்கள்)
Screen Print அனுபவமுள்ளவர்கள்
தமிழ், ஆங்கில தட்டச்சில் நன்கு தேர்ச்சிபெற்றவர்கள்

நேர்முகத்தேர்வு :
17.06.2014 செவ்வாய்க்கிழமை
மு.ப 10.00 மணி - பி.ப 01.00 மணி வரை

ANDRA PRINTERS
356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0776622981, 021 221 7279

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.